விலை : 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

வலம்புரி

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk
Valampurii

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 புரட்டாதி 18 வியாழக்கிழமை (04.10.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 289

கைதிகளின் விடுதலை தொடர்பில்;

நம்பியிருந்த எம்மை

சுமந்திரன் ஏமாற்றி விட்டார்

சட்டமா அதிபரின் மொழிபெயர்ப்பாளராக செயற்படுவதாக அரசியல் கைதிகள் குற்றச்சாட்டு

(அநுராதபுரம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் சட்டமா அதிபரின் மொழி பெயர்ப்பாளரைப் போன்று கைதிகள் விடயத்தில் செயற்பட்டுள்ளார் என தெரிவித்துள்ள தமிழ் அரசியல் கைதிகள், நம்பியிருந்த எம்மை ஏமாற்றிவிட்டார் எனவும் குற்றஞ்சாட்டியுள்ளனர். (23ஆம் பக்கம் பார்க்க)

புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் நாளை வெளியீடு

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த 2018ஆம் ஆண்டுக்கான 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் நாளை வெள்ளிக்கிழமை வெளியிடப்பட வுள்ளது. பரீட்சைகள் திணைக் களம் இதனைத் தெரிவித்துள் ளது. 23

கேப்பாப்பிலவில் குண்டுவெடிப்பு ஒருவர் படுகாயம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு கேப்பாப்பிலவுக் குடியிருப்பு பகுதியில் உழவு இயந் திரத்தில் உழவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது வெடிபொருள் வெடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்துள்ளார். 23

முல்லைத்தீவு குமுழமுனை குருந்தூர் மலைகளுக்கு

வீரவன்ச கட்சியினர் திடீர் வருகை

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு, குமுழமுனை குருந்தூர் மலையையும், நெடுங் கேணி வெடுக்குநாறி மலையை யும் விமல் வீரவன்சவின் கட்சி யான தேசிய சுதந்திர முன்னணி யைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப் பினர்கள், தொல்லியல் 23

வடக்கில் காணி விடுவிக்க ஆளுநர் தலைமையில் குழு

ஜனாதிபதி செயலணியில் தீர்மானம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் எஞ்சியுள்ள காணிகளை விடுவிப்பது தொடர் பில் தீர்மானம் மேற்கொள்ள மாகாண ஆளுநர்கள் தலைமை யில் குழு அமைக்க வடக்கு, கிழக்கு அபிவிருத்தி தொடர்பான ஜனாதி பதி செயலணி தீர்மானித்துள்ளது.

வடக்கு கிழக்கு அபிவிருத்தி தொடர்பான ஜனாதிபதி 23

விக்னேஸ்வரனுக்கான வாகன இறக்குமதிக்கு

அமைச்சரவை பத்திரம் நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு 60,000 டொலர் பெறுமதியான வாகன மொன்றைப் பெற்றுக்கொள்வதற் காக தாக்கல் செய்யப்பட்ட அமைச் சரவைப்பத்திரம் நிராகரிக்கப்பட் டுள்ளது. 23

வலுவடைந்த நிலையில் கைதிகளின் போராட்டம்

59 கைதிகள் உணவு தவிர்ப்பில்

(கொழும்பு)

தமது விடுதலையை வலி யுறுத்தி தமிழ் அரசியல் கைதி களினால் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம் தற்போது தீவிர நிலையை எட்டியுள்ளது.

அநுராதபுரம் சிறைச்சாலை யின் வெறும் எட்டு கைதிகளினால் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம், நாட் டின் பல்வேறு பகுதிகளுக் 23

பொலிஸாருக்கோ, இராணுவத்திற்கோ சிறப்பு அதிகாரங்கள் வழங்க முடியாது

அமைச்சரவை பேச்சாளர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

பொலிஸாருக்கோ, இராணு வத்திற்கோ சிறப்பு அதிகாரங்கள் வழங்க முடியாது என அமைச் சரவை பேச்சாளர் ராஜித சேனா ரத்ன தெரிவித்துள்ளார்.

மேலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தவிர ஏனைய அனைத்து அரசியல் கட்சிகளும் பழைய தேர் தல் முறைமையின் கீழ் 23

முறைப்பாட்டில் அசட்டையீனம்

குற்றப்பிரிவு பொலிஸார் அனைவரும் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பொலிஸ்நிலையத்தில் செய்யப்படும் முறைப்பாடுகள் தொடர் பில் அசட்டையீனமாக செயற்பட்ட தாக தெரிவித்து 23

தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம்

கூட்டமைப்புக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு ஒத்திவைப்பு

(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிகள் விட யம் தொடர்பில் ஜனாதிபதிக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான சந்திப்பு பிற்போடப்பட் டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தரான எம்.ஏ.சுமந்திரன் இதனைத் தெரிவித்துள்ளார்.

தவிர்க்க முடியாத சில காரணங் களினால் குறித்த சந்திப்பு பிற்போடப் பட்டுள்ளதாக அவர் குறிப் 23

யுத்தத்தில் மாய்ந்தான் என நினைத்த மகன் உயிருடன் உள்ளான்

தாய் ஒருவர் நெகிழ்ச்சி

(பனிக்கன்குளம்)

2009ஆம் ஆண்டு இறுதியுத் தத்தின்போது தலையில் படுகாய மடைந்த எனது மகன் இறந்து விட்டார் என்றுதான் நினைத்தேன். ஆனால் பல நாட்களின் பின்னர் இராணுவத்தினர் உயிரோடு திருப் பித்தந்துள்ளனர் என்று முள்ளி வாய்க்காலில் தாய் ஒருவர் தெரி வித்துள்ளார்.

யுத்தப்பாதிப்புக்குள்ளாகிய மக் களின் தற்போதை நிலை தொடர் பில் கருத்து தெரிவிக்கும் போதே நெகிழ்ச்சியுடன் 23

அரிசிக்கு நிர்ணய விலையை அறிவிக்க அரசு தீர்மானம்

(கொழும்பு)

அரிசிக்கான நிர்ணய விலையை அறிவிப்பதற்கு தீர்மானிக்கப்பட் டுள்ளது. வாழ்க்கைச் செலவுக் குழுவின் உறுப்பினரும் ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத் 23

கைதிகளின் விடுதலை தொடர்பில் சட்டமா அதிபரின் கருத்திற்கு தமிழ் அரசியல் கைதிகள் எதிர்ப்பு

(அநுராதபுரம்)

அரசியல் கைதிகளின் ஒவ் வொரு வழக்காக ஆராய்ந்தே பதி லளிப்போம் எனவும், சில வழக்கு களில் புனர்வாழ்வு வழங்க முடி யாது எனவும் தெரிவித்துள்ள சட் டமா அதிபரின் கருத்திற்கு தமிழ் அரசியல் கைதிகள் எதிர்ப்பு வெளி யிட்டுள்ளனர்.

அநுராதபுரம் சிறைச்சாலை யில் கடந்த 14ஆம் திகதி முதல் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதி களே இவ்வாறு எதிர்ப்பு வெளியிட் டுள்ளனர்.

சட்டமா அதிபர், நீதி அமைச்சர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோருக்கு இடை யிலான முத்தரப்புச் சந்திப்பு கொழும் பில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது.

இதன்போது சில வழக்குகளில் கைது செய்யப்பட்டுள்ள அரசியல் கைதிகளுக்கு புனர்வாழ்வு வழங்க முடியாது என சட்டமா அதிபர் தெரி வித்திருந்தார். இந்த நிலையில் தங்களது கோரிக்கை ஏற் 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

காரைநகரில் உல்லாச விடுதி அமைக்க ஊர்காவற்றுறை நீதிமன்று இடைக்கால தடை

(யாழ்ப்பாணம்)

காரைநகர் வலந்தலைச்சந்தியில் அமைக்கப்படவுள்ள உல்லாச விடுதிக்கு எதிராக தடை உத்தரவு கோரி சுகாதார வைத்திய அதிகாரி ப.நந்தகுமாரினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் அடிப்படையில் ஊர்காவற்றுறை நீதிமன்று இடைக்காலத் தடை உத்தரவு வழங்கியுள்ளது.

உல்லாச விடுதி அமைக்கப்படவுள்ள பிரதேசத்திற்கு மிக அண்மித்த பகுதியில் பாடசாலைகள், ஆலயங்கள் உள்ளன எனவும், அந்தப் பகுதி நன்னீர் தேக்கமாக காணப்படும் இடம் என்பதனால், உல்லாச விடுதி நிர்மாணிக்க தடை விதிக்க வேண்டும் என கோரி ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதவான் ஏ.யூட்சன் முன்னிலையில் நேற்று புதன்கிழமை குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

மனுதாரரின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நீதவான், மனு மீதான விசாரணைகளை முன்னெடுக்கும் வகையில் கட்டட நிர்மாண பணிகளுக்கு இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டார்.

இதே வேளை காரைநகர் வலந்தலைச் சந்தியில் உல்லாச விடுதி அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று அப்பகுதி இளைஞர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த நீதிமன்றின் உத்தரவை அடுத்து இளைஞர்கள் பொதுமக்களை ஒன்றிணைத்து போராட்ட வடிவத்தை மாற்றி கையெழுத்து போராட்டத்தை நடத்தியதுடன், பிரதேச செயலாளர், பிரதேச சபைத் தவிசாளர் ஆகியோரிடம் மனு ஒன்றை கையளித்திருந்தனர்.

குறித்த விடயம் தொடர்பாக அரச அதிபருக்கு தெரியப்படுத்தி விரைவாக ஒரு காத்திரமான பதிலை தருவதாக பிரதேச செயலர் உறுதியளித்தார்.

நீதிமன்ற தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட காரணத்தால் தான் இது தொடர்பாக எந்த கருத்தும் தெரிவிக்க முடியாதெனவும், தொடங்கப்பட்ட வேலைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளதாக பிரதேச சபைத் தவிசாளர் தெரிவித்தார். (ம-9)

அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக பண்டத்தரிப்பில் இன்று கவனயீர்ப்பு

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும், உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் அரசியல் கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்தும் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று இன்று வியாழக்கிழமை மாலை 4.30 மணியளவில் பண்டத்தரிப்பு சந்தியின் சுற்றுவட்டத்திற்கு அருகில் பண்டத்தரிப்பு மகளிர் உயர்தர பாடசாலைக்கு முன்பாக இடம்பெறவுள்ளது.

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்துகின்ற யாழ்.மாவட்ட வெகுஜன அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகள் இணைந்து ஏற்பாடுசெய்துள்ள இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் இப் பிரதேசத்தைச் சேர்ந்த சமூக மட்ட அமைப்புக்களையும், மனித நேயமுள்ள சமூக செயற்பாட்டாளர்களையும் கலந்துகொள்ளுமாறு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது. (ம)

சட்டவிரோத மதுபான விற்பனை யாழில் ஒருவர் மடக்கிப் பிடிப்பு

யாழ்.சின்னக்கடை பகுதியில் சட்டவிரோதமான முறையில் மதுபானங்களை விற்பனை செய்த நபரை, மாநகர சபை உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகஸ்தர்கள் இணைந்து பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

நேற்று புதன்கிழமை மதுவொழிப்பு தினம் என்பதால், யாழில் உள்ள அனைத்து மதுபான சாலைகளும் மூடப்பட்டன.

இந்நிலையில் , யாழ்.சின்னக்கடை பகுதியில் சட்டவிரோதமான முறையில் மதுபானம் விற்கப்படுவதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்.மாநகர சபை உறுப்பினர்களான வை.கிருபாகரன், ஜெ.ரஜிவ்காந், ஜெனன் மற்றும் ம.மயூரன் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

அதனை அடுத்து உறுப்பினர்கள், சட்டவிரோதமான முறையில் மதுபானம் விற்கபடுவதாக கூறப்பட்ட இடத்திற்கு சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர். அதன் போது மாநகர சபையின் வரி அறவீட்டு உத்தியோகஸ்தர்களும் உடன் இருந்துள்ளனர்.

அதன் பின்னர் சட்டவிரோதமான முறையில் மதுபானம் விற்ற நபரை பிடித்ததுடன் அவரிடம் இருந்து 250 மில்லி லீட்டர கொள்வனவு உடைய 13 சாராய போத்தல்களையும் மீட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட சாராய போத்தல்களையும் பிடிபட்ட நபரையும் யாழ்ப்பாண பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.(ம)

வேலைவாய்ப்பு

கட்டிட பூச்சு (உள், வெளி) வேலைக்கு மேசன் தரத்திலான வேலையாட்கள் தேவை.

தொடர்பு:0765465144

(க-4049)

ஸ்ரீ சாய் சபரீசன் பூஜா ஸ்ரோர்ஸ்

(கோயில் பூஜைப் பொருட்கள்)

விற்பனை நிலையம்

கருங்கற் சிலைகள், ஐம்பொன் சிலைகள் திருவாசிகள், ஜந்திரங்கள், தீபாராதனை பொருட்கள், கோபுரகலசங்கள், அஸ்டபந்தன மருந்துகள், வேஸ்ட்டி, தாம்பாளத் தட்டங்கள், குடங்கள், செம்புகள், சால்வைகள், சுவாமி அலங்கார பொருட்கள், சுவாமிபட்டுகள், அபிசேக திரவியங்கள், ஹோமச்சாமான்கள், வாசனைத் திரவியங்கள் அனைத்தும் நம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

(5898)

K.K.S Road தாவடிச்சந்தி,கோண்டாவில்.

077310867I, 0777110629

கண்ணீர் அஞ்சலி

கொழும்பில் காலமாகிய எமது பாசத்திற்குரிய மாமியார் (தம்பி சுகந்தனின் மனைவி, சிவதர்ஜினியின் தாயார்)

திருமதி ஏரம்பமூர்த்தி நவநீதம்

தோற்றம் 09.05.1946 மறைவு 01.10.2018

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

தங்க. முகுந்தன் குடும்பம்

மூளாய் 0777279238

(கி-4046)

அன்பார்ந்த எமது முல்லை மாவட்ட உறவுகளே!

விழித்தெழுந்து விழுந்தி கொள்வோம்

- எம் உறவுகளான தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை விரைவாக்க அணிசேர்வோம்
- எம் உறவுகளின் விடுதலையை உறுதிப்படுத்த அரசுக்கு அழுத்தம் கொடுப்போம்
- அரசினால் நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்க ஒன்றுசேர்ந்து குரல் கொடுப்போம்
- உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் எம் உறவுகளுக்கு கரம் கொடுப்போம்.
- பசித்த வயிறுடன் தம் விடுதலைக்காக போராடும் எம் உறவுகளான தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி அரசுக்கு எதிரான மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றிற்கு அணிதிரள்வோம்.

இடம் : முல்லைத்தீவு மாவட்ட செயலக முன்றல்
காலம் : 05.10.2018 வெள்ளிக்கிழமை
நேரம் : காலை 9.00 மணி

(கி-4045)

குறிப்பு :
போக்குவரத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்
0776264916

ஒழுங்கமைப்பும் ஏற்பாடும் :
வன்னிக்குறோஸ் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம்
முல்லைத்தீவு மாவட்டம்

பிறந்த நாள் வாழ்த்து

Best Wishes

செல்வராசா கெமில்ரன் (கெமில்)

இன்று (04.10.2018) வியாழக்கிழமை தனது இருபத்து ஐந்தாவது பிறந்த தனத்தை கொண்டாடும் செல்வராசா கெமில்ரன் (கெமில்) அவர்களை நீடூழி வாழி வாழ்த்துகின்றோம்.

(589?)

அன்பு நண்பர்கள்

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

பொருளாதார நிலை குறித்து அச்சமடைய தேவையில்லை

மத்திய வங்கி ஆளுநர் நம்பிக்கை



(கொழும்பு)

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலை குறித்து மக்கள் அச்சமடைய வேண்டியதில்லை. நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியால், ஏற்பட்டுள்ள நாணயமாற்று விகித சிக்கல் நிலை மற்றும் கடன் நிலை என்பவற்றை சீர்செய்வதற்கான நடவடிக்கைகளை மத்திய வங்கியினால் செயற்றிறனான வகையில் முன்னெடுக்க முடியும் என மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை தொடர்பில் பல்வேறு தரப்பினரும் அரசாங்கத்தின் மீது விமர்சனங்களை முன்வைத்துவரும் நிலையில், பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கு மத்திய வங்கி மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் தெளிவுபடுத்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொருளாதாரத்தில் ஏற்பட்ட தளம்பல் நிலை தற்போது ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நாணயமாற்று விகிதம் தொடர்பில் நாடளாவிய ரீதியில் போதிய தெளிவற்ற நிலையும் காணப்படுகின்றது.

நான் சுமார் 20 நாடுகளில் பணியாற்றியிருக்கின்றேன். ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடைந்தால் நாட்டின் பொருளாதார நிலை முற்றாக தளம்பலடையும் என மக்கள் கருதுகின்றனர்.

ஆனால் எமது சேமிப்பு, பொருளாதார வளர்ச்சி மற்றும் பணவீக்கம் என்பன அனுகூலமான நிலையில் உள்ளன. இத்தகையதொரு நிலையில் பொருளாதாரம் மோசமடைந்துள்ளது என எவ்வாறு கூறமுடியும் என வும் கேள்வி எழுப்பியுள்ளார். (இ-7)

பெண்களை இலக்குவைத்து வழிப்பறி சாவகச்சேரியில் சந்தேகநபர் கைது

12 தொலைபேசிகள், வங்கிப்புத்தகங்கள், பணம் பறிமுதல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பகுதியில் கடந்த 3 மாத காலங்களாக தொடர்ச்சியாக பெண்களை இலக்கு வைத்து வழிப்பறிக் கொள்ளைகளில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவர் சாவகச்சேரி பொலிஸாரால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளார். அத்துடன் அவர் கொள்ளையிடப் பயன்படுத்திய இரண்டு மோட்டார் சைக்கிள்கள், கையடக்கத் தொலைபேசிகள், வங்கிப் புத்தகங்கள், தேசிய அடையாள அட்டைகள், ஒரு தொகைப் பணம், டயரிகள் ,பெண்களின் கைப்பைகள் ,கை மணிக்கூடுகள் ஆகியவற்றையும் பொலிஸார் சந்தேக நபரிடம் இருந்து கைப்பற்றியுள்ளனர். இது தொடர்பாக பொலிஸார் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 3 மாத காலங்களாக குறித்த சந்தேக நபர் சாவகச்சேரியின் டச்சு வீதி, தபால் நிலைய வீதி ,பெருங்குளம்,கல்வயல் ஆகிய பகுதிகளில் தனிமையில் துவிச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிள்களில் செல்லும் பெண்களை இலக்கு வைத்தே தனது கைவரிசையைக் காட்டியுள்ளார். பல கொள்ளைச் சம்பவங்கள் குறித்த சந்தேக நபரால் நடத்தப்பட்டுள்ள போதிலும் 5 பேரே முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளனர். பாதுகாப்புக் கமரா மற்றும் பொது மக்களின் உதவியுடன் குறித்த சந்தேக நபரை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை கைது செய்துள்ளோம். யாராவது குறித்த நபரால் பாதிக்கப்பட்டிருப்பின் அவர்கள் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு வந்து தமது பொருட்களை அடையாளம் காட்ட முடியும் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். 12 விலை உயர்ந்த கையடக்கத் தொலைபேசிகள், 6 சாதாரண தொலைபேசிகள்,25,000 பணம், 4 ஆள் அடையாள அட்டைகள், சாரதி அனுமதிப் பத்திரம், 6 வங்கிப் புத்தகங்கள், 2 பெண்களின் கை மணிக்கூடு,6 பெண்களின் கைப் பைகள் ஆகியவற்றையும் கொள்ளையிட பயன்படுத்திய பெண்களின் பெகோரக மோட்டார் சைக்கிள் மற்றும் சி.ரி 100 மோட்டார் சைக்கிள் ஒன்றையும் சாவகச்சேரி பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். கைதடி தச்சன் தோப்புப் பகுதியைச் சேர்ந்த 23வயதான இளைஞன் ஒருவரே சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றுப் புதன்கிழமை நண்பகல் சாவகச்சேரி நீதிமன்றில் முன்னிறுத்தப்பட்டார். சாவகச்சேரி பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் ஏ.பி. விஜயக்கோன், மாவட்ட புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரி பிரதீப், சார்ஜன் கொடித்துவக்கு, நிசாந்த, சுரேஷ், ரத்னாயக்க, புவனச்சந்திரன் ஆகியோர் அடங்கிய பொலிஸ் குழுவினரே கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர். (இ-9-29-30-89)

பிரதமரின் பெயரைப் பயன்படுத்தி 20ஐ விமர்சிப்பதை ஏற்க முடியாது

அமைச்சர் பௌசி எதிர்ப்பு

(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்க என்ற தனிநபரின் பெயரை பயன்படுத்தி 20 ஆவது திருத்தத்தை விமர்சிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. அடுத்த தேர்தலுக்கு பின்னர் யார் பிரதமராகுவார் என்று தெரியாது. பிரதமராக தெரிவு செய்யப்படக்கூடியவர் பாராளுமன்றத்துக்கு பொறுப்பு கூறக்கூடியவராக இருக்க வேண்டும். அதற்காக மக்கள் விடுதலை முன்னணியின் 20 ஆவது திருத்தத்தை அங்கீகரித்துக்கொள்ள அனைவரும் ஆதரவளிக்க வேண்டும் என தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்தார்.

கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் செயலாளரும் முன்னாள் அமைச்சரு மான பீற்றர் கெனமனின் 101 ஆவது பிறந்த தின நிகழ்வு மருதானையில் நிறுவப்பட்டிருக்கும் அன்னாரின் உருவச்சிலைக்கு முன்னால் நேற்று இடம்பெற்றது. பீற்றர் கெனமன் நினைவு கூரல் குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அடுத்த பொதுத் தேர்தலுக்கு பின்னர் தெரிவு செய்யப்படும் பிரதமரே அதிகாரம் கூடிய பிரதமராக செயற்படுவார். அத்துடன் 19 ஆவது திருத்தத்தினூடாக ஜனாதிபதிக்கு இருந்து வந்த அதிகாரங்கள் குறைக்கப்பட்டிருக்கின்றன. கோடிக் கணக்கில் பணம் செலவழித்து ஜனாதிபதி தேர்தலை நடத்தி அதிகாரம் இல்லாத ஜனாதிபதி ஒருவரை எதற்காக தெரிவு செய்ய வேண்டும்.

அதனால் மக்கள் விடுதலை முன்னணி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கும் அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தை அங்கீகரித்துக்கொள்ள அனைவரும் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்று நம்புகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

ஜாலியவுக்கு ஆறாவது முறையாக நேற்று திறந்த பிடியாணை பிறப்பிப்பு

பிணை நின்ற மனைவி, சகோதரியை கைது செய்யவும் உத்தரவு

(கொழும்பு)

அமெரிக்காவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரியவை கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த மீண்டும் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று கொழும்பு கோட்டை நீதவான்லங்கா ஜெயரட்ன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அவருடைய பிணைக்காக முன்னின்ற அவரின் மனைவி மற்றும் அவரின் உறவுக்கார சகோதரியையும் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு ஏற்கனவே நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது.

இது அவருக்கு எதிராக திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட ஆறாவது சந்தர்ப்பமாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

ஜனாதிபதி கொலைச் சதி பின்னணியில் சி.ஐ.ஏ,றோ

தேசப்பற்றுள்ள பிக்குகள் முன்னணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் கொலை செய்வதற்காகத் தீட்டப்பட்டதாகக் கூறப்படும் சதி, பொது பல சேனா அமைப்பின் செயலாளர்ஞானசாரதேரரின்கைது ஆகியவற்றின் பின்னணியில், ஐக்கிய அமெரிக்காவின் மத்திய புலனாய்வு முகவராண்மை (சி.ஐ.ஏ), இந்தியாவின் உளவுத்துறை (றோ) ஆகியன உள்ளனவென, தேசப்பற்றுள்ள பிக்குகள் முன்னணி குற்றம் சாட்டியுள்ளது.

அத்தோடு, சிறையிலடைக்கப்பட்டுள்ளஞானசாரதேரரை, பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டுமெனவும், அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில், அம்முன்னணியின் தலைவர் பென்கமுவே நாலக தேரர்கலந்துகொண்டு, இவ்விடயங்களை வெளிப்படுத்தினார். எனினும், தனது குற்றச்சாட்டுகளுக்கான ஆதாரங்கள் எவற்றையும் அவர் இங்கு வெளிப்படுத்தியிருக்கவில்லை.

தேரர்களுக்கு அநீதி இழைக்கப்படுவதை, தேரர்களாகிய எம்மால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. கலகொட அத்தே ஞானசார தேரர், தொடர்ச்சியாக இந்த நாட்டுக்காகத் தான் குரல்கொடுத்து வந்தார். இதனை ஏற்றுக்கொள்ளாத சிலரும் உள்ளனர். நாம், பௌத்த தர்ம போதனைகளின் அடிப்படையிலேயே செயற்படுகிறோம்.

இதனை முன்னிறுத்தியே நாம், ஞானசார தேரர் விடயத்தையும் பார்க்கிறோம். சட்டமா அதிபர் திணைக்களமும்பொலிஸாரும், பௌத்த தர்மத்துக்கு எதிராகவே செயற்படுகின்றனர்" என்றும் இவ்வாறான தரப்பினர், நீதிமன்றத்துக்கு வழங்கிய தவறான தகவலின் பிரகாரமே, ஞானசார தேரருக்கு எதிரான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்ட அவர், "தன்னைக் கொலை செய்ய முற்பட்டவருக்கே ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கும் போது, ஞானசார தேரருக்கும்மன்னிப்பு வழங்க வேண்டும்"எனவும் அவர் தெரிவித்தார் (இ-7)

டெங்கு நுளம்பு பெருக ஏதுவான சூழல்

வைத்தியசாலை அத்தியட்சகருக்கு எதிராக பொதுச் சுகாதார பரிசோதகரால் வழக்கு

நாளை நீதிமன்றில் ஆஜராக உத்தரவு

(யாழ்ப்பாணம்)

டெங்கு நுளம்பு பெருகுவதற்கு ஏதுவாக தெல்லிப்பழை ஆதாரவைத்தியசாலை வளாக சூழலை வைத்திருந்த காரணத்தினால் குறித்த வைத்தியசாலை அத்தியட்சகருக்கு எதிராக நேற்று தெல்லிப்பழை பொதுச்சுகாதார பரிசோதகரால் மல்லாகம் நீதிமன்றல் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை வளாகத்தில் இருந்து டெங்கு பரவிக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் வைத்தியசாலை வளாகத்தில் காணப்படும் நுளம்பு பெருகும் இடங்களுக்கு தெல்லிப்பழை பொதுச் சுகாதார பரிசோதகரால் 14 நாட்கள் கால அவகாசமுடைய அறிவித்தல் வைத்திய சாலை அத்தியட்சகருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதிகளவான நோயாளர்கள் வந்துபோகும் பகுதியாக இருப்பதுடன் அங்கு கடமையாற்றும் பராமரிப்பாளர்கள்,ஊழியர்கள் தங்கி நின்று கடமையாற்றும் பகுதியாக இந்த வைத்தியசாலை வளாகம் காணப்படுகிறது. அத்துடன் இதுவரை 15 க்கும் மேற்பட்டோர் டெங்கு நோய் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளனர் என சுட்டிக்காட்டி கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் 14 நாட்கள் கடந்தும் குறித்த வளாகத்தில் திருத்த வழிமுறைகள் செய்யப்படாத காரணத்தினால் பொதுச்சுகாதார பரிசோதகர் இராஜமேனகனால் நேற்று நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் குறித்த வைத்தியசாலை வளாகத்தில் கட்டட நிர்மாண பணிகள் இடம்பெற்று வருவதாகவும் அங்கும் டெங்கு நுளம்பு பரவுவதற்கு ஏதுவான காரணிகள் காண்ப்பட்டதால் நிர்மாணப் பணியாளர்களுக்கு எதிராக 3 வழக்குகளும் வைத்திய சாலை வளாகத்தில் உள்ள கழிவு நீர் அகற்றல் தொகுதியில் உள்ள குறைபாடு தொடர்பாக ஒரு வழக்கு மாக மொத்தம் 5 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

குறித்த எதிராளிகளை நாளை வெள்ளிக்கிழமை மன்றில்ஆஜராகுமாறு அழைப்புக் கட்டளை நீதிமன்றினால் வழங்கப்பட்டுள்ளது. (இ-9)

ராஜ்கோட்டில் யாருக்கு 'ராஜயோகம்'

இந்தியா - மேற்கிந்தியத் தீவுகள் இன்று முதல் மோதல்

பயிற்சியை மேற்கொள்ள மூட்டைமுடிச்சுக்களுடன் மைதானத்துக்கு வந்த விராட் ஹோலி

இந்தியா, மே.தீவுகள் மோதும் முதல் டெஸ்ட் இன்று ராஜ்கோட்டில் ஆரம்பமாகிறது.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மே.தீவுகள் இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

முதல் டெஸ்ட் இன்று ராஜ்கோட்டில் ஆரம்பமாகிறது. இந்திய அணி கடந்த 9 மாதங்களில் தென்னாபிரிக்கா (1-2), இங்கிலாந்து (1-4) மண்ணில் நடந்த டெஸ்ட் தொடரில் தோற்றது.

அடுத்து இந்த ஆண்டின் இறுதியில் அவுஸ்திரேலிய மண்ணில் கடினமான தொடரில் பங்கேற்க உள்ளது. இதற்குத் தயாராக இத்தொடர் சிறந்த பயிற்சியாக அமையும். தவான், முரளி விஜய் நீக்கப்பட்ட நிலையில், சோதனை முயற்சியாக மும்பையின் பிரித்வி ஷா அறிமுகம் ஆகிறார். இவர் எதுவும் 'ஏவுகணை' போல பாய்ந்து ரணியின் பந்துவீச்சை சம் செய்வார் என நம்பப்படுகிறது. இவருடன் இணைந்து லோகேஷ் ராகுல் ஆரம்ப வீரராக களமிறங்க உள்ளார். இதனால், மயங்க் அகர்வாலுக்கு வாய்ப்பு இல்லை.

'நடுத்தர வரிசையில்' சொந்த மண்ணில் விளையாட உள்ள புஜாராவுடன் அணித் தலைவர் ஹோலியும் உள்ளார். இவர் கடந்த இரு தொடர்களில் 286 (3 டெஸ்ட், தென்னாபிரிக்கா), 593 (5 டெஸ்ட், இங்கிலாந்து) என அதிக ஓட்டங்கள் குவித்தது மீண்டும் தொடர காத்திருக்கிறது. அடுத்து ரகானே, ஓவல் டெஸ்டில் சதம் (114) அடித்த விக்கெட் காப்பாளர் ரிஷாப் பன்ட் துடுப்பாட்டத்துக்கு வலுச் சேர்க்க உள்ளனர்.

மூன்று 'சுழல்'

பந்துவீச்சில் வழக்கம் போல 5 பேருடன் களமிறங்குகிறது இந்திய அணி. 'வேகத்தில்' உமேஷ் யாதவ், மொஹமட் ஷமி என இரு வரும், 'சீனியர்' அஷ்வின், உள்ளூர் வீரர் ஜடேஜா, குல்தீப் யாதவ் என மூன்று 'சுழல்' வீரர்களும் கூட்டணி காண உள்ளனர்.

12வது வீரராக ஷர்துல் தாகூர் இடம் பெற்றுள்ளார். இதனால் மொஹமட் சிராஜ், ஹனுமா விஹாரி காத்திருக்க வேண்டும்.

இளமை பலம்

மே.தீவுகள் அணி கடந்த 2013இல் சச்சினின் கடைசி தொடரில் இங்கு விளையாடியது. சமீபத்திய இளம் வீரர்கள் வரவு காரணமாக அணி போதிய அனுபவம் இல்லாமல் உள்ளது. அதேநேரம் கடந்த ஆண்டு இங்கிலாந்துக்கு எதிரான லீட்ஸ் டெஸ்டில் ஷாய் ஹோப் 147, 118 என இரு சதங்கள் அடிக்க வெற்றியை பதிவு செய்தது.

சமீபத்தில் சொந்தமண்ணில் இலங்கைக்கு எதிராக 'சமன்' (1-1), பங்களாதேஷை (2-0) வீழ்த்தியதால் நம்பிக்கையுடன் களமிறங்குகிறது. பயிற்சி போட்டியிலும் பிராத்வைட் (52 ஒட்.), டவ்ரிச் (65), அம்ரிஸ் (114) சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தினர்.

பந்துவீச்சு எப்படி?

பாட்டி மரணம் காரணமாக அனுபவ பந்துவீச்சாளர் கீமர் ரோச், நாடு திரும்பியது இழப்புதான். கீமோ போல், ஷேர்மன் லீவிஸ், வோரிகன், கேபிரியல் என பலர் உள்ளனர். சுழலில் தேவேந்திர பிஷ்ஷூ இந்திய வீரர்களுக்கு தொல்லை கொடுக்க முயற்சிக்கலாம்.

அணியிலுள்ள 15 பேரில் அணித் தலைவர் ஹோல்டர் உள்ளிட்ட 5 வீரர்கள் மட்டும் தான் இந்திய மண்ணில் விளையாடிய அனுபவம் வாய்ந்தவர்கள். இது இந்த அணிக்கு பலவீனம் தான்.

மழை வருமா?

முதல் டெஸ்ட் நடக்கும் ராஜ்கோட்டில் அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் மேகங்கள் இன்றி தெளிவாக இருக்கும். மழை வர வாய்ப்பு இல்லை.

ஆடுகளம் மர்மம்

ராஜ்கோட் ஆடுகளம் மர்மம் ஆனது. ரஞ்சி கிண்ணத் தொடரில் சவுராஷ்டிரா அணியின் ஜடேஜாவுக்கு சாதகமாக பந்து சுழலும் வகையில் அமைக்கப்பட்டது. போட்டிகள் மூன்று நாட்களில் முடிந்தன. வரும் அவுஸ் திரேலிய தொடருக்கு தயாராகும் வகையில் பந்துகள் 'பவுன்ஸ்' ஆக வேண்டும் என பி.சி.சி.ஐ., விரும்புகிறதாம். எனினும் முதல் இரண்டரை நாட்கள் துடுப்பாட்டத்துக்கு சாதகமாக இருக்கும் எனத் தெரிகிறது.

30 வெற்றி

சொந்தமண்ணில் இந்திய அணியை வீழ்த்துவது அவ்வளவு எளிதல்ல. கடந்த 2010-18ல் பங்கேற்ற 43 டெஸ்டில் 30ல் வென்றது. 4ல்தான் தோற்றது. 9 போட்டி 'சமன்' ஆகின. இந்திய அணியின் வெற்றி, தோல்வி சதவீதம் 7.5 ஆக முதலிடத்தில் உள்ளது. அடுத்து அவுஸ்திரேலியா (4.285 சதவீதம்) உள்ளது.

35 ஆண்டு

இந்திய மண்ணில் மே.தீவுகள் அணி கடைசியாக 1983ல் 3-0 என டெஸ்ட் தொடரை வென்றது. இதன்பின் கடந்த 35 ஆண்டுகளாக பங்கேற்ற எந்த தொடரிலும் வெற்றி பெறவில்லை. 3 தொடரில் தோற்ற இந்த அணி, 1983-84 (1-1), 1994-95ல் (1-1) 'சமன்' செய்தது.

644 ஓட்டங்கள்

மே.தீவுகள் அணிக்கு எதிரான 1979, கான்பூர் டெஸ்டில் இந்திய அணி அதிகபட்சம் 644/7 ஓட்டங்கள் எடுத்தது. குறைந்த அளவாக 1987, டில்லி டெஸ்டில் 75 ஓட்டங்களுக்கு சுருண்டது.

1994க்கு பின்

மே.தீவுகள் அணி இந்திய மண்ணில் கடந்த 1994, சண்டிகர் டெஸ்டில் 243 ஓட்டங்களால் இந்தியாவை வென்றது. இதன்பின் இங்கு மோதிய 8 டெஸ்டில் (6 தோல்வி, 2 'சமன்') ஒன்றில் கூட வெல்லவில்லை.

8 வெற்றி

இந்தியா, மே.தீவுகள் அணிகள் இதுவரை 22 டெஸ்ட் தொடர்களில் மோதியுள்ளன. இதில் இந்திய அணி 8ல் வென்றது. 12ல் மே.தீவுகள் வெற்றி பெற, 2 தொடர்கள் 'சமன்' ஆகின.

◆ சொந்தமண்ணில் நடந்த 9 தொடர்களில் இந்தியா 4ல் வெற்றி பெற்றது. 5ல் தோற்றது.

19 டெஸ்ட்

இந்தியா, மே.தீவுகள் அணிகள் 2002 முதல் இதுவரை 6 டெஸ்ட் தொடரில் பங்கேற்றன. இந்த அனைத்திலும் இந்திய அணி (சொந்தமண்ணில் 3, மே.தீவுகளில் 3) வெற்றி பெற்றது.

இந்த தொடர்களில் நடந்த 19 டெஸ்டில் இந்தியா 10ல் வென்றது. 9 போட்டி 'சமன்' ஆனது.

94 டெஸ்ட்

இரு அணிகள் இதுவரை 94 டெஸ்டில் மோதின. இதில் இந்தியா 18ல் வென்றது. 46 போட்டி 'சமன்' ஆக, 30ல் மே.தீவுகள் வென்றது.

கிரிக்கெட்டில் யார் சர்கார்?

பயிற்சியாளரை விளாசும் கங்குலி

கங்குலி

"கிரிக்கெட் என்பது கால்பந்து போட்டி போன்றது அல்ல. இங்கு அணித்தலைவர் தான் 'கிங்'. பயிற்சியாளர்கள் தலைவரின் பணியை ஆக்கிரமிக்கக் கூடாது." என முன்னாள் அணித் தலைவர் கங்குலி தெரிவித்தார்.

இந்திய கிரிக்கெட்டின் ஆக்ரோஷ அணித் தலைவராக இருந்தவர் கங்குலி (46). சச்சின், டிராவிட், சேவாக், கும்ளே, லக்ஷ்மன் மற்றும் ஹர்பஜன் என சிறந்த வீரர்களுக்கு தலைமை தாங்கியவர். தற்போதுள்ள கிரிக்கெட் பயிற்சியாளர்கள் குறித்தும், அணியின் தலைவர்களுக்கும் பல ஆலோசனைகள் கொடுத்துள்ளார். யாருடைய பெயரையும் குறிப்பிடவில்லை என்றாலும், கங்குலி சொல்வது ரவி சாஸ்திரி, ஹோலியைத்தான் என தெளிவாகத் தெரிகிறது.

இதுகுறித்து கங்குலி கூறியதாவது, கால்பந்து போட்டியின்போது பயிற்சியாளர்கள் களத்துக்கு வெளியில் இருந்து உத்தரவுகளை சொல்லிக் கொண்டே இருப்பர். அணித் தலைவரை சுயமாக சிந்தித்து செயற்பட விடமாட்டார்கள்.

கிரிக்கெட் என்பது கால்பந்து போட்டி போன்றது அல்ல. ஏனெனில் இப்போதைய பயிற்சியாளர்கள் கிரிக்கெட் அணியை, கால்பந்தை போல நடத்த முயற்சிக்கின்றனர். அணியின் அனைத்து விடயங்களிலும் தலையிடுகின்றனர்.

பெர்குசன், மவுரினோஸ், ஜிடேன் உள்ளிட்ட கால்பந்து பயிற்சியாளர்கள் செய்வதை பார்த்துக் கொண்டு கிரிக்கெட்டும் அப்படித்தான் இருக்க வேண்டும் என விரும்புகின்றனர்.

தலைவர்கள் விளையாட்டு

கிரிக்கெட் என்பது தலைவர்களுக்கான விளையாட்டு. இங்கு தலைவர்கள் சிந்தித்து செயற்பட்டு சுயமாக முடிவுகள் எடுக்க வேண்டும். அவர்கள் என்ன செய்கின்றனர் என பயிற்சியாளர்கள் வெளியில் இருந்து தான் பார்க்க வேண்டும். இது மிக முக்கியம். அதேபோல அணியில் சிறந்த வீரர்கள் இருக்கும் போது, நீங்கள் சிறந்த தலைவராக வலம் வரலாம்.

அவர்கள் என்ன செய்கின்றார்களோ அதைப் பின்பற்றி வந்தால் கூட போதும் ஏனெனில் சில நேரங்களில் அவர்கள், உங்களை விட சிறப்பாக செயற்படுவர்.

நட்பு வேண்டும்

என்னைப் பொறுத்தவரையில் அணித் தலைவர் என்பவர், 'என் வழிதான் சிறந்த வழி' என முடிவுக்கு வந்து விடக்கூடாது. சூழ் நிலைக்கு தகுந்து, வீரர்களுக்கு ஏற்ப 'அட்ஜஸ்ட்' செய்து கொள்ள வேண்டும். 'டிரசிங் ரூமில்' சக வீரர்களுடன் நட்பு பாராட்ட வேண்டும்.

தொழில் ரீதியிலான வாழ்க்கையில் நெருக்கடி என்பது தவிர்க்க முடியாததுதான். இது கட்டாயத் தேவைதான். அதேநேரம் அதிகப்படியான அளவில் சென்று விடக் கூடாது. இது வீரர்கள் செயற்பாட்டினை பாதிக்கும். அணியிலுள்ள வீரர்கள் சுதந்திரமாக செயற்பட அனுமதிக்க வேண்டும். இதுதான் சிறந்த தலைவராக உருவாக, சிறப்பான அணியாக மாற உதவியாக அமையும். அணியில் உள்ள ஒவ்வொருவரும் தாங்கள்தான் தலைவர் என்ற எண்ணத்தை உணர வேண்டும். வீரர்கள் அணித் தலைவர் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும். இவ்வாறு கங்குலி கூறினார்.

புரியாத புதிரா வீரர்கள் தேர்வு?

ஹர்பஜன் சிங் ஆதங்கம்

ஹர்பஜன் சிங்

"இந்திய வீரர் கருண் நாயருக்கு கடந்த மூன்று மாதமாக எந்தவொரு டெஸ்டிலும் வாய்ப்பு கொடுக்கவில்லை. தேசிய அணிக்காக வீரர்களை எப்படித்தான் தேர்வு செய்கின்றனர் என்று புரியவில்லை." என இந்திய அணி சுழல் பந்துவீச்சாளர் ஹர்பஜன் தெரிவித்தார்.

இந்திய வீரர் கருண் நாயர், (வயது-26) டெஸ்ட் அரங்கில் சேவாக்கிற்குப்பின் முச்சதம் அடித்த ஒரே இந்திய வீரர் இவர்தான். இதுவரை 6 டெஸ்டில் மட்டுமே விளையாடி உள்ளார். கடந்த 6 டெஸ்ட் போட்டிகளுக்கு (ஆப்கானிஸ்தான் 1, இங்கிலாந்து 5) தேர்வான போதும், ஒன்றில் கூட 'லெவின்' அணியில் இடம் கிடைக்கவில்லை. இன்று ஆரம்பமாகும் மே.தீவுகளுடனான தொடரிலும் தேர்வு செய்யப்படவில்லை. இது குறித்து ஹர்பஜன் சிங் கூறியதாவது,

கருண் நாயர் கடந்த மூன்று மாதமாக டெஸ்ட் போட்டிக்கான அணியில் இடம் பிடித்த போதும், களமிறங்கும் 'லெவின்' அணியில் வாய்ப்பு தரப்படவில்லை. இது மர்மமாக உள்ளது. தேசிய அணிக்காக வீரர்களை எப்படித் தேர்வு செய்கின்றனர் என்றே புரிந்து கொள்ள முடியவில்லை. இதற்கென என்ன அளவுகோல் வைத்துள்ளனர் எனத் தெரியவில்லை. இதை எண்ணி வேதனைப்படுகிறேன். இவ்வாறு ஹர்பஜன் கூறினார்.

அரசாங்கம் நல்லிணக்கத்தை வெளிப்படுத்த அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும்

டக்ளஸ் எம்.பி. வலியுறுத்து



(யாழ்ப்பாணம்)

உரிய விசாரணைகளும், வழக்குத் தாக்கல்களும் இல்லாமல் சிறைகளில் நீண்டகாலமாக அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டுமென தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றேன் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி. தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் ,

யுத்த காலத்திலும் சிறைகளில் வகை தொகையில்லாமல் அடைக்கப்பட்ட பல தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதிலும், அவர்களுக்காக இலவசமாக நீதிமன்றங்களில் வழக்காடியும் எனக்கு உதவியாக சேவைசெய்த மனித உரிமைகள் சட்டத்தரணி மகேஸ்வரி வேலாயுதம் மூலம் ஆரம்பித்த எமது நடவடிக்கைகள் இன்னும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்ட பலரையும், பல நூறு அப்பாவி தமிழ் இளைஞர்கள், யுவதிகளையும் வழக்காடி விடுதலை செய்து, கொழும்பு பூங்கா வீதியில் அமைந் திருந்த எமது அலுவலகத் தில் தங்க வைத்து, அவர்க ளுக்குத் தேவையான அனை த்து உதவிகளையும் வழ ங்கி அவர்களை வீடுகளு க்கு அனுப்பி வைத்தோம்.

எமது அந்த செயற் பாடுகளின் தொடர்ச்சியாக கடந்த ஆட்சிக்காலத்திலும், சுமார் 12 ஆயிரம் தமிழ் இளைஞர், யுவதிகள் புனர் வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்படுவதற்கு ஆர்ப்பாட்டம் இல்லாமல், ஆட்சியாளர்களிடம் எனது கோரிக்கையை தொடர்ச்சியாக முன்வைத்து அதைச் சாதித்திருந்தேன்.

அதுபோல், சிறையில் சாகும்வரை உண்ணா விர தம் இருந்த தமிழ் கைதி களை பார்வையிட்டு, ஆறு தல் கூறவும், அவர்களின் விடுதலைக்காக முயற்சிக்கவும் அவர்களை பார்வையிட களுத்துறை சிறைக்குச் சென்றிருந்த என்னை தாக் கிய கைதிகளுக்கு மன்னிப் புக் கொடுக்க வேண்டும் என்றுகூறிய துடன், தற் கொலை யாளியை ஏவிவிட்டு என் னைக் கொலை செய்யும் திட்டத்திற்கு துணை போன குற்றச்சாட்டில் சிறை வைக்கப்பட்டிருந்தவரை, மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யுங்கள் என்று நீதிமன்றத்தி டமே கோரி க்கை விடுத்தும் இருந் தேன்.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்கான வரலாற்றில் அரசியல் கைதியாக நானும் இலங்கையில் பனாகொட இராணுவச் சிறையிலும், வெலிக்கடைச் சிறையிலும், மட்டக்களப்பு சிறையிலும் அடைக்கப்பட்ட அனுபவத்தை கொண்டிருப்பதால் தற்போது சிறைகளில் இருப்போரின் உணர்வுகளையும், தவிப்புகளையும் நன்கு அறிவேன்.

அரசியல் கைதியாக இருந்த என் போன்ற பல போராளிகளும், போராட்டத்திற்கு பங்களிப்புச் செய்தவர்களும் 1987ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தத்துடன் பொது மன்னிப்பு வழங்கப்பட்டவர்கள் என்பதையும் நினைவுபடுத்திக்கொள்கின்றேன்.

அந்த வகையில் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட அந்த காலத்திலேயே தமிழ் அரசியல் கைதிகளாக சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளவர்கள், பொது மன்னிப்பில் அடிப்படையில் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று குரல்கொடுத்து வருகின்றேன்.

துரதிர்ஷ்டவசமாக நான் தொடர்ந்து ஆட்சிய திகாரத்தில் இருக்காத காரணத்தினால், சிறைகளில் அவலப்படும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக செயற்பட முடியாமல் போய் விட்டது. இருந்த போதும், ஆட்சி மாற்றத்தின் பின்னரும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான கோரிக்கையை விடுத்து வருகின்றேன்.

அந்த அடிப்படையில் தமிழ் மக்களின் வாக்குகளை பெற்றுக்கொண்டு ஆட்சியமைத்த இந்த ஆட்சியாளர்கள், தமிழ் மக்களின் பிரதான பிரச்சினைகளைத் தீர்க்கத் தவறியிருக்கின்றார்கள். இந்நிலையில், சாகும்வரை உண்ணா விரதப் போராட்டத்தை முன்னெடுத்திருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்து தமிழ் மக்களுக்கு ஒரு நல்லிணக்க ஆறுதலை வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

தோட்டக்காணி விற்பனைக்கு

வடமராட்சி கிழக்கு,குடத்தனை சந்திக்கு அருகில் தொழிற்சாலைகள், பண்ணைகள் மற்றும் பாரிய தொழில் திட்டங்களுக்கு உகந்த 10 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:

0779561525,0771930232

(சி-4033)

மதுபோதையில் சாரத்தியம்; 5 நாட்களில் 50 பேர் கைது

நெல்லியடி பொலிஸார் நடவடிக்கை

(கரணவாய்)

நெல்லியடி பொலிஸார் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது மது போதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திச் சென்ற 50 பேர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் முகமாக பொலிஸ்மா அதிபரின் சுற்று நிருபத்திற்கு அமைவாக பொலிஸார் சோதனை நடவடிக்கை மேற்கொண்டிருந்தனர். இதில் கடந்த 27 ஆம் திகதியிலிருந்து முதலாம் திகதி வரையான ஐந்து நாட்களில் மட்டும் மது போதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திச் சென்ற 50 பேர் கைது செய்யப்பட்டதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர். (இ-60)

மரண அறிவித்தல்

திருமதி: இராசமலர் நடராஜா

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. இராசமலர் நடராஜா நேற்று (03.10.2018) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வரான பொன்னையா-நடராஜாவின் (அதிபர், அண்ணா தொழிலகம்) அன்பு மனைவியும், காலஞ் சென்ற தில்லைநடராஜா-புஷ்பமலர் ஆகியோரின் அன்பு மகளும், பொன்னையா-சின்னம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ் சென்ற புஷ்பராசாவின் பாசமிகு சகோதரியும், திவாகரன், கண்ணதாசன், தயாளினி ஆகியோரின் அன்புத் தாயாரும், அமுதா, தர்சினி, மதிமகன், கருணாகரன், மயூரன் ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான சாரதாமணிதேவி, விவேகானந்தன் மற்றும் புனிதவதி, அன்னபூரணம், அன்னலட்சுமி, மகாலட்சுமி, ஜெயலட்சுமி, யோகேஸ்வரி, பேரின்பநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனியும், மதிதயனன், மதிதயனி, பிரணவன், ராகவி, நந்தீகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் அறுதிக் கிரியைகள் இன்று (வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அவரது இல்லத்தில் (அண்ணா இல்லம், இணுவில்) நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
021 720 0800

அண்ணா தொழிலகம்,
இணுவில். (சி-4037)

இராசி பலன்

கிரகநிலை

சந்திராஷ்டமம்
பூராடம், உத்தராடம்

04.10.2018
புரட்டாதி 18, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 06.03 மணிக்கு
தசமி முன்னிரவு 7.50 மணிவரை
பூசம் முன்னிரவு 7.43 மணிவரை
சுபநேரம் 7.32-9.02 மணிவரை
இராகுகாலம் 1.32-3.02 மணிவரை
உலக விலங்கு தினம்
அமிர்தசித்தம்
வளவன்

மீனம்

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாபமுண்டு, போசன சுகமுண்டு.

மேடம்

எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், நண்பர்களின் சந்திப்புகள் மகிழ்ச்சி தரும் வகையில் அமையும், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்.

இடபம்

செய்தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியத்தில் முன்னேற்றம் கிடைக்கும்.

மிதுனம்

வார்த்தைகளில் நிதானம் தேவை, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், ஆன்மீக நாட்டம் கூடும்.

கும்பம்

எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பகைவர்கள் விலகுவர், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், கௌரவமான நாள்.

மகரம்

சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் பெறுவீர்கள், செய் தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம்.

செவ். கேது

ராகு. சந்

சனி

குரு. சுக். புத

சூரி.

கடகம்

வழிபாட்டில் நாட்டம் கூடும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், போசன சுகமுண்டு, சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள்.

சிம்மம்

மனதில் தேவையற்ற சஞ்சலங்கள் தோன்றி மறையும், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், வார்த்தைகளால் பிறரைக் கவர்வீர்கள்.

தனுசு

எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

விருச்சிகம்

ஒருசில நிர்ப்பந்தங்கள் ஏற்படலாம், பயணங்களால் பலனுண்டு, பெரியமனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

துலாம்

செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், விருந்து களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

கன்னி

எடுத்த காரியத்தில் முன்னேற்றம் பெறுவீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், போசன சுகமுண்டு, கௌரவமான நாள்.

'தேன் சொட்டிய இசைவேள்வியில் தினைத்தனர் இரசிகர்கள்'

இசைவேள்வி- 2018

அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும் ஸ்ரீ ராம நாம கானாமிர்த இசை வேள்வி நல்லூர் துர்க்காமணி மண்டபத்தில் அண்மையில்தேன் சொட்டும்படியாக நடைபெற்றது.

யாழ்ப்பாண மண்ணில் பழைய படி கர்நாடக சங்கீதம் ஓங்கியொலிப்பதற்கு வாய்ப்பான தருணங்களையும்கலைஞர்களையும் வரமாக்கியமைக்காக யாழ்.மண் கம்பன் கழகத்தினை உளமார வாழ்த்துகிறது.

இந்தியாவுக்குச்சென்று பார்த்து இரகசிக்க வேண்டிய இசைக்கச்சேரிகளை, யாழ்.மண்ணிலேயே அனுபவிக்க இறைவன் தந்த பேருபகாரத்திற்கு நாம் நன்றி கூறுவோமாக. ஆனால் பலர் இச் சந்தர்ப்பத்தினைப் பேறாக்காமல் போனதையிட்டு உள்ளம் தவிக்கிறது.

கம்பவாரிதியின் தூர நோக்கின் மகிமையால்,

- நம்நாட்டுக் கலைஞர்கள் வளர்க்கப்படுகிறார்கள்;
- இளங்கலைஞர்கள் ஊக்கமளிக்கப்படுகிறார்கள்;
- இந்தியக்கலைஞர்கள் மூலம் இசை நம் நாட்டில் பகிர்ப்படுகிறது;
- நம்நாட்டின் கலை வளம் காலந்தோறும் பேணப்படுகிறது.

நினைவரங்கம்

இசைவேள்வியானது நான்கு அரங்காக அரங்கேறியது.

இணுவில் ந.வீரமணி ஐயர் நினைவரங்கம்;

நாதஸ்வர வித்துவான் பி.எஸ். ஆறுமுகம்பிள்ளைநினைவரங்கம்;

நாதஸ்வர வித்துவான் என்.ஆர். கோவிந்தசாமி நினைவரங்கம்;

வயலின் வித்துவான் ஆர். ராதாகிருஷ்ணன் நினைவரங்கம்.

இதைவிட பண்இயல் அரங்கம், பயில் அரங்கங்களாகக் கம்பன் கோட்டத்தில் காலை வேளை மிகவும் பயன்பாடாக ரம்மியம் பெற்றது.

இசைப்பேரரங்கு

முதலாவது அரங்கு 21.09.2018 வெள்ளியன்று மாலை வழமையான சம்பிரதாய நிகழ்வுகளோடு ஆரம்பமானது. பத்மஸ்ரீ. கத்ரி. கோபால்நாத்தின் 'சக்ஸபோன்' வாத்திய இசைக்கச்சேரி இரசிகப் பெருமக்களைத் தேனிசை மழையில் மூழ்க வைத்தது. சக்ஸபோன் வாத்தியம் ஒரு அதிசயமான வாத்தியமாகும்.

கணீரென்ற நாதம்;
கச்சிதமான தோற்றம்;
அணிசெய்யும் தங்க வடிவ மணிப் பூண்கள்;
நாத வினோதப் பதக்கங்கள்;
மந்தர மத்திய தார ஸ்தாயிப் பிரவாகவாலாயம்;
இரசிக்கைமெய்மறக்கவைக்கும் மனோ தர்மம்;

யாவும் ஒருங்கேயமைந்த உன்னதமான மேற்கத்தேய வாத்தியம். தற்போது ஹிந்துஸ்தானி, கீழைத்தேய இசையரங்குகளைச் சோபிக்கவும் தேன் சொட்டவும் வைக்கிறது. சுமார் மூன்று மணித்தியாலங்கள் பேஷாக நடைபெற்றது. திருக்கல்யாண மண்டபத்தில் நிரம்பி வழிந்த இரகசியப் பெரு மக்களை, கல்யாண வசந்த இராகத்தினாலும் உருப்படியாலும், நிரவல், கற்பனா ஸ்வர விநோதங்களினாலும் மெய்சிலிர்க்க வைத்து வானோங்கிய புகழை கத்தரி கோபால் நாத் பெற்று நல்லூரின் வரங்களைத் தனதாக்கிக் கொண்டார்.

இவருக்கு அணிசெய் பின்னணிக் கலைஞர்களாக, அலங்கரித்த விரலிசை விற்பன்னர்களில் வயலின் பத்மஸ்ரீ. ஏ.கன்னியாகுமரி கலைமகளாகவே வாசித்த பேறு கொள்கின்றார்கள். மிருதங்கம் டில்லி சாய்ராமும் தபேலா ராஜேந்திரா நாகோட்டும் கெஞ்சிரா பி.எஸ். புருசோத்தமனும் மண்டபத்தையே அதிர வைத்தார்கள். பல சபாஷ்களைக் கைப்பற்றிய பேறான இசைக்கச்சேரி இதுவாகும்.

இரண்டாவது நாள்

பிரியா சகோதரிகளின் இசைக் கச்சேரி! அடேயப்பா! ஆழ்ந்த சங்கீதஞானம். கர்நாடக சங்கீத உலகைத் தத்தம் இசைப் புலமையால் கரங்கூப்ப வைக்கும் சகோதரிகள் மூன்று மணித்தியாலம் மண்டபத்தைக் கட்டிப் போட்டு இரசிக்கவைத்த பெருமையை பிரியா சகோதரிகள் பெற்றுக் கொள்கிறார்கள்.

தோடி இராகம்! அபாரக் கற்பனை.

தாமதமேன் சுவாமி என்ற சௌக்ககாலக் கீர்த்தனையும், நிரவல் கற்பனா ஸ்வரமும் மண்ணையும், விண்ணையும் அழைத்து மகிழ்வித்தன என்று பெருமிதம் கொள்ளலாம். ஏற்கனவே முதல் நாளில் வாசித்த பெருங் கலைஞர்களில் மிருதங்கமும், கெஞ்சிராவும் உச்சத்தைத் தொட்டு வாசித்திட வயலின் பாஸ்கரும் பிரியா சகோதரிகளின் மனோதர்ம சங்கீதத்தை அப்படியே வாங்கி பக்குவமாக வாசித்து கரகோஷத்தைப் பெற்றுக் கொண்டார்.

மேலும், குறிப்பிடும் படியாக 'தாமதம்தகாதையா' என்ற உருப்படி இப்பொழுதும் நெஞ்சினில் இனிக்கிறது!

மூன்றாவது நாள்

பாகேஸ்ரீ இராகமும், ஹிந்துஸ்தானி இசை வடிவமும், இராகம், தானம், பல்லவியும், தாள அமைப்பும் அற்புதம் பேசியது.

சங்கீத பிரமாகர் நெய்வேலி. சந்தான கோபாலனின் கட்டுப் பாட்டுக்குள் இரசிகப் பெருமக்கள் இசையால் பூரித்தனர். ஆண் குரல் மண்டபத்தை அரசாண்டது. அதீத மனோ தர்ம பலம் கொண்ட நெய்வேலியாரின் மேடைத் தானதர்மங்கள் கூடைக்குள் அள்ளிக் கொள்ளுமளவிற்கு இராகம், கீர்த்தனை, நிரவல், கற்பனா ஸ்வரம், தீர்மான முத்தாய்ப்பு, தாள வாத்தியப் பிரவாகம் அமைந்திருந்தது. ஆபோகி இராக ஆதிதாள வர்ணத்தோடு ஆரம்பித்த இசைக்கச்சேரி வாசஸ்பதி இராக சாம்ராஜ்ஜியத்தில் கோலோச்சியது.

அரி அயனும் காணா அரிய ஜோதியை மண்டபத்தில், சாகித்திய ரூபமாக, சஞ்சாரரூபமாக, ஸ்வர ரூபமாக நெய்வேலி சந்தான கோபாலன் காட்டிய விதம் அற்புதம் ஆகிற்று.

சாயிராமின் மிருதங்கம் கொடிக் கட்டிப் பறந்தது. அதிசயமான பிருக்கா வாசிப்பு.

புருசோத்தமனின் கெஞ்சிரா வாசிப்பு மண்டபத்தின் ஒவ்வொரு இருக்கைகளையும் பதம் பார்த்தது.

நெய்வேலியின் சுருதி யாழ். மண்ணில் நீடுவாழும். நீண் டொலி

நான்காம் நாள்

சங்கீத பிரம்ம சாம்ராஜ்ஜியத்திற்கு இரசிகப் பெருமக்களை அழைத்துச் செல்கின்ற பேருபகாரத்தை ஸ்ரீமதி பம்பாய் ஜெயஸ்ரீ வழங்கி தேனிசையை வாயூற இனிக்க வைக்கின்றார். அவரது இசையால் இறைவனை பார்த்துப் பசியாற முடிந்தது.

- எம்.எஸ்.சுப்புலட்சுமி போன்ற சுபாவமும் ஞானமும்;
- அபூர்வ இராகங்களின் ஆட்சி;
- சுருதிலய சாகித்தியப் பிடிப்பு;
- கச்சேரி தர்மம்;
- இரசிகர்களை வசீகரிக்கும் உருப்படிகள்;
- சபைக்கான கேள்வி நேரம்

யாவும் ஒருங்கேயமைந்த நிலையில், பம்பாய் ஜெயஸ்ரீயின் – காம்போதி இராக உருப்படியானது அடேயப்பா! கனகச்சிதமாக மண்டபத்தைக் காந்தமாகக் கவர்ந்திழுத்துக் கரகோஷமாக்கிற்று. ஜெயஸ்ரீயின் மனோதர்ம சாம்ராஜ்ஜியமானது நல்லூரில் இடம் பிடித்தது. மூன்று மணித்தியாலத்திற்கும் மேலாக இரசிகர்கள் தத்தம் வீட்டை மறந்து இசையில் பரவசமானார் கள்.

நாம் நாட்டுக் கலைஞர்கள்

பரமேஸ்வரி கணேசன், திரு மதி.அ.சுகன்யா, அ. ஆரூன், ஜெ.மதூஷிகன் ஆகியோருடைய இசை யரங்குகள் இந்தியக் கலைஞர்களும் மனம் திறந்து பாராட்டி மெச்சுமளவிற்கு பேஷாக மிளிர்ந்தன.

யாழ்ப்பாணக் கலைஞர்களின் ஆற்றலை வெளிப்படுத்த வல்ல ஒரு சந்தர்ப்பத்தினைக் கம்பன் கழகம் மேடையமைத்து வென்றெடுத்துள்ளது.

தியாகரன், ஜெயராமன் ஆகியோரது வயலின் வாத்திய அனுசரணையும் ரமணா, ரவிசங்கர், சிவசுந்தரசர்மா ஆகியோரது விரலிசைமான்மியங்களும் நம் நாட்டுப் பாடகர்களுக்கு மனோலயதான தர்மங்களை அள்ளிக் கொடுத்தது. மேலும் இராக மாலிகையாகப் பாடி தமிழுக்கு அமுதளித்த, ம.தயாபரன், அமிர்தலோஜனன், அமிர்தசிந்துஜன், சிவமைந்தன், பரந்தாமன், விக்னேஸ்வரன், சுரசாகித்தியன், தரங்கினி பாலமுருகன் ஆகிய ஒவ்வொரு கலைஞருக்கும் கடவுள் வாழ்த்துப்பாடிய கைங்கரியத்தின் பேறாக ஒவ்வொரு பதக்கம் சூட்டலாம்.

2019

கம்பன் கழக இசை வேள்விக்காக 2019 எப்போது வரம் தரும் என்பதனைச் சிரம்மேற் கொண்டு யாழ்.மண் ஒவ்வொரு நாளும் தவமிருக்கிறது.

இசை வேள்வியில் மதுடமென மிளிர்ந்த பஞ்சரத்தினம்

இசை ஆராதனை

24.09.2018 திங்களன்று காலை வேளை தரங்கினியின் இராக மாலிகையிலமைந்த கடவுள் வாழ்த்தோடு மண்டபங்களை கட்ட தியாகராஜ சுவாமிகளுடைய பஞ்சரத்தின இசை ஆராதனை மிகவும் பக்தி சிரத்தையோடு அனுஷ்டிக்கப்பட்டு நெய்வேலி சந்தான கோபாலன், பம்பாய் ஜெயஸ்ரீ முன்னிலையில், தவில் நாதஸ்வர வாய்ப்பாட்டு இசைக் கலைஞர்களால் இசைக்கப்பட்டது.

நாட்டை, கௌளை, ஆரபி, வராளி பாடிய பின்னர் ஸ்ரீராகம் பாடும் போது வானம் இரங்கி சோவென மழையாகப் பொழிந்தது.

இசை வேள்வி செய்தவர்களும் இரகசியப் பெருமக்களும் கம்பன் கழகமும் இந்த மண்ணும் யாவருமே வரம் பெற்றனர். மாற்றம் நிகழும்.

கே.எஸ்.சிவஞானராஜா

பாலர் பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி திக்கம் மத்திய சனசமூக நிலையத்தால் நடத்தப்படும் பாலர் பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா நாளை மறுதினம் 6ஆம் திகதி சனிக் கிழமை பிற்பகல் 1.30மணி சுறோம்படி ஆலய முன்றலில் திக்கம் சனசமூக நிலைய உப தலைவர் க.சுதேஸ் தலைமையில் நடைபெறும். இதில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச சபை உபதவிசாளர் கு.தினேஸ், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண ஆரம்பக்கல்வி பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ்.சற்குணராசா, கௌரவ விருந்தினர்களாக முன்னாள் பாலர் பாடசாலை ஆசிரியர் திருமதி நடராஜசிங்கம் இந்திராதேவி, திருமதி வசந்தன் சிவஞானம்மா, திருமதி கதிர்காமத்தம்பி கமலவேணி ஆகியோர் கலந்து கொள்வர். (இ

சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம்

(இருபாலை)

உரும்பிராய் வடக்கு கற்பகப்பிள்ளையார் வீதியைச் சேர்ந்த வைத்திய கலாநிதி வே.கணேசவேல் அகில இலங்கை சமாதான நீதிவானாக மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

கோப்பாய் பிரதேச மத்தியஸ்தர் சபை உறுப்பினரும் கோப்பாய் பிரதேச தேசோதயசபை உறுப்பினருமான இவர் பிரபல சமூக சேவையாளரும் இளவாலை செண்ஹென்றி அரசர் கல்லூரி பழையமாணவரும் ஆவார். (இ-134)

வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த இளைஞர்களுக்கு பொழுதுபோக்கு திட்டம்

யாழ்.சிவில் பாதுகாப்புக் கூட்டத்தில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

கிராமங்கள் தோறும் இளைஞர் கழகங்களை அமைத்து இளைஞர்களுக்கான பொழுதுபோக்கு அம்சங்களை நடைமுறைப்படுத்தும் செயற்றிட்டத்தை ஆரம்பிக்குமாறு யாழ்.மாவட்ட செயலகத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட சிவில் பாதுகாப்பு குழுக்கூட்டம் நேற்று முன்தினம் யாழ் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. அதில் இளைஞர்கள் வன்முறையில் ஈடுபடுவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

அதற்கு இளைஞர்களுக்கான சுற்றுச்சூழல் சிறந்த முறையில் அமையப்பெற்றால் இளைஞர்களை நல்வழிப்படுத்த முடியும் என சுட்டிக்காட்டப்பட்டது.

இளைஞர்கள் நல்ல முறையில் பொழுதை களிப்பதற்கான வசதிகள் இல்லாத காரணத்தினால் அவர்கள் தமக்கென குழுக்கள் அமைக்கிறார்கள், அதன் காரணமாக தீய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு தள்ளப்படுகிறார்கள். இதனால் வன்முறைகள் அதிகரிக்கிறது.

எனவே கிராமங்கள் தோறும் இளைஞர் கழகங்களை அமைத்து அங்கு அவர்களுக்கு தேவையான பொழுதுபோக்கு அம்சங்களை செயற்படுத்தும் திட்டத்தை ஆரம்பிக்க வேண்டும் என்றும் அதற்கான ஆயத்தங்களை செய்ய வேண்டும் எனறும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதே போன்று வெளி இடங்களில் இளைஞர்களை நல்வழிப்படுத்தும் செயற்றிட்டங்கள் உருவாக்கப்பட்டாலும் வீடுகளில் கட்டுப்பாட்டுடன் வளர்ப்பதற்கு பெற்றோர்உதவ வேண்டும் என வும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-9)

சிறுமி ரெஜினா கொலை வழக்கு

சந்தேக நபர்களின் விளக்கமறியல் நீடிப்பு

யாழ்சுழிபுரம்சிறுமிரெஜினா கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் மூவரின் விளக்கமறியல் எதிர் வரும் 16 ஆம் திகதி வரை மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு மல்லாகம் நீதிமன்ற நீதவான் ஆசிர்வாதம் கிறேசியன் அலெக்ஸ்ராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. கொலை செய்யப்பட்ட சிறுமி ரெஜினா சார்பில்சட்டத்தரணிகசுகாஷ் ஆஜராகியிருந்தார்.

இதன் போது நீதவான் சந்தேகநபர்களின் விளக்க மறியலை நீடித்து உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணம் -சுழிபுரம் காட்டுப்புலம் பகுதியில் கடந்தஜூன்மாதம்25ஆம்திகதி சிறுமி ரெஜினா பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டநிலையில்கிணற்றிலிருந்து அவரது சடலம் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(மு)

சின்மயா மிஷன்

யாழ்ப்பாணம் வழங்கும்

ஆன்மீக அருளுரை

(தமிழில்)

இந்தியாவில் இருந்து வருகை தரும்

சுவாமி கிருஷ்ணாத்மானந்தா அவர்கள்

04.10.2018

அறிவியலும் சாஸ்திரமும்

05.10.2018

நிகழ்காலத்தில் வாழும் கலை

06.10.2018

வெற்றியின் இரகசியம்

காலம்:- 04.10.2018-06.10.2018

நேரம்:- மாலை 6.00 -7.30

இடம்:- நல்லூர் துர்க்கா மணி மண்டபம்

அனைவரும் வருக! அனுமதி இலவசம்!

021 222 3447

077 857 3447

சின்மயா மிஷன்
இல. 09, செட்டித்தெரு
ஒழுங்கை, நல்லூர். (இ

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

இவர்களுக்கு மணமகள் தேவை	இவர்களுக்கு மணமகன் தேவை
பிறப்பு: 1993 இந்து நட்சத்திரம்: உத்தராடம் கி.பா: 68 செவ் 8 இல் உயரம்: 175cm தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில் தொ.இ: B/8930	பிறப்பு: 1997 இந்து நட்சத்திரம்: சுவாதி கி.பா: செவ் 2 இல் தகைமை/தொழில்:பட்டதாரி தொ.இ: G/8951
பிறப்பு: 1975 இந்து நட்சத்திரம்: அவிட்டம் கி.பா: செவ் 1 இல் உயரம்: 6' தகைமை/தொழில்:O/L/வியாபாரம் தொ.இ: B/8932	பிறப்பு: 1985 இந்து நட்சத்திரம்: திருவோணம் கி.பா: 28 செவ் 2 இல் உயரம்: 5'8" தகைமை/தொழில்:HNDA, LLB/ அரச தொழில் தொ.இ: G/8953
பிறப்பு: 1980 இந்து நட்சத்திரம்: உத்திரட்டாதி கி.பா: 24 சூரிசெவ் 6 இல் உயரம்: 166cm தகைமை/தொழில்: A/L/ முகாமையாளர் தொ.இ: B/8933	பிறப்பு: 1996 இந்து நட்சத்திரம்: விசாகம் கி.பா: செவ் 8 இல் உயரம்: 5' தகைமை/தொழில்:A/L எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும் தொ.இ: G/8958
பிறப்பு: 1985 இந்து நட்சத்திரம்: கார்த்திகை கி.பா: 21 உயரம்: 5'5" தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில் தொ.இ: B/8935	பிறப்பு: 1992 இந்து நட்சத்திரம்: உத்தராடம் உயரம்: 170cm தகைமை/தொழில்: வைத்தியர் (அரச) சுவிஸ் எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும் தொ.இ: G/8959

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு
சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



சாயி இல்லம்

மேற்படி சாயி இல்லம் நல்ல லஷ்மி என்ற பெயருடைய அம்மையாரால் 1967 இல் ஸ்தாபிக்கப்பட்டது. பிறவியிலேயே கண் பார்வையற்ற அவர் பெற்றோரின் ஆதரவால் பாடுவதிலும் நரம்புக் கருவியை மீட்டுவதிலும் தேர்ச்சி பெற்று விளங்கினார். அவரின் பஜனையால் ஈர்க்கப்பட்டு பலர் அங்கு செயலாற்றியதால் அது தரம்மிக்க பஜனை நிலையமாகவும் சேவை நிலையமாகவும் மிளிரத் தொடங்கியது. தனது இறுதிக்காலம் நெருங்குவதை உணர்ந்த அவர், சாயி இல்லத்தையும் அதனை நிர்வகிக்கும் பொறுப்பையும் திரு.மாணிக்கம் ரவிச்சந்திரனுக்கு சட்டரீதியாக ஒப்படைத்தார்.

அன்றிலிருந்து ரவிச்சந்திரனின் அயராத உழைப்பினாலும் முயற் சியாலும் பல்வேறு செயற்பாடுகள் கல்வி, சேவை போன்றவை ஆரம்ப மாகின. பின்னர் அவர் புலம்பெயர்ந்து கனடா சென்ற பொழுதிலும் அங்கிருந்த வண்ணம் சேவைச் செயற்பாடுகளை விரிவுபடுத்தத் தொடங்கினார்.

அதில் முக்கியமானது ஞாயிறு தோறும் நிகழ்ந்த நாராயண சேவை எனப்படும் அன்னதான நிகழ்வாகும். 2012 இலிருந்து வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள ஆற்றலுள்ள மாணவர்களுக்கு ஆசிரியர்களின் பரிந்துரையுடன் கல்விக்கான பண உதவி வழங்கும் சேவை ஆரம்பமானது. 2017 ம் ஆண்டு ஆரம்பித்த சீரடி சாயி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, சீரடியிலிருந்து கொண்டு வரப்பட்ட சீரடி சாயி பாபாவின் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டது.

அதன்பின் சேவைகள் விஸ்தரிக்கப் பட்டன. வாரம்தோறும் வியாழன், ஞாயிறு தினங்களில் நாராயண சேவை நடைபெறுகிறது. நாள்தோறும் நான்கு நேரப் பூசைகள் நடை பெற்று பக்தர்களும் ஆரத்தி காட்டி வணங்க வாய்ப்புக் கொடுக் கப்படுகிறது. வியாழன் மாலையில் சாயி பஜனையும் இடம்பெறுகிறது. வெகு விரைவில் விழுமியக் கல்வி வகுப்பும், நுண்கலை வகுப்புகளும் ஆரம்ப மாக இருக்கின்றன.

இளம் சந்ததியினரை இறை நாட்டம் உள்ளவர்களாகவும், அவர்தம் பாடசாலை கல்வியில் மேம்படவும் உதவும் வகையில் இதற்கான கல்வித் திட்டம் போடப்படுகிறது. சாயியின் அருளால் இச் சேவைகள் வெற்றிகரமாக நிறை வேறும் என்பது எமது அசையாத நம்பிக்கை. சாயியில் நம்பிக்கையும், சமூக நலனில் அக்கறையும் கொண்டவர்கள் தத்தம் துறைசார்ந்த சேவைப் பணிகளில் ஈடுபட நல்ல தொரு வாய்ப்பு உண்டாகியுள்ளது. அனை வரும் அன்புடன் வரவேற்கப்படுகிறார்கள்.

சாயி இல்லம்
359/34, நல்லலஷ்மி அவெனியு,
கோவில்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் கோவில் பின் வீதியில் மாங்கோஸ் உணவகத்திற்கு அருகில்) 076 449 8111



முல்லைத்தீவில் நிலக்கடலை உற்பத்தி முன்மாதிரி செயற்றிட்ட ஆரம்ப நிகழ்வு

தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு உபகரணங்கள் வழங்கல்

(முல்லைத்தீவு)

நிலக்கடலை உற்பத்தி செயற்றிட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நாளை மறுதினம் 6 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட முத்தையன்கட்டு நிலக்கடலை உற்பத்தியாளர் செய்கை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்த ஆரம்ப நிகழ்வில் கமத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர, பிரதி கமத்தொழில் அமைச்சர் அங்கஜன் இராமநாதன், வடக்கு மாகாண விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிலக்கடலை விவசாயிகளின் காணிகளில் செவ்வய வீதியாக நிலக்கடலை நாட்டப்படுவதனை தொடர்ந்து நீர் இறைக்கும் இயந்திரம், பிளாஸ்ரிக் கூடைகள், சொட்டு நீர்ப்பாசன உபகரணங்கள், நிலக்கடலை பயிரிடும் இயந்திரம், நிலக் கடலையைப் பிரித்தெடுக்கும் உபகரணங்கள் என்பன தெரிவுசெய்யப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்படும். (2-9)



இனத்திற்காக போராடியவர்களை சிறையில் வைத்திருப்பது ஏற்கமுடியாத செயலாகும்

வடக்கு மாகாணசபை உறுப்பினர் ரவிகரன் ஆதங்கம்

(பனிக்கன்குளம்)

ஆட்சியிலுள்ள அரசானது மிக மோசமான குற்றங்களை செய்தவர்களை நடமாடவிட்டுக் கொண்டு சாதாரணமாக இனத்திற்காகப் போராடியவர்களை பல ஆண்டுகளாக சிறையில் வைத்துக் கொண்டிருப்பது ஏற்றுக் கொள்ள முடியாத செயல் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.

அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரி, நேற்று முன்தினம் முல்லைத்தீவில் கவனயீர்ப்பு ஒன்று இடம் பெற்றது. இதில் வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

போரக்காலத்தில் குற்றங்கள் என்று சொல்லி பிடிக்கப்பட்ட அரசியல் கைதிகள் என்று சொல்லப்படுபவர்கள் மீதான விசாரணை நடத்தி புனர்வாழ்வு அளித்து அவர்கள் நல்லாட்சியில் விடுதலை செய்யப்பட்டிருக்கவேண்டும்.

ஒன்பது ஆண்டுகள் கடந்த நிலையில் கூட அவர்கள் விடுதலை செய்யப்படாமல் பலர் அங்கே தவித்துக் கொண்டும் குடும்பங்களை எண்ணி உண்ணாவிரத போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

மக்கள் போராட்டங்களுக்கு மரியாதை இல்லாத நிலையைத் தான் நல்லாட்சி அரசு ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றது. வீதிகளில் நின்று ஒவ்வொரு விடயத்திற்கும் போராடுகின்றோம். தனது இனத்திற்கு ஒரு முகத்தினையும் தமிழ் இனத்திற்கு ஒரு முகத்தினையும் காட்டிக்கொண்டு நல்லாட்சி அரசானது வேடிக்கையான விளையாட்டுக்களை செய்து கொண்டிருக்கின்றது.

ஒரு நல்லாட்சி அரசு என்ற பெயருடன் இருப்பதாக இருந்தால் நல்லாட்சி அரசிற்குரிய கோட்பாடுகளை மதித்து செயற்படவேண்டும்என்று அவர் தெரிவித்துள்ளார். (2)

புதிய பேருந்து நிலையத்தினுள்

பேருந்தைக் கொண்டு சென்ற சாரதி, நடத்துநர் கைதாகினர்

(குருமன்காடு)

வவுனியா புதிய பேருந்து நிலையத்தினுள் பேருந்தைக் கொண்டு சென்ற இ.போ.சபை சாரதி மற்றும் நடத்துநரை வவுனியா பொலிஸார் நேற்று கைது செய்து விளக்கமறியலில் வைத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து அக்கரைப்பற்று நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபையின் வவுனியா சாலைக்குரிய பேருந்து ஒன்று கடந்த முதலாம் திகதி திங்கட்கிழமை வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் தரித்து நின்று பயணிகளை ஏற்றிச் சென்றுள்ளது.

மாகாணங்களுக்கிடையில் சேவையில் ஈடுபடும் பேருந்துகள் புதிய பேருந்து நிலையத்தினுள் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், புதிய பேருந்து நிலையத்திற்கு பேருந்தினைக்கொண்டு சென்றமை என குற்றம் சாட்டப்பட்டு குறித்த இ.போ.ச. பேருந்தின் சாரதி மற்றும் நடத்துநரை வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு நேற்றைய தினம் சமுகமளிக்குமாறு நேற்று முன்தினம் அழைப்பாணை விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் பொலிஸ் நிலையத்திற்கு நேற்று சமுகமளித்த இ.போ.சபை பேருந்தின் சாரதி, நடத்துநரை பொலிஸார் கைது செய்து விளக்கமறியலில் வைத்துள்ளனர். (2-250)

மன்னார் சதொச வளாக மனிதப் புதைகுழியை இலங்கைக்கான அமெரிக்க தூதரக அதிகாரி நேற்று பார்வையிட்டார்

(மன்னார்)

மன்னார் சதொச வளாக மனித எலும்புக் கூடுகள் அகழ்வுப்பணியை இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரியொருவர் நேற்றைய தினம் பார்வையிட்டுள்ளார்.

மன்னார் சதொச வளாகத்தில் இதுவரை 151 மனித எச்சங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதிலும் 144 மனித எச்சங்கள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அடையாளப்படுத்தப்பட முடியாத சில தடயப் பொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த பொருட்கள் எவ்வகையானது என்பது தொடர்பில் இறுதிக்கட்ட பரிசோதனையின் பின்னரே தெரியுமென சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மன்னார் "சதொச" வளாகத்தில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வந்த மனித எலும்புக்கூடுகள் அகழ்வுப் பணிகள் நேற்று 79 ஆவது தடவையாக மீண்டும் அகழ்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட நீதவான் ரி.சரவணராஜா மேற்பார்வையில் சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷ தலைமையில் அகழ்வுப் பணிகள் இடம் பெற்று வருகின்றன.

பல்வேறு கேள்விகள், சந்தேகங்களை ஏற்படுத்தக் கூடிய வகையில் எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டு வருகின்ற நிலையில் நேற்று அகழ்வுப் பணிக்கு பொறுப்பான சட்ட வைத்திய அதிகாரி ஊடகவியலாளர்களைச் சந்தித்து உரையாடல் ஒன்றை மேற்கொண்டார்.

குறித்த உரையாடலின் போது இதுவரை 151 மனித எச்சங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதிலும் 144 மனித எச்சங்கள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த சட்டவைத்திய அதிகாரி கடந்த சில நாட்களாக தொடர்ச்சியான மழை பெய்வதனால் அகழ்வுப் பணிகளை மேற்கொள்வதில் சிரமம் காணப்படுவதாகவும் அதனால் குறித்த வளாகம்முழுவதையும்மூடவேண்டிய தேவை இருப்பதனால் அவ் ஏற்பாடுகள் தொடர்பாக தெரியப்படுத்தியுள்ளதாகவும் உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் மூலம் பாதுகாப்பான முறையில் குறித்த வளாகத்தை மூட முடியாத நிலை காணப்படுகின்றது. அதனால் வெளிநாடுகளில் இருந்து குறித்த பொருளை இறக்குமதி செய்வதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுவதாகவும் தெரிவித்தார்.

குறித்த வளாகத்தில் இருந்து ஆடைகளுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் தடயப் பொருட்கள் கிடைத்தனவா? என ஊடகவியலாளர்களினால் கேல்வி எழுப்பப்பட்டது. குறித்த கேள்விக்கு பதிலளித்த சட்ட வைத்திய அதிகாரி இதுவரை ஆடைகளுடன் சம்பந்தப்பட்ட எந்தவொரு தடயப் பொருட்களும் அடையாளப்படுத்தப்படவில்லை எனவும் ஆனாலும் அடையாளப்படுத்த முடியாத நிலையில் சில தடயப் பொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் ஆனால் குறிப்பிட்ட பொருட்கள் இவ்வகையைச் சேர்ந்தவை என்பது தொடர்பான துல்லியமான தகவல் அறியப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

அதேநேரத்தில் நேற்றையதினம் மன்னார் மனிதப் புதைகுழியைப் பார்வையிடுவதற்காக இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தில் இருந்து அதிகாரி ஒருவர் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

வலையன்கட்டில் குடிநீர் விநியோகத்திட்டம் முழுமைபெறாது கைவிடப்பட்ட நிலையில்

(கண்டாவளை)

மன்னார் வலையன்கட்டுப்பகுதியில் மீள்குடியேற்றத்தின் போது பல மில்லியன் ரூபாய் செலவில் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் அமைக்கப்பட்ட குடிநீர் விநியோகத்திட்டம் முழுமைப்படுத்தப்படாது கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

மடுப்பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட வலையன்கட்டுக்கிராமத்தில் மக்கள் குடியேறியதைத்தொடர்ந்து இப்பிரதேசத்தின் குடிநீர்த் தேவை தொடர்பில் கிராம மட்ட பொது அமைப்புக்களும் கிராம அமைப்புக்களும் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் நிதியுதவியுடன் இப்பிரதேசத்திற்கான குடிநீர் விநியோகத்திட்டம் பல மில்லியன் ரூபாய் செலவில் பாரியளவில் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த திட்டமானது முழுமைப்படுத்தப்படாது இடை நடுவில் விடப்பட்டுள்ளது.

அதாவது, பிரதான நீர்த்தாங்கி அமைக்கப்பட்ட போதும், அதன் வேலைகள் முழுமைப்படுத்தப்படாத நிலையிலும் ஏனைய விநியோகக்குழாய்கள் பொருத்தப்பட்டு அவையும் இடைநடுவில் விடப்பட்டுள்ளதுடன், குடிநீர் விநியோகத்திற்காக அமைக்கப்பட்ட கிணறு பற்றைக்காடுகளால் மூடப்பட்ட நிலையில் காணப்பட்டது. தற்போது பயன்பாட்டற்றுக் காணப்படுவதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். (2-315)

சிவபுரம் ஆற்றில் மேம்பாலம் அமைக்க 20மில். நிதி தேவை

(கண்டாவளை)

முல்லைத்தீவு பாண்டியன்குளம் சிவபுரம் வீதியின் தாழ்பாலத்திற்கு பதிலாக மேம்பாலம் அமைப்பதற்கு 20 மில்லியன் ரூபாய் நிதி தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பாண்டியன்குளம், நட்டாங்கண்டல் ஆகிய பகுதிகளுக்கான பிரதான வீதியாகக்காணப்படும் சிவபுரம் பாண்டியன்குளம் வீதியில் சிவபுரம் ஆற்றில் காணப்படுகின்ற தாழ்பாலம் கடுமையாக சேதமடைந்து காணப்படுகின்றது.

இந்நிலையில் இதற்கான புதிய பாலத்தை அமைக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்தப் பாலத்திற்குப் பதிலாக மேம்பாலம் அமைப்பதற்கு கிட்டத்தட்ட 20 மில்லியன் ரூபாய் நிதி தேவைப்படுவதாக மாந்தை கிழக்கு பிரதேச சபையினால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

கோரக்கன்கட்டு கொல்களத்தில் பசுமாடுகள் சட்டவிரோதமான முறையில் வெட்டப்படுகின்றன

மருத்துவ அறிக்கையின்றி வெட்டப்பட்டமை அவதானிப்பு – கரைச்சிப் பிரதேச சபை தவிசாளர்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட கோரக்கன்கட்டு கொல்களத்தில் சட்டவிரோதமான முறையில் பசுமாடுகள் இறைச்சிக்காக வெட்டப்படுவது தொடர்பில் பல்வேறு தரப்பினரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட கோரக்கன்கட்டுப் பகுதியில் அமைந்துள்ள கொல்களத்தில் தினமும் சட்டவிரோதமான முறையில் பசு மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்பட்டு வருகின்றன.

அதாவது இறைச்சிக்காக பசுமாடுகள் வெட்டுவது தடை செய்யப்பட்டுள்ள போதும் தினமும் பசுமாடுகள் இறைச்சிக்காக வெட்டப்படுவதாகவும் உரிய மருத்துவ அறிக்கைகள் இன்றியும் இரவு வேளைகளில் மாடுகள் கொண்டு வரப்பட்டு வெட்டப்படுவதாகவும் பல்வேறு தரப்பினரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நேற்றையதினம் நல்லினப்பசு மாடுகள் இரண்டு இறைச்சிக்காக வெட்டப்பட்டுள்ளதுடன் ஆறு மாதங்களேயான பசுக்கன்று ஒன்றும் இறைச்சிக்காக வெட்டுவதற்கும் தயார் நிலையில் கட்டப்பட்டிருந்தது.

இதேவேளை கோரக்கன்கட்டு, முரசுமோட்டை, பன்னங்கண்டி, பரந்தன் ஆகிய பகுதிகளில் வாழ்வாதாரத் தேவைகளுக்கு வளர்க்கப்படும் கால்நடைகள் இரவு வேளைகளில் திருடப்படுகின்றன என்றும் இவ்வாறான கால்நடைகளும் வெட்டப்படலாம் என்றும் பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளர் அ.வேழமாலிகிதனிடம் வினவியபோது, இதுதொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்று நேற்று முன்தினம் நேரடியாகச் சென்று பார்வையிட்டபோது பசுமாடுகள் உரிய மருத்துவ அறிக்கைகளின்றி வெட்டப்பட்டுள்ளமை தொடர்பில் அவதானிக்கப்பட்டுள்ளது.

இங்கிருந்து இறைச்சி எந்த அனுமதியும் இன்றி தினமும் பச்சிலைப்பள்ளி பிரதேசத்திற்கு எடுத்துச்செல்லப்படுவது தொடர்பிலும் தெரிவித்துள்ளார். (2-315)

தேசிய மட்டத்தில் தற்காப்புக்கலையில் வெள்ளிப்பதக்கம் வென்ற மாணவி கௌரவிப்பு

தேசிய மட்டத்தில் தற் காப்புக்கலையில் வெள்ளிப் பதக்கம் பெற்று சாதனை புரிந்த வவு/ இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலய பாடசாலை மாணவியான மதிதரன் மோஷிதாவை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இரவு 7.30மணியளவில்வாடி வீடு மண்டபத்தில் வர்த்தகர் நலன்புரிச்சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

கொழும்பில் இடம்பெற்ற தேசிய மட்டத்தில் தற்காப்புக் கலையில் வெள்ளிப்பதக்கம் பெற்று பாடசாலைக்கும், வவுனியா மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்த மாணவியை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நலன்புரிச்சங்கத் தலைர் ஸ்ரீஸ்கந்தராஜா தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மாணவியை புயிற்றுவித்த ஆசிரியரும் கலந்து கொண்டதுடன் அவருக்கும் நிகழ்வில் வைத்து கௌரவிப்பு செய்யப்பட்டது. மாணவியின் பெற்றோர்கள், வர்த்தகர் நலன்புரிச்சங்க உறுப்பினர்கள், பொது அமைப்பினர் எனப்பலரும் கலந்து கொண்டனர். (2-281)

பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகளின் ஊடாக தினமும் அச்சத்துடன் பயணிக்கின்றோம் பொதுமக்கள் சுட்டிக்காட்டு

(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படுகின்ற பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகளால் தினமும் ஆபத்தை எதிர்நோக்குவதாக பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் முறிகண்டியிலிருந்து முகமாலை வரை சுமார் 25 இற்கு மேற்பட்ட பாதுகாப்பற்ற புகையிரதக்கடவைகள் காணப்படுகின்றன. இதில் பல முக்கியமானவை நாளாந்தம் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் பயணிக்கின்ற வீதிகளாகவும் காணப்படுகின்றன.

இந்த பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகளில் கடந்த காலங்களில் பல விபத்துக்களும் இடம்பெற்று பலரும் உயிரிழந்துள்ளனர்.

எனவே இப் பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகளின் நிலை மைகளை கருத்தில் எடுத்து பாதுகாப்பான புகையிரதக் கடவைகளாக மாற்றுவதற்கு உரிய பொருத்தமான நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு பொதுமக் கள் கோருகின்றனர். (2-312)

முல்லையில் டெங்கு விழிப்புணர்வு செயற்பாடுகள் ஆயிரத்து 92 இடங்கள் சோதனை; 528 இடங்கள் அடையாளம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட டெங்கு தொடர்பான சோதனை நடவடிக்கையின் போது 528 இடங்களில் டெங்கு பரவக் கூடிய சூழல் அடையாளம் காணப்பட்டது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் டெங்கு விழிப்புணர்வு செயற்பாடுகள் கடந்த வாரம் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன்போது சுமார் ஆயிரத்து 92 இடங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு இதில் 528 இடங்களில் டெங்கு பரவக்கூடிய சூழல் காணப்பட்டது. அத்துடன், ஏழு இடங்க ளில் டெங்கு நோயை பரப் பக்கூடிய குடம்பிகள் அடையாளம் காணப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன என்றும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

ஐறோட் இரண்டாம் திட்டத்தின் கீழ் புனரமைப்பதற்கு 47 வீதிகள் தெரிவு

(கண்டாவளை) -

கிளிநொச்சி மாவட்டத்தில் ஐறோட் இரண்டாம் திட்டத்தின் கீழ் 181.78 கிலோ மீற்றர் நீளமான 47 வீதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் புனரமைக்கப்படாதுள்ள வீதிகள் பல ஐறோட் திட்டத்தின் கீழ் புனரமைப்புக்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அதாவது, கண்டாவளை பிரதேச செயலர் பிரிவின் கீழ் 33.14 கிலோமீற்றர் நீளமான 13 வீதிகளும் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் 75.34 கிலோ மீற்றர் நீளமான 21 வீதிகளும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவின்கீழ் 15.24 கிலோ மீற்றர் நீளமான நான்கு வீதிகளும் பூநகரிபிரதேசசெயலர்பிரிவின் கீழ் 58.06 கிலோ மீற்றர் நீளமான 9 வீதிகளும் இவ்வாறு புனரமைப்புக்களுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன என உள்ளூராட்சி திணைக்களத்தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

அபிவிருத்தி தொடர்பான ஆராய்வு கலந்துரையாடல்

(கண்டாவளை)

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் மக்கள் பங்கேற்பு அபிவிருத்தி தொடர்பான ஆராய்வு கலந்துரையாடல் சபையின் சபா மண்டபத்தில் நடைபெற்றது.

பவ்ரல் அமைப்பினது ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் அனைத்து வட்டாரங்களை பிரதிநிதித் துவப்படுத்தும் வகையில் பொது அமைப்புக்கள் மற்றும்பவ்ரல் நிறுவன தொண்டர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன், பிரதேசத்தின் அபிவிருத்தி என்பது எமக்கு எவ்வளவு முக்கியமோ அதைவிட எமக்கு அரசியல் தீர்வு முக்கியம். ஏனெனில் ஒரு நிலையான தீர்வு இல்லாமல் நாம் மேற்கொள்ளும் அபிவிருத்தி அரசியல் சூழலில் பாதகமான மாற்றம் ஏற்பட்டால் அழிந்து விடும். ஆகவே நாம் பிரதேச அபிவிருத்தியை ஏற்படுத்துகின்ற அதே நேரம் அரசியல்தீர்வை பெறுவதற்கும்முயற்சிக்க வேண்டும் என்றார்.

அதனைத் தொடர்ந்து பிரதேச அபிவிருத்திகளை மக்கள் பங்கேற்புடன் மேற்கொள்வது மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகளின் வினைத் திறனை எவ்வாறு அதிகரிப்பது என்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. (2-315)

முள்பள்ளிக்கு கட்டடம் கையளிப்பு

(கிளிநொச்சி)

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி விசுவமடு தென்னிந்திய திருச்சபை முன்பள்ளிக்கு புதிய கட்டடம் கையளிக்கப்பட்டது. விசுவமடு பகுதியில் குறித்த திருச்சபையினால் நீண்ட காலமாக பாலர் பாடசாலை இயக்கப்பட்டு வந்த நிலையில் யுத்தம் காரணமாக சேதமடைந்திருந்தது.

இந்நிலையில் குறித்த சிறார்களின் நலன் கருதி தென்னிந்திய திருச்சபை நிறைவாழ்வு மையத்தினால் புதிதாக நிர்மாணிக்கப்பட்டகுறித்தமுன்பள்ளி அண்மையில் மாணவர் பயன்பாட்டிற்கு கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் தென் னிந்திய திருச்சபையின் பேராயர் அதி வண கலாநிதி டானியல் செ.தியாகராஜா, நிறைவாழ்வு மைய இயக்குநர் தயாளினி தியாகராஜா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (2)

முல்லை.சாலைக்கு 32 பேருந்துகள் தேவை; 20 பேருந்துகளே சேவையில்

சாலை முகாமையாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்களுக்கான நிறைவான சேவைகளை வழங்குவதற்கு போதியவசதிகள் இன்மை மற்றும் தனியார் போக்குவரத்துச் சேவைகளின் அத்துமீறல்கள் தடையாகவுள்ளன என இலங்கை போக்குவரத்து சபையின் முல்லைத்தீவு சாலை முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய பகுதியாகக் காணப்படும் கோட்டையகட்டியகுளம், தென்னியன்குளம், நட்டாங்கண்டல், முத்தையன்கட்டு ஆகிய பகுதிகளில் சீரான போக்குவரத்து வசதிகளின்றி பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் அன்றாடம் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

தமது பகுதிகளுக்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

இதுதொடர்பில் இலங்கை போக்குவரத்துச் சபையின் முல்லைத்தீவு சாலை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு வினவியபோது,

முல்லைத்தீவு சாலையில் நீண்டகாலம்சேவையில் ஈடுபடுத்தப்பட்ட பழைய பேருந்துகளே தற்போது சேவையில் ஈடுபடுகின்றன.

பொறியியலாளர்கள் உள்ளிட்ட ஆளணிகள் நிரப்பப் படாமல் உள்ளன. அத்துடன் சாரதிகள், நடத்துநர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

தற்போது முல்லைத்தீவு சாலைக்கு 32 வரையான பேருந்துகள் தேவையாகவுள்ளன. ஆனால் தற் போது 24 பேருந்துகள் உள்ளன. இதில் 20 பேருந்துகளே சேவைகளுக்குட் படுத்தப் படுகின்றன.

இதனைவிட தனியார் போக்குவரத்துச் சேவையினர் தமது சேவைகளுக்கு இடையூறு விளைவித்து வருகின்றனர்.

இதுதொடர்பில் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் சாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது. (2-315)

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தினம் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி சதாசிவம் அமிர்தலிங்கம் தலைமையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஓய்வுபெற்ற அதிபர் ஆறுமுகம் சிறீஸ்கந்தமூர்த்தி கலந்து கொண்டார்.

(படங்கள் - சக்தி)

'ஆரோக்கியமான வாழ்வு வாழ்ந்து நீரிழிவை வெற்றி கொள்வோம்'

மாணவர்களுக்கு கட்டுரை, சித்திரப் போட்டிகள்

சர்வதேச நீரிழிவு தினத்தை (நவம்பர்-14) முன்னிட்டு யாழ். போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை நிலையம் வடமாகாண பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான கட்டுரை, சித்திரப் போட்டிகளை நடத்தத் தீர்மானித்துள்ளது.

போட்டி விளக்க முறைகளுக்கேற்ப போட்டி சம்பந்தமான சகல ஆக்கப் பிரதிகளும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆக்கப்பிரதிகளை முழுமைப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் நீரிழிவு சிகிச்சை நிலையம், யாழ். போதனா வைத்தியசாலை என்ற முகவரிக்கு நவம்பர் மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

உரிய காலப்பகுதிக்குள் கிடைக்காத ஆக்கப் பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

தலைப்பு ''ஆரோக்கியமான வாழ்வு வாழ்ந்து நீரிழிவை வெற்றி கொள்வோம்'' கட்டுரைப் போட்டி கனிஷ்ட பிரிவு 250 சொற்கள், இடைநிலைப்பிரிவு 500 சொற்கள், சிரேஷ்ட பிரிவு 1000 சொற்கள் ஆகும்.

கட்டுரையானது எந்தவொரு வகையான திருட்டில்லாமல், சுயமான படைப்பாக இருத்தல் அவசியம். அனுப்பும் முறை:- கட்டுரையானது தட்டச்சு செய்யப்பட்டு முழுமைப்படுத்தப்பட விண்ணப்பப்படிவத்துடன் பதிவுத்தபால் மூலமாக அல்லது மேலே குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

சித்திரப்போட்டியானது மூன்று வயதுப்பிரிவுகளும் சிறப்பு விபரம் தாளின் அளவு ஏ3 சித்திரத் தாள் (Art Paper), ஊடகம் ஏதாவது சார்க்கோல் (Charcoal), டிஜிற்றல் (Digital), க்ரயோன்ஸ் (Crayone), நீர் (Water), எண்ணெய் வர்ணம் (Oil) அல்லது வேறு. சித்திரமானது எந்தவொரு வகையான திருட்டில்லாமல் சுயமான படைப்பாக இருத்தல் அவசியம். அனுப்பும் முறை:- சித்திரமானது முழுமைப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் பதிவுத் தபால் மூலமாக அல்லது நேரடியாக குறிப்பிடப்பட்ட முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தில் முழுப் பெயர், பிறந்த திகதி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, தொலைபேசி இல, மின்னஞ்சல் முகவரி போன்றன குறிப்பிடப்படல் வேண்டும்.

இந்தப் படைப்பானது மேலே குறிப்பிட்ட மாணவரின் சொந்தப் படைப்பென்பதையும் முன்னர் பிரசுரிக்கப்படவில்லை என்பதையும் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலோடு இந்த மாணவன் அல்லது மாணவி போட்டியில் கலந்து கொள்வதற்கான சகல விதி முறைகளையும் முழுமை செய்துள்ளார் என்பதையும் உறுதி செய்கின்றேன்.

கையொப்பமும் பதவி முத்திரையும், திகதி. (இ)

சந்தைகளில் நேற்றைய விலை

மரக்கறி வகைகள்	திருநெல்வேலி	கொடிகாமம்	கிளிநொச்சி
	ரூபா	ரூபா	ரூபா
கத்தரிக்காய்	80	70	80
உருளைக்கிழங்கு	120	80	100
பச்சைமிளகாய்	60	70	120
தக்காளி	30	20	60
மரவள்ளிக்கிழங்கு	40	40	50
கோவா	100	50	80
கரட்	140	120	200
பூசணி	50	40	60
புடோல்	80	30	80
வாழைக்காய்	60	50	120
சின்ன வெங்காயம்	100	70	100
பெரிய வெங்காயம்	100	85	100
பாகற்காய்	100	110	160
வெண்டிக்காய்	50	40	80
கருணைக் கிழங்கு	40	50	80
பயற்றங்காய்	50	40	120
லீக்ஸ்	80	70	80
பீற்றூட்	40	55	80
கறிமிளகாய்	80	80	120
முருங்கைக்காய்	80	70	80
போஞ்சி	120	110	160
கத்தரிம்புள்ள	60	50	80
கீரை-1 பிடி	30	30	40
தேசிக்காய்	200	250	200
தேங்காய் ஒன்று	60	50	30-50
இராசவள்ளி	150	110	200
வெங்காயப்பூ	100	90	160
முள்ளங்கி	40	30	80
பொன்னாங்காணி	40	20	30
வல்லாரை	15	20	20
ஈரப்பலா	50	110	100

முதலாவது பாராளுமன்றத் தேர்தலின் பின் நடந்த அரசியல் மாற்றங்களும் தமிழர் பிரச்சினையும்

கலாநிதி க. தவலிங்கம், தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு

இரண்டாவது பாராளுமன்றம் -1952

96 ஆசனங்களில் 54 ஆசனங்களை வென்றெடுத்த ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியை அமைத்தது. டட்லி சேனநாயக்க இலங்கையின் இரண்டாவது பாராளுமன்றத்தின் பிரதமராகத் தெரிவுசெய்யப்பட்டார். எதிர்க்கட்சித் தலைவராக எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டார நாயக்க தெரிவு செய்யப்பட்டார்.

அரசியலமைப்பின்படி நியமிக்கப்பட்ட ஆறு பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒரு தமிழர் நியமிக்கப்பட்டார். அவர் எஸ்.பி. வைத்திலிங்கம் ஆவார்.

இலங்கையரான இவர் அரச சபையில் (State Council) 1931 இலிருந்து 1946 வரை தலவாக்கலை தொகுதியை பிரதிநிதித்துவம் செய்தவர்.

இவர் இந்திய மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஆறு பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டார். இதற்கு இந்திய மக்களிடமிருந்து எதிர்ப்புக்கள் வந்தது.

ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தின் பாராளுமன்ற கூட்டத் தொடர் 1952ஆம் ஆண்டு ஜூன் 10ஆம் திகதி கூட்டப்பட்டது.

இரண்டாவது பாராளுமன்றத்தின் அமைச்சரவை



இரண்டாவது பாராளுமன்றத்தின் அமைச்சரவையில் 14பேர் அமைச்சர்களாக இருந்தனர். அதில் யாழ்ப்பாணத்தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் கைத்தொழில் மற்றும் மீன்பிடி அமைச்சராகவும் கல்குடா தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் வீ. நல்லையா தபால் மற்றும் தந்திப் போக்குவரத்து அமைச்சராகவும் இருந்தனர்.

இளநிலை அமைச்சர்கள் பாராளுமன்றச் செயலாளர்கள் என அழைக்கப் பட்டனர். அதில் சாவகச்சேரி தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் வீ. குமாரசாமி அமைச்சின் செயலாளராக கடமையாற்றினார்.

வீ. நல்லையா அமைச்சர் பதவியிலிருந்து ஜூலை 1952 இல் இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து அந்த இடத்திற்கு காங்கேசன்துறைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் சுப்பையா நடேசன் அமைச்சராக பதவியேற்றார்.

1952 இல் செனட்டராகப் பதவியேற்ற சேர். கந்தையா வைத்தியநாதன் அதனுடன் வீடமைப்பு மற்றும் சமூகசேவைகள் அமைச்சராகவும் பதவியேற்றார்.

1953இல் ஜீ.ஜீ. பொன்னம்பலம் கைத்தொழில் மற்றும் மீன்பிடி அமைச்சர் பதவியிலிருந்து இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து அந்தப் பதவியும் இவருக்கு வழங்கப்பட்டது.

லங்கா சமசமாஜக்கட்சி சார்பாக பொன்னம்பலம் நாகலிங்கம் 1951 இலிருந்து 1957 வரை செனட்டராக தெரிவு செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது பாராளுமன்ற (1952-1957) காலத்தில் கட்சிகளின் கொள்கைகளில் ஏற்பட்ட மாற்றங்கள், "சிங்களம் மட்டும்" மொழிக்கொள்கை, தமிழ்க் காங்கிரஸ் கட்சி அரசிலிருந்து விலகல் போன்ற விடயங்களை இன்னொரு கட்டுரையில் பார்ப்போம்.

(முற்றும்)

கலைத்தரிசனம்

இறையிசைப் பாடலில் தனித்துவமான இசையமைப்பாளர் ஸ்ரீகுகன்

அவர்களுடனான சந்திப்பு

1971 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 21 ஆம் திகதி நல்லூரில் பிறந்த இவர் இறையிசைப் பாடல்களில் தனித்துவமான ஓர் இசையமைப்பாளர். கலைக்குடும்பத்தில் பிறந்த இவர் ஆரம்பத்தில் ஆர்மோனியத்தை இவரின் தந்தை யார் வாசிக்க கேள்வி ஞானத்தால் கற்றுக்கொண்ட இவர் பின் னாளில் முறைப்படி பியானோ, கீபோட் என்பனவற்றை சொரூபன் ஆசிரியரிடம் பயின்றார். 1991 ஆம் ஆண்டு ஸப்தஸ்வரம் இசைக்குமுவையும் 2010 இல் ஸப்தஸ்வரம் இசை ஒலிப்பதிவுக் கலையகத்தையும் ஆரம்பித்தார். இசையமைப்பதில் தனித்துவ மான தன்மையைக் கொண்ட இவரின் இசையமைப்பில் எஸ்.ஜி.சாந்தன், ரி.எல்.மகாராஜன், வீரமணி ராஜா, மதுபால கிருஷ்ணன், அனுராதா ஸ்ரீராம், தினேஸ் போன்ற பாடகர்கள் பாடியுள்ளார்கள். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியும் இசையமைப்பாளருமான ஸ்ரீகுகன் தன்னைப் பற்றியும் தன் கலைப்பணி பற்றியும் மனந்திறந்து கூறியவை வலம்புரியில் பிரசுரமாகின்றது.

➢ நீங்கள் இசைத்துறைக்குள் எவ் வாறு கால் பதித்தீர்கள்?

எமது குடும்பம் ஒரு கலைக்குடும்பம். எனது தந்தையார் ஒரு பண்டிதர். ஒரு சிறந்த கதாபிரசங்கி. எனது தந்தையார் நல்லை ஆதீன முதலாவது குருமணி யின் பிரதான சிஷ்யன். எனது அண்ணா கண்ண தாசன் மிருதங்க வித்துவான். எனது தம்பி இசைப்பிரியன் இசைய மைப் பாளர். சகோதரிகளும் இசைத் துறையில் உள்ளார்கள். நான் சிறுவனாக இருக்கும் போது எனது தந்தை யார் ஆர்மோனியம் வாசித்துப் பாடிக் கொள்வார்.

அந்நேரங்களில் அவருக்க ருகில் இரு ந்து அவர் ஆர்மோனியத்தை வாசிக்கும் முறையைப் பார்ப்பேன். இவ்வாறு பார்த் துப் பார்த்து , கேட்டுக் கேட்டு கேள்வி ஞானத்தால் வாசிக்கப் பழகினேன். பின் னர் எனது தந்தையார் பாட நான் ஆர் மோனியம் வாசித்தேன். நான் முறைப் படி இசை பயில வேண்டும் என்று எனது தந்தையார் விரும்பினார். அதிலும் நான் கீழைத்தேய இசைத்துறையைப் பயில வேண்டும் என்பதில் ஆர்வமாய் இருந் தார். பியானோ, கீபோட் இரண்டையும் முறைப் படி சொரூபன் ஆசிரியரிடம் பயின்றேன்.

எனது அண்ணனுக்கு நான் வயலின் பயில வேண்டும் என்று விரும்பி என்னை சபாரட்ணம் மாஸ்டரிடம் அனுப்பினார். நான் சிறிது காலம் முறைப்படி அவரிடம் பயின்று அதிலும் தேர்ச்சி பெற்றேன். முதல் முதலாக எனது பதினான்காவது வயதில் யாழ். கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியின் கலை நிகழ்வில் கீபோட் வாசித்தேன். அங்கு வாசித்த திறனைக் கண்ட எனது அண்ணன் என் னைப் பாராட்டி "இவன் ஒரு பெரியாளாக வருவான். நல்லா வாசித் தான்" என்று என்னைப் பாராட்டினார். அன்றிலிருந்து நானும் முயற்சியெடுத்து எனது பெற் றோரினதும் சகோதரர்களினதும் வழிப் படுத்தலில் இசையுலகில் தனித்து இய ங்கும் வல்லமை பெற்றேன். எனது தாத்தா ஒரு பல்துறை விற்பன்னர். அவர்களின் கலை வாழ்வும் என்னை இசைத்துறைக்குள் நுழைய வைத்தது.

➢ நீங்கள் இதுவரை இசையமை த்த பக்திப் பாடல்கள் பற்றிக் கூறுங்கள்?

1991- வல்லிபுரம் கிருஸ்ண கானம் இறுவெட்டில் பத்துப் பாடல்களுக்கும் 1997 வற்றாப்பளை கண்ணகி அம்மன் பாடல்கள் இறுவெட்டில் பத்துப் பாடல்க ளுக்கும் 2011 "அலை ஓசையை வெல் லும் அருளோசை நயினை அம்மன் பாடல்கள்" இறுவெட்டில் பத்துப் பாடல்க ளுக்கும் 2011 கைதடி கயிற்ற சிட்டி கந்தன் புகழ்மாலை இறுவெட்டில் பத்துப் பாடல்க ளுக்கும் 2012 மாதகல் அரசடி சித்தி விநாயகர் பாமாலை இறு வெட்டில் எட் டுப் பாடல்களுக்கும் 2015 நவிண்டில் சுந்தர ஐயப்பன் இசைமாலை இறுவெ ட்டில் பத்துப் பாடல்களுக்கும் மந் திகை கண்ணகி அருளமுதம் இறுவெட்டில் பத் துப் பாடல்களுக்கும் இறை புகழ்பாடும் இசைமாலை இறுவெட்டில் முப்பது பாடல் களுக்கும் புங்குடுதீவு காத்தவராய சுவாமி அருளமுதம் இறுவெட்டில் பத்துப்பாடல் களுக்கும் அவ்வொல்லை சித்தி விநா யகர் கானங்கள் இறுவெட்டில் பத்துப் பாடல்க ளுக்கும் வடமராட்சி முனியப்பர் கானங்கள் இறுவெட்டில் பத்துப் பாடல்க ளுக்கும் மஞ்சத் தடி முருகன் அருட் பாமாலை இறுவெட்டில் பதினாறு பாடல் களுக்குமாக கிட்டத்தட்ட 300 இற்கு மேற்பட்ட பக்திப் பாடல் களுக்கு இசைய மைத்துள்ளேன். இவற்றோடு நோர்வே கனக துர் க்கை அம்மன் புகழ்மாலை இறு வெட்டிற்கும் ஆறுதல் நிறுவன பாடுபாப்பா சிறுவர் பாடல்களுக்கும் மண் வாசனை இறுவெட்டில் முல்லைக் கிரா மியப் பாடல்களுக்கும் பல கிறிஸ்தவப் பாடல்களுக்கும் குறும்படங் களுக்கும் இசையமைப்புச்செய்துள் ளேன்.

➢ தங்களின் "ஸப்தஸ்வரம்" இசை ஒலிப்பதிவுக் கலையகம் பற்றிக் கூறு ங்கள்?

ஸப்தஸ்வரம் இசை ஒலிப்பதிவுக் கலை யகம் விநாயகர் வீதி நல்லூர் வடக்கில் அமைந்துள்ளது. 2010 ஆம் ஆண்டு ஆரம்பித்தேன். 1991ஆம் ஆண்டு "ஸப் தஸ்வரா" இசைக்குமுவைஆரம்பித்துஇன்று வரை வெற்றிகரமாக இயக்கிக் கொண்டி ருக்கின்றேன். எனது ஒலிப்பதிவுக் கலைய கத்தினால் 300 இற்கு மேற்பட்ட பாடல்க ளுக்கு ஒலிப்பதிவு செய்துள்ளேன். குறிப் பாக "சந்திரசேகரப்பிள்ளையாரைக்கைதொ முதால்", "அழகு ரதம் ஏறி எங்கள் ஆனை முகன் வாறான்", வேலணையூர் கவிப் புலவர் சுரேசின் எழுத்துருவாக்கத்தில் எஸ்.ஜி. சாந்தன் பாடிய இந்தப் பாடல்கள் இசையிறைப் பாடல்துறையில் புகழைத் தந்தவை. இலங்கையில் பல மூத்த பாடகர் கள் வளர்ந்து வரும் இன்றைய இளைய பாடகர்கள் தென்னிந்தியாவின் ரி.எல். மகாராஜன், வீரமணி ராஜா, மதுபால கிரு ஸ்ணன்,அனுராதாஸ்ரீராம்,தினேஸ்போன்ற பல பாடகர்கள் எனது இசையமைப்பில் பாடியுள்ளார்கள். வேலணையூர் சுரேஸ், கவிஞர் வீரா, பொன்சக்திவேல், முரு கையா, துரை கணேச மூர்த்தி முதலான பல கவிஞர்களும் சிறந்த தொழில்நுட்ப வல்லுநர்களும் எங்கள் கலையக இசை வெளியீடுகளில் கைகோர்த்துள்ளமை சிறப்பானது.

தலை சிறந்த பாடகர் எஸ்.ஜி. சாந்த னின் குரலில் கூடுதலான பாடல்களை இசைய மைப்புச் செய்துள்ளேன். அண் மையில் கூட இணுவில் மஞ்சத்தடி முரு கன் அருட்பா மாலையில் பதினாறு பாட் டுப் பாடியுள்ளார் எனது இசையில். இப் பாட ல்களை கவிமணி வீரமணிராஜா எழுதி னார்.

➢ தாங்கள் ஒலிப்பதிவில் எவ்வா றான நுட்பங்களைப் பயன்படுத்து கிறீர்கள்?

பாடல்தான் பிர தானம். இசைக் காகப் பாடலல்ல. பாடலு க்காகத்தான் இசை. பாடலில் வருகின்ற ஒவ்வொரு சொல்லும் திருத்தமாகக் கேட்க வேண்டும். அவ்வாறு கேட்க வேண்டுமாக இருந்தால் இசை அள வாக இசைக்க வேண்டும். மெட்டு போடுகின்ற போது திறமையாகப் பாட வேண்டும். உதாரணமாக அம்மனின் பாடல் என்றால் அது விறுவிறுப்பாக இருக்கவேண்டும். ஐயப்பன் பாடல் என் றால் அது உக்கிரமாக இருக்க வேண்டும். அப்போதுதான் பக்தர்களின் இதயத் தைத் தொடும். பல்லவிகளை கவனத்திற் கொள்ளவேண்டும். பாடலை விட இசை மேலோங்கினால் கவிஞனின் பாடல் வரிகள் குன்றிப் போய்விடும். அழுத்த மான, திருத்தமான இசையை வழங்க வேண்டும். பக்க வாத்தியங்களின் பொருத்த ப்பாடு என்பவற்றைக் கருத்திற் கொள்ள வேண்டும். அந்தக் காலத்தில் இடை இசை போடுவது பாடுகின்றவர் தொடர்ச்சியாகப் பாடும்போது களைப்படைந்து போய் விடு வார். அவருக்குச் சிறிய ஓய்வு கொடுப் பதற்காகவே இடை இசை வரும். இவற் றையெல்லாம் கருத்திற்கொண்டு தான் நான் ஒலிப்பதிவு மேற்கொள்வேன்.

➢ தாங்கள் இருபது வருடங்களு க்கு மேலாக இசை வகுப்புக்களை நடத்தி வருகின்றீர்கள். அதுபற்றி?

நான் இருபது வருடங்களுக்கு மேலாக இசை வகுப்புக்களை நடத்தி வருகின் றேன். நான் எனது இல்லத்திலும் முன் னர் புதுக் குடியிருப்பு நுண்கலைக் கல் லூரியிலும் கிளிநொச்சி நுண்கலைக் கல்லூரியிலும் வகுப்புக்களை நடத்தி வருகின்றேன். எனது இல்லத்தில் நடை பெறுகின்ற வகுப்பிற்கு ஐம்பதிற்கு மேற்ப ட்ட மாணவர்கள் பயின்று வருகின்றார் கள். இம்மாணவர்களில் சிலர் கிறிஸ்தவப் பாடல்களைப் பயிலவும் சிலர் கலை நிகழ்ச்சிகளில் கீபோட் வாசிக்கவும் என்று பல்வேறு விதமான மாணவர்கள் வருகின் றார்கள். நான் அவர்களின் தேவைக் கேற்ப வகுப்புக்களை எடுக்கின்றேன். எமது தேவைக்காகத்தான் கலை. எமது தேவைக் காக என்று பயிலும் போது மாணவர்கள் விரும்பிஆர்வமாகப்பயிலுவர்கள்.தேவை யில்லாத ஒன்றைப் பயிலும் போது சில வேளைகளில் அவர்களுக்குச் சலிப்பு ஏற் பட்டு விடும். இதனால் இசையைப் பயி லுவதற்கான ஆர்வமும் இன்றிப் போய் விடும். மாணவர்களின் நிலைமைக்கு ஏற்ப இசையைப் பயிற்றுவிக்க வேண் டும். என்னிடம் கற்ற பல மாணவர்கள் இன்று வெளிநாடுகளில் சிறந்த இசைய மைப்பாளர்களாக உள்ளார்கள்.

➢ ஓர் இசையமைப்பாளருக்கு இருக்க வேண்டிய தகைமைகள் எவையென க் கருதுகிறீர்கள்?

கவிஞர், ஒலிப்பதிவாளர், வாத்தி யக் கலைஞர், இசையமைப்பாளர் ஆகியோ ரின் கூட்டுழைப்பால் வெளிவருவது தான் இறுவெட்டு. இசையமைப்பாள ருக்கு முதலில் மற்றக் கலைஞர்களை மதிக் கும் இயல்பு இருக்கவேண்டும். தனக்குக் கிடைத்த கௌரவம் மற்றக் கலைஞர்க ளின் உழைப்பால் கிடைத்தது என்று உணர வேண்டும். ஏனைய கலைஞர்களையும் தட்டிக்கொடுத்து அவர்களின் திறமை யையும் வளர்க்க முன் வரவேண்டும். நடுவுநிலையினை, விமர்சனங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும். ஒற்றுமையாக ஏனைய கலைஞர்களோடு இணைந்து செயற்படவேண்டும். தனது படைப்பாக்க த்தில் அதீத கவனம் செலுத்தவேண்டும். நாளுக்கு நாள் கற்றுக்கொள்ள வேண் டும். என்றும்அடக்கமாக இருக்கவேண்டும்.

➢ இறுதியாக நீங்கள் இந்தக் கலை யுலகிற்கு மனந்திறந்து கூறுவது?

துறைசார்ந்தவற்றில் எமது அறிவை வளர்த்துக்கொள்ளவேண்டும். எந்த வொரு கலைஞனும் சரிஎந்தவொரு படை ப்பும் சரி நூறுவீதம் இல்லை . இன்று நாம் படைத்த படைப்பை மறுநாள் திரும் பிப் பார்க்கும் போது அதில் சில குறை கள் இருக்கும். சிலர் தங்களை பிரபல் யமாக்குவதற்குத் காத்திரமில் லாத சில படைப்புக்களை வெளியிட்டு வரு கின்றார் கள். அவர்கள் விளங்கிக் கொள்ள வேண் டும். படைப்புக்கள் பிரபல்யமாக இருக்க வேண்டும். அந்தப்படைப்பின்ஊடாகப் படை ப்பாளி பிரபல்யமாகவேண்டும். எமக் குத் தெரியாத விடயங்களைத் தெரிந்த கலை ஞர்கள் மூலம் தெரிந்து கொள்ள வேண் டும். எமது படைப்புக்களை இந்தியப்படைப் போடு ஒப்பிடும் நிலையை விட வேண் டும். நமது கலைஞர்களின் படைப்பை மதித்து அப்படைப் பில் கண்ட நிறை குறையை நடுநிலைத் தன்மை யுடன் உரியவரிடம் கூறவேண்டும். கலைகளில் ஆர்வமாக இருக்க வேண்டும்.

நேர்காணல்:
ஜெயம் ஜெகன்

பாரதம்

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி விவசாயிகள் பேரணி

தடையை மீறி டில்லிக்குள் நுழைய முயன்ற போது பொலிஸார் தடியடி மற்றும் கண்ணீர்ப்புகை வீச்சு

(டில்லி)

விவசாயிகள் நீண்ட காலமாக பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டங்கள் நடத்தி வருகின்றனர். விவசாய கடன் தள்ளுபடி, வேளாண் பொருட்களுக்கு உரிய விலை, பெற்றோல், டீசல் விலை குறைப்பு, 60 வயதுக்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு ஓய்வூதியம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை மத்திய அரசு நிறைவேற்ற கோரியே அவர்கள் போராடி வருகின்றனர்.

மேலும் 10 ஆண்டுகளுக்கும் அதிகமான பழைய டிராக்டர்களை பயன்படுத்துவதை தடை செய்ய வேண்டும் என்று தேசிய பசுமை தீர்ப்பாயம் பிறப்பித்த உத்தரவை உடனடியாக நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்த கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி கடந்த 23 ஆம் திகதி உத்தரகாண்ட மாநிலம் ஹரித்துவார்

நகரில் இருந்து பேருந்துகள், டிராக்டர்களில் 'பாரதீய கிசான் யூனியன்' என்னும் விவசாயிகள் சங்கத்தைச் சேர்ந்த ஏராளமானோர் அதன் தலைவர் நரேஷ் திகாயத் தலைமையில் டில்லி ராஜ்காட்டை நோக்கி ஊர்வலமாக புறப்பட்டனர்.

உத்தர பிரதேச மாநிலத்தின் வழியாக வந்தபோது மேலும் பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் ஊர்வலத்தில் இணைந்து கொண்டனர். இந்த ஊர்வலத்தை தலைநகர் டில்லியில் மகாத்மா காந்தியின் பிறந்த தினமான நேற்று முன்தினம் முடிப்பதற்கு விவசாயிகள் திட்டமிட்டிருந்தனர்.

இந்த நிலையில் நேற்றுக் காலை பொலிஸ் தடையை மீறி காஜியாபாத்தில் இருந்து ஆயிரக்கணக்கான விவசாயிகள் டில்லிக்குள் நுழைய முயன்றனர். அவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தினர். எனினும் ஊர்வலத்தில் வந்தவர்கள் உத்தர பிரதேச பொலிஸார் வீதியின் நடுவே வைத்திருந்த தடுப்புகளை டிராக்டர்களால் இடித்து தள்ளிவிட்டு டில்லியை நோக்கி முன்னேறினர்.

அப்போது ஊர்வலத்தில் வந்தவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே பலத்த தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதில் துணைப் பொலிஸ் கமிஷனர் உட்பட 7 பொலிஸார் காயம் அடைந்தனர்.

இதையடுத்து அவர்கள் மீது பொலிஸார் தண்ணீரை பீய்ச்சியடித்தும் 20 இற்கும் மேலான கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசியும் விரட்டினர். எனினும், இதையும் மீறி ஊர்வலத்தில் வந்தவர்கள் டிராக்டர்களுடன் டில்லி எல்லைக்குள் நுழைய முயன்றனர்.

டில்லி பொலிஸார் அவர்களை தடியடி நடத்தி விரட்டியடித்தனர். இதனால் அவர்கள் நாலாபுறமும் சிதறி ஓடினர். பின்னர் விவசாயிகளின் ஊர்வலம் தடுத்து நிறுத்தப்பட்டது.

இதனால் ஊர்வலம் தடுத்து நிறுத்தப்பட்ட காஜியாபாத் நகரிலேயே ஆயிரக்கணக்கான விவசாயிகள் தொடர்ந்து முகாமிட்டு உள்ளனர்.(7)

இந்தோனேசியாவை உயிரிழப்பு 1,350

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் ஏற்பட்ட நிலநடுக்கம் மற்றும் சுனாமியால் எழுந்த ஆழிப்பேரலை காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 1,350 ஆக உயர்வடைந்துள்ளது.

இந்தோனேசியாவில் ரிக்டர் அளவுகோலில் 7.5 ஆக பதிவான இந்த நிலநடுக்கத்தினால் கடந்த வெள்ளிக்கிழமை நிலநடுக்கம் ஏற்பட்டது.

தேர்தல் பிரசாரத்தில் குண்டுவெடிப்பு; 14 பேர் பரிதாபமாக உயிரிழப்பு!

(காபூல்)

ஆப்கானிஸ்தான் பாராளுமன்றத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 14 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானின் ஜலாலாபாத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட இத்தாக்குதலில் 30 இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், கடந்த 28 ஆம் திகதி முதல் அங்கு தேர்தல் பிரசாரங்கள் சூடுபிடித்துள்ளன.

இந்நிலையில், ஆப்கானிஸ்தானின் கிழக்குப் பகுதியான நங்கர்ஹார் மாகாணத்துக்கு உட்பட்ட ஜலாலாபாத் நகரின் அருகே அப்துல் நாசிர் முஹம்மது என்ற வேட்பாளர் நேற்று முன்தினம் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார். இந்த பிரசாரத்தின்போதே தற்கொலை குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்த தாக்குதலுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் பொறுப்பேற்றுள்ளனர்.(7)

ரோஹிங்ஞ்யா விவகாரம்

மியன்மாருக்கு இந்தியா அழுத்தம் தர வேண்டும்

–ஐ.நா.பொது செயலாளர் வேண்டுகோள்–

(டில்லி)

ரோஹிங்ஞ்யா விவகாரத்தில் பங்களாதேஷ்டன் இணைந்து மியன்மாருக்கு இந்தியா அழுத்தம் தர வேண்டும் என ஐ.நா. பொது செயலாளர் குட்டேரஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மியன்மார் நாட்டில் கடந்த வருடம் ஒகஸ்ட் 25 ஆம் திகதி ரோஹிங்ஞ்யா முஸ்லிம்கள் மீது இராணுவம் தாக்குதலை நடத்தியது. இதில் ஏற்பட்ட வன்முறையை தொடர்ந்து அங்கிருந்து 6

இலட்சத்து 20 ஆயிரம் பேர் தப்பி பங்களாதேஷில் அகதிகளாக தஞ்சம் புகுந்தனர்.

இராணுவத்தின் இந்நடவடிக்கையை சிறுபான்மை முஸ்லிம் மக்களின் இன அழிப்பு நடவடிக்கை என ஐ.நா. சபை மற்றும் அமெரிக்கா கூறியது.

ஆனால் இதனை மறுத்த மியன்மார் அரசு, செய்தியாளர்கள் மற்றும் ஐ.நா. அமைப்பு மியன்மாரில் புலனாய்வு விசாரணை நடத்த தடை விதித்தது.

அண்மையில் ரோஹிங்ஞ்யா முஸ்லிம்கள் படுகொலை பற்றி விசாரணை நடத்தப்பட வேண்டும் என ஐ.நா. அமைப்பு தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் 3 நாட்கள் சுற்றுப் பயணமாக டில்லிக்கு வருகை தந்துள்ள ஐ.நா. அமைப்பின் பொது செயலாளர் அன்டோனியோ குட்டேரஸ் செய்தியாளர்களுக்கு அளித்துள்ள பேட்டியில், ரோஹிங்ஞ்யா விவகாரத்தில் பங்களாதேஷ்டன் இணைந்து மியன்மாருக்கு இந்தியா அழுத்தம் தர வேண்டும் எனத் தெரிவித்தார். (7)

மே 17 இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி விடுதலையானார்

மே 17 இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி 52 நாட்கள் சிறைவாசத்திற்கு பின்னர் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை விவகாரம் தொடர்பில் ஐ.நாவில் உரையாற்றிய பின்னர் இந்தியா திரும்பிய திருமுருகன் காந்தியை பெங்களூர் விமான நிலையத்தில்

குடிவரவுத்துறை அதிகாரிகள் கைதுசெய்திருந்தனர்.

எனினும் முதலில் இவரை நீதிமன்ற காவலில் எடுக்க நீதிமன்றம் மறுத்தது. அதனால் அவர் விடுதலை செய்யப்பட்டார். எனினும் உடனடியாக கைதுசெய்யப்பட்டார்.

வேலூர் சிறையில் அடைக்கப்பட்டிருந்தவேளை திருமுருகன் காந்தியின் உடல் நிலை மோசமடைந்தது.

இந்நிலையில் அவருக்கு பிணை வழங்கப்பட்டதை தொடர்ந்து திருமுருகன் காந்தி நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளார். (7)

ஆசியில் முதன்முறையாக கர்ப்பப்பை புற்றுநோய் ஒழிப்பு

அவுஸ்திரேலியாவில் எதிர்வரும் 2022 ஆம் ஆண்டுக்குள் கர்ப்பப்பை புற்றுநோயை முற்றிலுமாக ஒழிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கர்ப்பப்பை புற்றுநோய் பெண்களை பெருமளவில் பாதித்து உயிரை பறிக்கிறது. வளரும் நாடுகள் மற்றும் ஏழை நாடுகளில் இந்த நோய் பாதித்தவர் களில் 10 பெண்களில் 9 பேர் உயிரிழப்பதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவிக்கின்றது.

இந்த நோய் 'எச்.பி.வி.' (கியூமன்) என்ற வைரஸ்களால் ஏற்படுகிறது. இத்தகைய வைரஸ் 100 விதமாக உள்ளன. அந்த வைரஸ் தாக்கிய பெண்களுக்கு தொடக்கத்தில் நோயின் பாதிப்பு தெரியாது. அதற்கான அறிகுறிகள் தென்படாது. பின்னர் தான் தெரிய வந்து உயிரை பறிக்கும் நிலை ஏற்படும்.

அவுஸ்திரேலியாவைபொறுத்தவரை ஆண்டு க்குஒரு இலட்சம்பெண்கள்கர்ப்பப்பை புற்றுநோயால் பாதிக்கப்பட்டு வந்தனர். இது சர்வதேச அளவில்பாதிவாகும். எனவே இந்த நோயை ஒழிக்க அங்கு தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 'எச்.பி.வி.' வைரஸ் தடுப்பு மருந்து பயன்படுத்தப்பட்டு வருவதால் ஆஸியில் தற்போது பெண்களுக்கு கர்ப்பப்பை புற்றுநோய்த் தாக்கம் மிகவும் குறைந்து விட்டது.(7)

அமெரிக்காவில் மகாத்மா காந்

(வோஷிங்டன்)

அமெரிக்க பாராளுமன்றத்தால் அளிக்கப்படும் மிக உயரிய தங்கப் பதக்கம் விருதுக்கு அகிம்சை கொள்கையை நிலைநாட்டிய மகாத்மா காந்தியின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க பாராளுமன்றத்தின் கீழ்சபை மற்றும் பிரதிநிதிகள்

வெளிநாடு

ாவில் நிலநடுக்கம்; 50 ஆக அதிகரிப்பு!

இதன் பின்னர் ஏற்பட்ட சுனாமி அலைகள், இந்தோனேசியாவின் பல பகுதிகளைத் தாக்கின. குறிப்பாக சுலாவேசி தீவிவில் சுமார் 19 அடி உயரத்திற்கு ஆவேசமாக எழுந்த அலைகள் அங்கு பலத்தை சேதத்தை ஏற்படுத்தியது.

பலு மற்றும் டோங்காலா உள்ளிட்ட பகுதிகளில் நில நடுக்கத்தால் ஆயிரக்கணக்கான கட்டடங்கள் இடிந்து விழுந்தன. (7)

லேசர் சிகிச்சை முன்னோடிகள் மூவருக்கு நோபல் பரிசு அறிவிப்பு

(ஸ்டோக்ஹோம்)

லேசர் சிகிச்சை முறைகளுக்கு முன்னோடியாகத் திகழும் 3 விஞ்ஞானிகள் இயற்பியல் பிரிவில் நோபல் பரிசுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவைச் சேர்ந்த ஆர்தர் ஆஷ்கின் பிரான்சைச் சேர்ந்த ஜெனார்ட் மோரு மற்றும் கனடாவைச் சேர்ந்த டோனா ஸ்ட்ரிக்லாண்ட ஆகிய மூவரும் லேசர் சிகிச்சைகளுக்குப் பயன்படும் ஒளியியல் லேசர்களைக் கண்டுபிடித்தமைக்காக நோபல் குழு இம் மூவரையும் தேர்வு செய்துள்ளது.





பெல் லேபரட்ரீஸ் லூஸென்ட் டெக்னாலொஜிஸ் ஆகியவற்றில் பணியாற்றிய ஆர்தர் ஆஷ்கின் நோபல் பரிசுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிலேயே மிகவும் அதிக வயதுடையவராவார்.

பிரான்ஸிலுள்ள எகோல் பாலிடெக்னிக் மற்றும் அமெரிக்காவின் மிச்சிகன் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் மோரு உலகின் மிக சக்திவாய்ந்த ஈ.எல்.ஐ. லேசர் உருவாக்கத் திட்டத்தில் பங்கேற்றுள்ளார்.

கனடாவிலுள்ள வாட்டர்லூ பல்கலைக்கழகத்தில் பணியாற்றி வரும் டோனா ஸ்ட்ரிக்லாண்ட், ஜெனார்ட் மோருவின் மாணவி ஆவார்.

இம் மூவரினதும் தெரிவு குறித்து நோபல் தேர்வுக் குழு,

"அணுத் துகள்கள் வைரஷ்கள் மற்றும் உயிரணுக்களை அள்ளியெடுக்கும் ஒளியியல் லேசரை கடந்த 1987 ஆம் ஆண்டு கண்டுபிடித்தமைக்காக ஆர்தர் ஆஷ்கினிற்கு நோபல் பரிசு வழங்கப்படுகிறது.

வெறும் கதிர்வீச்சை பயன்படுத்தி பொருட்களை நகரச் செய்யும் அறிவியல் கனவை ஆர்தரின் கண்டுபிடிப்பு நனவாக்கியிருக்கிறது.

மேலும் அதுவரை காலமும் இல்லாத அளவிற்கு மிகவும் சக்தி வாய்ந்த லேசர் அதிர்வுகளை உருவாக்கிய மோரு மற்றும் ஸ்ட்ரிக்லாண்டுக்கும் இயற்பியலுக்கான நோபல் பரிசு வழங்கப்படுகிறது.

மோரு மற்றும் ஸ்ட்ரிக்லாண்ட் ஆகிய இருவரும் உருவாக்கிய ஒளியியல் லேசர் கதிர்கள் கண் குறைபாடுகளை சரி செய்வதற்கான லேசர் சிகிச்சைகளுக்குப் பயன்படுகிறது" என்று தெரிவித்துள்ளது. (இ-7)

தலாய் லாமாவை கொலை செய்ய முயற்சி

தலைமறைவாகியிருந்த 6 பேர் அதிரடியாக கைது

(பிஹார்)

திபெத்தின் ஆன்மீகத் தலைவர் தலாய் லாமாவை கொலை செய்ய முயன்ற வழக்கில் தலைமறைவாகியிருந்த ஆறு பேர் அதிரடியாகக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்திய தேசிய புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் இவர்களை நேற்று முன்தினம் கர்நாடகாவில் கைது செய்துள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் தலாய் லாமா பிஹாரில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டிருந்த வேளை அந்த இடத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சக்திவாய்ந்த வெடிகுண்டுகளை தேசிய புலனாய்வு அதிகாரிகள் கைப்பற்றினர்.

இதனை தொடர்ந்து தலாய்



லாமாவை கொல்ல முயன்றதாக ஜே.எம்.பி. என்ற அமைப்பின் மீது வழக்குத் தொடரப்பட்டதுடன் அந்த அமைப்பை சேர்ந்தவர்களை கைது செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியிருந்தன. இந்நிலையில் கர்நாடகாவின் இரகசியப் பொலிஸார் ஆறு பேரை கைதுசெய்துள்ளனர். (7)

ாவில் மிக உயரிய விருதுக்கு ாந்தியின் பெயர் பரிந்துரை

சபையின் சார் பில் அந்நாட்டில் சிறப்பான வகையில் சமூகத் தொண்டாற்றியவர்களுக்கு ஆண்டு தோறும் தங்கப்பதக்கம் அளித்து கௌரவிக்கப் படுகிறது.

அமெரிக்காவின் மிகவும் உயரிய விருதாகக் கருதப் படும் இந்த தங்கப்பதக்கம் மிகவும் அரிதாக சில வெளி நாட்டவர்களுக்கும் முன்னர் அளிக்கப்பட்டது.

இந்நிலையில், இவ் விருதுக்கு மகாத்மா காந்தியின் பெயரை பரிந்துரைக்க விரும் புவதாக கடந்த ஓகஸ்ட் மாதம் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெற்ற இந்திய சுதந்திர விழாவின் போது அந்நாட்டின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மத்தியில் தெரிவித்திருந்தார்.

அகிம்சை முறையில் மகாத்மா காந்தி நடத்திய சத்தியாகிரகப் போராட்ட இயக்கம் ஒரு நாட்டுக்கும் இந்த உலகத்துக்கும் ஊக்க சக்தியாக அமைந்தது. பிறரது சேவைக்கு நம்மை அர்ப்பணித்துக்கொள்ள அவரது வாழ்க்கை ஒரு உதாரணப் பாடமாக அமைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இதைதொடர்ந்து, அமைதி மற்றும் அகிம்சைக்காக போராடிய மகாத்மா காந்தியின் பெயரை இந்த விருதுக்கு பரிந்துரை செய்து 23.9.2018 அன்று அமெரிக்க பாராளுமன்ற பிரதிநிதிகள் சபையில் ஒரு தீர்மானத்தை கரோலின் மலோனே தாக்கல் செய்துள்ளார்.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களான அமி பேரா, ராஜா கிருஷ்ணமூர்த்தி, ரோ கன்னா, பிரமிளா ஜெயபால் மற்றும் துல்சி கபார்ட் உள்ளிட்டோர் இந்தத் தீர்மானத்தை ஆதரித்து வழிமொழிந்துள்ளனர். (7)

ஈராக்கின் புதிய ஜனாதிபதியாக பர்ஹாம் சலே தெரிவானார்

(பக்தாத்)

ஈராக் நாட்டின் பாராளுமன்ற உறுப்பினர்கள் புதிய ஜனாதிபதியாக பர்ஹாம் சலேவை தேர்வு செய்துள்ளனர்.

ஈராக்கில் சதாம் உசேன் வீழ்ச்சிக்கு பிறகு அங்கு ஜனநாயக ஆட்சி மலர்ந்தது. அங்கு திடீரென ஐ.எஸ். பயங்கரவாதிகள் எழுச்சி பெற்று பெரும் பகுதியை கைப்பற்றி தனிநாடு அமைத்தனர். தினமும் வன்முறை வெறியாட்டங்கள் நடத்தி பொதுமக்களைக்கொன்று குவித்தனர். எனவே அமெரிக்க கூட்டுப் படையின் உதவியுடன் கடந்த டிசெம்பரில் அவர்கள் முற்றிலும் அழிக்கப்பட்டனர்.

அதைத் தொடர்ந்து ஈராக்கில் ஜூலை 12 ஆம் திகதி பாராளுமன்ற தேர்தல் நடத்தப்பட்டது. இந்தத் தேர்தலில் மதகுரு மக்தாதா தலைமையிலான சயிரூன் கூட்டணி 54 இடங்களில் வெற்றி பெற்றது.

இதற்கிடையே, வாக்குகளை இயந்திரங்கள் மூலம் எண்ணாமல், நேரடியாக கைகளால் எண்ணும் வகையில் தேர்தல் சட்டத்தில்



திருத்தம் செய்யப்பட்டது.

இதற்கான சட்ட மசோதா பாராளுமன்றத்தில் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது. இதையடுத்து, வாக்குகள் அனைத்தையும் கைகளால் எண்ண வேண்டும் என பாராளுமன்றம் உத்தரவிட்டது.

ஈராக் ஜனாதிபதி தேர்தலில் நடத்தப்பட்ட மறு வாக்கு எண்ணிக்கையிலும் மதகுரு மக்தாதா சதாரின் கூட்டணி வெற்றி பெற்றது.

இந்நிலையில், ஈராக் நாட்டின் புதிய ஜனாதிபதியை தேர்வு செய்வதற்கான பாராளுமன்ற கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் குர்தீஷ் இனத்தைச் சேர்ந்த குர்தீஷ் தேசபக்த யூனியன் கட்சியின் வேட்பாளராக பர்ஹாம் சலேவும், குர்தீஷ் ஜனநாயக கட்சியின் வேட்பாளராக பவுட் ஹுசைனும் போட்டியிட்டனர்.

இந்தத் தேர்தலில் பர்ஹாம் சலே பெரும்பான்மையுடன் ஈராக்கின் புதிய ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்

சீனாவின் மூலோபாய முதலீடுகள் இலங்கைக்கு பேரழிவை ஏற்படுத்தும்

அமெரிக்கத் தூதுவர் எச்சரிக்கை

(டோக்கியோ)

சீனா மூலோபாய முதலீடுகள் மூலம் பேரழிவுகளை ஏற்படுத்த முடியும் என்றும், அதற்கு இலங்கை போன்ற நாடுகள் உதாரணமாக இருப்பதாகவும், ஜப்பானுக்கான அமெரிக்கத் தூதுவர் வில்லியம் எவ் ஹகேற்றி எச்சரித்துள்ளார்.

சீனாவின் ஒரு பாதை ஒரு அணைத் திட்டம் தொடர்பாக, ஜப்பானிய ஊடகம் ஒன்றுக்கு, கருத்து வெளியிட்டுள்ள அவர்.

"சீனாவின் மூலோபாய முதலீடுகள் சந்தை நோக்கத்தைக் கொண்டதல்ல. இது நிலையற்ற கடன்மட்டத்தைக் கொண்டு வரும்.

இதன்மூலம் பேரழிவுகளை ஏற்படுத்த முடியும். மலேசியா, இலங்கை,பாகிஸ்தான் போன்ற உதாரணங்களை நாம் பார்த்திருக்கிறோம்" என்று அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

கற்பாறைகள் சரிந்து வீழ்ந்ததால் 300 குடும்பங்கள் இடம்பெயர்வு

(தலவாக்கலை)

தலவாக்கலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிரேட் வெஸ்டன் தோட்டத்தின் லூசா பிரிவில் நேற்று முன்தினம் மாலை பெய்த கடும் மழையினால் கற்பாறைகள் சரிந்து விழுந்ததன் காரணமாக அப்பகுதியில் வசிக்கும் சுமார் 300 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

குறித்த தோட்டத்தில் அமைந்துள்ள சுமார் 2000 அடி உயரம் கொண்ட மலையிலிருந்து பாரிய கற்பாறைகள் சரிந்து விழுந்ததன் காரணமாக அப்பகுதியின் அடிவாரத்தில் வசித்த 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 1000 இற்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்து தற்காலிகமாக தோட்ட ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயத்திலும், முன்பள்ளியிலும் மற்றும் உறவினர்கள் வீடுகளிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினமிரவு 11 மணியிலிருந்து 13 தடவைகள் குறித்த மலையிலிருந்து மண்மேடுகள் சரியும் பாரிய சத்தம் கேட்டதாலேயே குறித்த மக்கள் அச்சமடைந்து இவ்வாறு இடம்பெயர்ந்துள்ளதோடு, கற்பாறைகள் சரிவு தொடர்பில் நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இவ்விடயம் தொடர்பில் ஆராய்ந்ததன் பின் இவர்களுக்கான மேலதிக ஏற்பாடுகள் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

மாடு வெட்டிய இருவர் கைது

(கரணவாய்)

நெல்லியடி பொலிஸாருக்கு நேற்றுக் காலை கிடைத்த இரகசிய தகவலின்படி வடமராட்சியில் கொல்கலம் இருக்கும் இடத்தை விட வேறு இடத்தில் சுமார் 45 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பசு மாட்டினை வெட்டிக் கொண்டிருக்கும் போது இருவரையும் கைது செய்துள்ளனர். (இ-60)

யாழ். காரைநகர் இந்துக் கல்லூரியில் உத்தியோகபூர்வ பணி ஜனாதிபதி மக்கள் சேவை எனும் நடமாடும் சேவை ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் திருமதி உஷா சுபலிங்கம் தலைமையில் இடம்பெற்றது. இதில் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் விஜிர அபேவர்த்தன, உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் ஜே.சீ.அலுவதுவெல, திருமதி அலுவெதுவெல, உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் திருமதி கொடகந்த, மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகன், பாராளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராசா, தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈஸ்வரபாதம் சரவணபவன், திருமதி விஜயகலா மகேஸ்வரன், காரைநகர் பிரதேச சபை தவிசாளர் கேதீஸ்வரன், இராணுவ பொலிஸ், கடற்படை உயரதிகாரிகள், யாழ்.மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(படங்கள்:-சக்தி, கிஷோர்)

இன்று ஒரு தகவல்

பொய்களை ஸ்கான் செய்தால்...

பொய் என்பது ஒரே இரகத்தைச் சேர்ந்தது தான் என்பதாக நாம் நம்பிக்கொண்டிருக்கிறோம் அல்லவா? அது உண்மையல்ல! பொய்களில் பல இரகங்கள் இருக்கின்றன.

உங்களிடம் சொல்லப்படும் பொய்களை இனி மேல் நீங்கள் வித்தியாசமான கண்ணோட்டத்திலிருந்து பாருங்கள். ஆமாம்! அவற்றை அக்குவேறு ஆணிவேறாக அலசுங்கள். இந்தக் கலையைக் கற்றுக் கொண்டால் Lie Detecter எனப்படும் பொய்யைக் கண்டுபிடிக்கும் இயந்திரமெல்லாம் இனிமேல் உங்களிடம் பிச்சை வாங்க வேண்டும்.

பொய்யின் இரகங்களைப் பிரித்து எனக்கென்ன ஆகப்போகிறது என்கி றீர்களா? இருக்கின்றன.

"எனக்காக ரொம்ப நேரமாகக் காத்திருக்கீங்களா?" "இல்லைங்க! இப்பத்தாங்க வந்தேன்" (நம்மீது உள்ள மரியாதை காரணமாகச் சொல்லப்பட்ட பொய்)

"என்னாலஉங்களுக்குஏகப்பட்டசெலவு" "அதெல்லாம் ஒண்ணுமில்லை சின்ன செலவு தான்" (அன்புப் பொய்)

"இந்தப் பழத்தை எட்டு ரூபாய் கொடுத்து தானே வாங்கினாய்?" "பன்னிரண்டு ரூபாய்!" (ஏமாற்றுப் பொய்).

"மாப்பிள்ளைப் பையனுக்குக் காது கொஞ்சம் மந்தம் போல தெரியுதே!"

"இல்லைங்களே! காது நல்லாவே கேட்குதுங்க!"(நன்மைக்காகச் சொல்லப்பட்ட பொய்)

"டேய்! இந்த பிளாஸ்கை நீ தானே உடைச்சே?" "நான் பார்க்கவே இல்லப்பா!"(பயம் காரணமாகச் சொல்லப்பட்ட பொய்).

"இந்த வீடு இப்ப 12 இலட்சம் பெறுங்களா?" " சரியாப் போச்சு! 20 இலட்சங்க!"(பெருமைப் பொய்)

இதே கேள்விக்கான விடை" கணக்குப் பார்க்கலை" என்பதாக அமைந்தால் அது மறைக்கும் பொய் எனும் இரகத்தில் சேரும்.

நம்மைச் சுற்றியுள்ள மனிதர்களை எடை போடுவதில்தான் நம் வெற்றியே அடங்கியிருக்கிறது. பொய்களை ஸ்கேன் செய்தால் அவர்கள் உங்களை எந்த உயரத்தில் வைத்திருக்கிறார்கள் என்பது பிடிபடும்.

அன்புப் பொய்களையும் நன்மை மற்றும் பெருமை மற்றும் மரியாதைப் பொய்களையும் மன்னித்து விடலாம். அதே நேரத்தில் ஒரு சந்தர்ப்பத்தில் எனக்கு எல்லா உண்மைகளும் தெரியும் என்பதை அவர்களிடம் உணர்த்தி விட வேண்டும்.

பயப்பொய்யை அவசியமில்லை என்று தெளிவுபடுத்துங்கள்.

ஏமாற்றுப் பொய்யர்களை மட்டும் விடவே விடாதீர்கள்.

லேனா தமிழ்வான்

குருப்பெயர்ச்சிப் பலன்கள்

4.10.2018 முதல் 28.10.2019 வரை

பாசத்தோடு பழகுவதில் முன்னணியில் திகழும் ரிஷப இராசி வாசகர்களே!

சுகபோகங்களை அள்ளி வழங்கும் சுக்கிரனின் ஆதிக்கம் பெற்ற இராசியைக் கொண்டவர்கள் நீங்கள். மக்களின் மனதை தன்பால் ஈர்க்கக்கூடிய ஆற்றல் உங்களுக்கு உண்டு. சிக்கல்கள் வந்தால் கூட அதை எளிதாக எடுத்துக்கொள்வீர்கள். கவர்ச்சியான பேச்சால் காரியங்களைச் சாதிக்கும் வல்லமை உங்களுக்கு உண்டு. அதிர்ஷ்ட சாலிகள் என்று அழைக்கப்படுபவர்களின் பட்டியலில் நீங்களும் ஒருவராக விளங்குவீர்கள்.

வந்துவிட்டது குருப்பெயர்ச்சி, எந்த நாளையும் இனிய நாளாக மாற்றும் பார்வை பலத்தைப் பெற்ற குரு பகவான் இப்பொழுது உங்கள் இராசியைப் பார்க்கப் போகின்றார்.

புரட்டாதி 18 இல் குரு பகவானுக்குரிய வியாழக்கிழமை அன்று அவருக்குரிய நட்சத்திரமான விசாகம் நட்சத்திரத்தில் விருச்சிக குருவாக சஞ்சரிப்பது யோகம் தான்.

எல்லா வழிகளிலும் நன்மைகள் கிடைக்க, எதிர்காலம் சிறப்பாக அமைய, பெயர்ச்சியாகும் குருவை முன்னதாகவே யோக பலம் பெற்ற நாளில் சென்று உங்களுக்கு அனுகூலம் தரும் ஸ்தலங்களில் வழிபட்டு வர வேண்டும். ராகு-கேதுக்களுக்கு உரிய நாகசாந்திப் பரிகாரங்களையும் சனிக்குரிய சிறப்பு ஸ்தல வழிபாடுகளையும் செய்ய வேண்டும்.

விருச்சிக குருவின் சஞ்சாரம்!

4.10.2018 இல் விருச்சிக இராசியில் சஞ்சரிக்கும் குரு பகவான் 28.10.2019 வரை சப்தம ஸ்தானத்தில் வீற்றிருந்து சகல யோகங்களையும் உங்களுக்கு வழங்கப் போகின்றார். இடையில் 13.3.2019 இல் தனுசு இராசிக்கு அதிசாரமாகச் செல்கின்றார். பிறகு 10.4.2019 அன்று தனுசு இராசியிலேயே வக்கிரம் பெறுகின்றார். மீண்டும் 19.5.2019 இல் விருச்சிக இராசியில் சஞ்சரித்து வக்கிர கதியிலேயே இருக்கின்றார். 7.8.2019 அன்று விருச்சிக குரு வக்கிர நிவர்த்தியாகின்றார். 28.10.2019 இல் தனுசு இராசிக்கு முறையாகச் செல்கின்றார்.

குருப்பெயர்ச்சியாகும் பொழுது 1, 3, 11 ஆகிய இடங்களைப் பார்க்கின்றார். எனவே மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறும். தங்கம், வெள்ளி தானாக வந்து சேரும். தனவரவு அதிகரிக்கும். இடையூறாக இருந்தவர்கள் இடத்தைவிட்டு விலகுவர். கடைதிறப்புவிழா, கட்டடத் திறப்பு விழா காண்பர்.

குரு பார்வையால் ஏற்படும் பலன்கள்!

குருவின் பரிபூரண பார்வை 1, 3, 11 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே தேக நலன், செயற்திறன், மகிழ்ச்சியான மனநிலை, கௌரவம், உடன்பிறப்புகளின் உதவி, வழக்குகள், மூத்த சகோதரர், பணியாளர்கள், தொழிலில் இலாபம், கௌரவபதவி, முன்னோர் சொத்து, பணப்புழக்கம் ஆகியவற்றில் எல்லாம் குருவின் பார்வை பலத்தால் நற்பலன்கள் கிடைக்கப் போகின்றன.

"ஜென்மத்தை குருதான் பார்த்தால் சிரமங்கள் அகன்று ஓடும்" என்பர். எனவே இதுவரை பட்ட துயரங்கள் இனி அகன்று ஓடும். உடல்நிலை சீராகி உற்சாகப் படுத்தும். உறவினர்களின் ஒத்துழைப்பு கூடுதலாகக் கிடைக்கும். விலகிச்சென்றவர்கள் விரும்பி வந்திணைவர். அரசு வழி உத்தியோக முயற்சி கைகூடும். வேலையும் விவாகமும் நெருங்கி வரும் நேரமிது.

"மூன்றினை குருதான் பார்த்தால் முயற்சியில் வெற்றி கிட்டும்" என்பது முன்னோர் வாக்கு. கூடப் பிறந்தவர்கள் வாட வைக்கிறார்களே என நினைத்த நிலை இனிமாறும். உங்கள் தொழிலுக்கு அவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். ஒருசிலர் கூட்டுத் தொழிலில் கூட அவர்களைச் சேர்த்துக் கொள்வர். சொத்து தொடர்பான பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். நீதி மன்றத்தில் நடைபெறும் வழக்குகளை எதிரிகள் வாபஸ் பெற்றுக் கொள்வர். எண்ணற்ற காரியங்களில் இருந்த தடைகள் எளிதில் விலகும்.

"பதினொன்றை குருதான் பார்த்தால் பணத்தேவை பூர்த்தியாகும்" என்பர். எனவே தொட்டது துலங்கும். கேட்டது கிடைக்கும். திட்டமிட்ட காரியங்களை திட்டமிட்ட படியே செய்து முடிப்பீர்கள். திடீர் தனவரவு வந்து திக்குமுக்காடச் செய்யும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வு, ஊதிய உயர்வு போன்றவை படிப்படியாகக் கிடைக்கும். அந்நிய தேசம் சென்று சம்பாதிக்க எண்ணிய வர்களுக்கு அதுவும் கை கூடும்.

நகைகள் வாங்கிச் சேர்க்கும் நேரமிது. அதுமட்டுமல்லாமல் முன்னோர்சொத்துக்களை கொடுத்து விட்டு, புதிய சொத்துக்கள் வாங்கி முன்னேற்றம் காண ஒருசிலர் முன்வருவர். அரசியல் களத்தில் உள்ளவர்களுக்கு அதிகாரப் பதவி கிடைக்கலாம். விருப்ப ஓய்வில் வெளிவந்து தொழில் செய்ய நினைக்கும் உத்தியோகத்தர்களுக்கு அதற்கான வாய்ப்பும்கைகூடி வரும்.

உங்கள் இராசிக்கு 8 இல் கேது வும் சனியும் இணையும் நேரத்தில் அனைத்திலும் கொஞ்சம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். வாழ்க்கைத் துணையோடு பிரச்சினை, வரிசுகளால் தொல்லை, சேர்க்கை சரியில்லாமல் சேமிப்புகள் கரைதல், தூக்க கலக்கமும் தொடரும் துன்பமும் தாக்கும் எதிர்ப்பும் தன்னிச்சையாக செயற்படாத உடலும் அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கக் காலத்தில் வருவது இயற்கைதான்.

எனவே திருநள்ளாறு, பெரிச்சிக்கோவில், குச்சானூர் போன்ற சனி வழிபாட்டையும் ஆலங்குடி, பட்டமங்கலம், சிங்கம்புணரி முத்துவடுகநாதர், கீழச்சிவல்பட்டி அருட்கவி முத்தப்பர் ஆலயங்களுக்குச் சென்று வாய்ப்புஇருக்கும் பொழுது வழிபட்டு வருவது நல்லது.

குருவின் பாதசார பலன்கள்!

இக்காலத்தில் குரு பகவான் தன் சுய சாரத்தில் சஞ்சரிக்கின்றார். எனவே குருப் பெயர்ச்சியானவுடன் குடும்ப முன்னேற்றம் கூடுதலாக இருக்கும். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். தொழிலில் எதிர்பார்த்த இலாபம் கிடைத்து மகிழ்வீர்கள். புகழ் மிக்கவர்களின் பட்டியலில் உங்களுக்கும் இடம் கிடைக்கும்.

கல்யாணக் கனவுகள் நனவாகும். கடமையில் இருந்த தொய்வு அகலும். பிள்ளைகளின் முன்னேற்றம் கண்டு பெருமைப்படுவீர்கள். நீண்ட நாட்களாக வாங்க நினைத்த பொருள்ஒன்றை வாங்கும் வாய்ப்பு கை கூடும். வீடு வாங்கிக் குடியேறும் யோகம் கூட ஒருசிலருக்கு உண்டு.

21.10.2018 முதல் 19.12.2018 வரை அனுச நட்சத்திரக்காலில் குரு சஞ்சரிக்கின்றார். சனி சாரத்தில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது மறைமுக எதிர்ப்புகள் மாறும். மாற்றுக் கருத்துடையோர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். தொழில் முன்னேற்றம் அதிகரிக்கும். அரசு வழி சலுகைகள் கிடைத்து தொழிலை விரிவு செய்ய முன்வருவீர்கள். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். புதிய ஒப்பந்தங்கள் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கும்.

20.12.2018 முதல் 12.3.2019 வரை மற்றும் 18.5.2019 முதல் 27.10.2019 வரை கேட்டை நட்சத்திரக்காலில் குரு பகவான் சஞ்சரிக்கின்றார். இதன் விளைவாக தன பஞ்சமாதிபதியான புதன் நற்பலன்களை உங்களுக்கு வழங்குவார். காரிய வெற்றி ஏற்படும். கட்டடப் பணிகள் தொடரும்.

உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர். பிள்ளைகளின் திருமணத்தை முன்னிட்டு சீர்வரிசை பொருட்களை வாங்கிச்சேர்ப்பதில் ஆர்வம் கூடும்.

13.3.2019 முதல் 17.5.2019 வரை மூலம் நட்சத்திரக்காலில் குரு பகவான் சஞ்சரிக்கின்றார். கேது சாரத்தில் சஞ்சரித்த குரு பகவான் தனுசு இராசிக்குள் பிரவேசிப்பதால் அவர் பார்வை 2, 4, 12 ஆகிய இடங்களில் பதிவாகின்றது. எனவே வாக்கு வளம் கூடும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். தனவரவிலிருந்த தடை அகலும். குடும்ப முன்னேற்றம் சிறப்பாக இருக்கும். தாய்வழி ஆதரவு உண்டு.

வாகனம் வாங்கும் யோகம் இருப்பதால் எதிர்பார்த்த இடத்தில் இருந்து உங்களுக்குத் தொகை கிடைக்கும். சுயதேவைக்கும் வாகனம் வாங்கலாம். பயணங்களால் பலன் கிடைக்கும் நேரமிது.

பொதுநலத்தில் உள்ளவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவு கிடைக்கும் நேரமிது.

குருவின் வக்கிர காலம்!

இந்தக் குருப்பெயர்ச்சிக் காலத்தில் வக்கிர இயக்கத்தில் அவர் இருக்கும் பொழுது விரயங்கள் கூடுதலாக இருக்கும். வீடு மாற்றம், உத்தியோக மாற்றம் தொடர்பான எண்ணங்கள் வலுக்கும். அதிக கவனம் செலுத்தியும் ஒருசில காரியங்கள் முடிவடையாது. ஆற்றல் மிக்கவர்கள் அருகிலிருந்தும் சில காரியங்களை முடித்துக்கொடுக்க மறுப்பர். உறவினர்கள் உதட்டில் ஒன்றும், உள்ளத்தில் ஒன்றும் வைத்துப் பேசுவர். கணக்கு, வழக்குகளை கச்சிதமாக வைத்துக்கொள்வது நல்லது.

செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!

உங்கள் இராசிநாதன் சுக்கிரன் என்பதால் வெள்ளிதோறும் அம்பிகை வழிபாடும், அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாடும் செய்யவும். யோக பலம் பெற்ற நாளில் வைத்தீஸ்வரன் கோவில் சென்று தையல்நாயகி சமேத வைத்திய நாதரை வழிபட்டு வருவது நல்லது.

புரட்டாதி 18 முதல் பொன்கொழிக்கும் நேரம்!

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

ரிஷப இராசியில் பிறந்த பெண்களுக்கு இந்த குருப்பெயர்ச்சி சாதகமான பலன்களை வாரி வழங்கப்போகின்றது. தேக்க நிலை மாறும். தெளிவு பிறக்கும். மாலை கிடைக்கவில்லையே என்று ஏங்கியவர்களுக்கு மாலை கிடைக்கும். வேலை கிடைக்கவில்லையே என்று வருத்தப்பட்டவர்களுக்கு வேலை கிடைக்கும். திருமணமான தம்பதிகளுக்கு புத்திரப்பேறு வாய்க்கும். குடும்ப ஒற்றுமை பலப்படும். இல்லம் கட்டிக்குடியேறும் யோகம் உண்டு.

தனுசில் குரு சஞ்சரிக்கும் பொழுது தாய்வழி ஆதரவும் சகோதர ஒத்துழைப்பும் கூடுதலாகக் கிடைக்கும். பணிபுரியும் பெண்களுக்கு பரிசீலனையில் இருந்த பதவி உயர்வு வந்து சேரும். மேலதிகாரிகள் உங்களுக்கு சலுகைகளை வழங்குவர். நினைத்தது நிறைவேற வியாழன் தோறும் குரு வழிபாட்டையும் ராகு-கேது பெயர்ச்சிக்காலத்தில் அதற்குரிய சர்ப்ப சாந்திப் பரிகாரத்தையும் சனிக்கிழமையன்று ஆதியந்தப் பிரபுவையும் வழிபடுவது நல்லது.

(தொடரும்)

கற்றல் உபகரணங்கல் வழங்கல்

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு இராணுவத்தினரால் பாடசாலை மாணவர்களுக்கு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு யாழ். மிருசுவில் யா/கரம்பகம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது.

பாதுகாப்பு படைகளின் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாராச்சியின் ஆலோசனையில், 52 ஆவது படைப் பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் லக் சிரிவடுகேயின் திட்டமிடலுக்கு அமைவாக "SHATTER THE SILENCE" நிறுவனத்தினரின் அனுசரணையுடன் கொண்டாடப் பட்ட சிறுவர் தினத்தில் பாடசாலையில் கல்வி கற்கும் 49 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் பாதணிகளும் வழங்கப்பட்டன. (இ-9)

வடமோடியில் மகாஜன இம்முறையும் வென்றது

2018 ஆம் ஆண்டிற்கான மாகாணமட்ட தமிழ்த் தினப் போட்டியில் வடமோடி கூத்தில் மகாஜனக் கல்லூரியின் இராவணேசன் கூத்து அணியினர் முதலாம் இடத்தைப் பெற்று வெற்றி வாகை சூடினர். தொடர்ந்து 4 ஆவது தடவையாக வெற்றியைத் தமதாக்கிக்கொண்டனர். அவர்களுக்கான பயிற்சியினை நாடகத்துறை ஆசிரியர் து.அயூரன் தொடர்ந்து வழங்கி வருகிறார். இப் போட்டி நேற்று இரா மநாதன் கல்லூரியில் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது. (இ-7)

வடக்கு மாகாணசபை உறுப்பினர் அய்யூப் அஸ்மினின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/87, ஜே/ 86 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த மூன்று பாலர் பாடசாலை சிறார்களை (100 குழந்தைகள்) இணைத்து யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி முன்றலில் சிறுவர் தினக் கொண்டாட்டம் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக யாழ். மாநகர சபை முதல்வர் இ.ஆனல்ட் கலந்து சிறப்பித்தார்.

நல்லைக்கந்தன் தண்ணீர்ப்பந்தல் உதவும் கரங்கள் அமைப்பினால் யாழ்.மத்திய கல்லூரி மாணவன் பீற்றர் சுரேஸ் இறேக்சனின் (தரம்-9) குடும்ப நிலையை கருதி துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டுள்ளது.

பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

பிறப்பு எண் 7 விதி எண் 1

கேது, சூரியன் ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் நல்ல குணத்தையும், அறிவையும், சிந்தனா சக்தியையும் பெற்றிருப்பார்கள். உயர்ந்த உள்ளம் கொண்ட மனிதர்கள். கதை, கவிதை, கட்டுரை, கலாசார நாட்டமுடையவர்கள். தன்னைச் சார்ந்தவர்கள், தனது குடும்பத்தினர் மற்றும் தனது நாட்டினருக்கும் பெருமை தேடித் தருவார்கள். இளமைக் காலத்திலேயே காதல் வயப்படுவார்கள். உயர்ந்த எண்ணங்கள் உடைய இவர்களை வெற்றிகள் தேடி வரும்.

ஈவு, இரக்கம் உடைய இவர்கள் தெய்வநம்பிக்கையில் சிறந்து விளங்குவார்கள். பிறருடைய துன்பத்தைக் கண்டு தனக்கு வந்தது போலவே கவலைப்படுவார்கள். மதவிடயங்களில் மிகுந்த நாட்டமுடையவர்கள். உலகமே மெச்சும் படியான பல நல்ல காரியங்களைச் செய்வார்கள்.

தெய்வ நம்பிக்கை, நல்ல குணம், நுண்ணறிவு உடையவர்கள். கண்ணுக்குப் புலப்படாத சக்திகளைப் பற்றி ஆராய்வார்கள். மந்திரம், யோகம், மனோசக்தி போன்ற கலைகளை அறிவார்கள். தீவிரமான உழைப்பாளிகள். சாதனைகள் செய்வார்கள். மூளை பலமுடையவர்கள். இவர்களின் முகத்தைப் பார்த்த உடனேயே இவர்கள் உயர்ந்த பண்புடையவர்கள் என்று கூறிவிடலாம். அளவுக் கதிகமான முகவசீகரமிருக்கும். தெய்வீகமும் சாந்தமும் உடையவர்கள்.

மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்திகளைப் பற்றி ஆராய்ச்சிகள் செய்வார்கள். முன்வைத்த காலைப் பின் வைக்க மாட்டார்கள். எடுத்த காரியத்தை முடித்தே தீருவார்கள். செயல்களில் தீவிரமான லட்சிய வெறி குடிகொண்டிருக்கும். இவர்கள் வெற்றிக்குப் பிடிவாதமே காரணமாகும். உடலையும், உள்ளத்தையும் எப்போதும் தூய்மையாகவே வைத்துக் கொள்வார்கள். சுத்தமான ஆடைகளையே அணிவார்கள்.

ஆடம்பரத்தை விரும்ப மாட்டார்கள். முகத்தில் தெளிவு இருக்கும். நல்ல உயரமான தோற்றமுடையவர்கள். எப்போதும் அமைதியுடன் காணப்படுவார்கள். பேச்சில் நிதானம் இருக்கும். தன்னம்பிக்கை, தைரியம், மனதில் உற்சாகம் இருக்கும். சிறந்த பேச்சாளராக மாறி வருவார்கள். நீதி நியாயங்களைத் தட்டிக் கேட்பார்கள். தனக்கென்று தனிக்கொள்கை வைத்திருப்பார்கள். அதன்படிதான் நடந்து கொள்வார்கள்.

குறைவான நல்ல நண்பர்களைப் பெற்றிருப்பார்கள். நேர்மையாக நடக்க விரும்புவதால் பல பேருடன் கருத்து வேறுபாடுகள் ஏற்படும். எல்லா விடயத்தையும் எளிதில் அறிந்து வைத்திருப்பார்கள். சுதந்திர உணர்ச்சி மிக்கவர்கள். பிறருக்குக் கட்டுப்பட்டு நடக்க மாட்டார்கள். எப்போதும் மகிழ்ச்சி நிரம்பியே இருக்க ஆசைப்படுவார்கள். எதிலும் புத்திசாலித்தனமாக நடந்து கொள்வார்கள். மற்றவர்களின் கேள்விகளுக்கு உடனுக்குடன் பதிலளிப் பார்கள். காதல் வலையில் எளிதில் விழுவார்கள். சீக்கிரமே உதறித் தள்ளியும் விடுவார்கள். எதையும் சாதிக்கும் ஆர்வமுள்ளவர்கள். பண விடயத்தில் கண்டிப்புடன் நடந்து கொள்வார்கள். செய்யும் தொழிலில் அதிக தன்னம்பிக்கையும், திறமையும் உடையவர்கள். உற்சாத்துடன் காட்சியளிப்பார்கள். ஆடம்பரத்தை அறவே வெறுத்து ஒதுக்கி விடுவார்கள். எல்லோரிடமும் உண்மையான அன்புடன் பழகுவார்கள். வருமுன் காத்துக் கொள்வார்கள்.



மிகவும் குழப்பமடைவார்கள். எதிலும் முடிவெடுக்க முடியாமல் திணறுவார்கள். கலைத் துறையில் பிரகாசிப்பார்கள். இயற்கையையும், பழைய வரலாற்றுச் சின்னங்களையும் கண்டு இரசிப்பார்கள். சமாதானம் செய்து வைப்பதில் கில்லாடிகள். சாத்வீகமான ஞானிகள் என்று போற்றப்படுவார்கள். இவர் கள் ஏதாவது ஒரு நல்ல தொழிலைக் கைவசம் வைத்திருப்பார்கள்.

வெளி நாட்டுத் தொடர்புகள் இருக்கும். குருபக்தி மற்றும் பெரியவர்கள் மீது பக்தியுடன் நடப்பார்கள். நன்மை, தீமை இரண்டையும் அலசி ஆராய்வார்கள்.

நண்பர்களிடம் நன்மதிப்பு இருக்கும். நாணயமிக்கவர்கள். ஆளும் குணம் படைத்தவர்கள். மற்றவர்கள் கருத்துக்கு எதிர்க்கருத்துப் பேசுவார்கள். தன்னுடைய இரகசியத்தை யாரிடமும் சொல்ல மாட்டார்கள். யாருக்கும் அடிபணியாத குணமிருக்கும்.

எல்லா விடயத்திலும் பலவித ஆராய்ச்சிகளை மேற்கொள்வார்கள். வெற்றிகள் கிட்டும் வரை முயற்சிகள் செய்த வண்ணமிருப்பார்கள்.

தோல்வி களைக் கண்டு பயப்படமாட்டார்கள். வெற்றிகளை கண்டு அலட்டிக் கொள்ளவும் மாட்டார்கள். அதிர்ஷ்டக் குறிப்புக்களை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

அதிர்ஷ்ட திகதிகள்
1,10,19,28,6,15,24,2,11,20,29

துரதிர்ஷ்ட திகதிகள்
8,17,26,4,13,22,31

அதிர்ஷ்ட நிறங்கள்
மஞ்சள், வெளிர்நீலம், சந்தனம், பொன்னிறம், பச்சை, வெளிர் பச்சை

துரதிர்ஷ்ட நிறங்கள்
கறுப்பு, சிவப்பு, கோப்பிக்கலர், பாக்கு நிறம், இருண்ட நிறங்கள்

அதிர்ஷ்ட இரத்தினங்கள்
மாணிக்கம், முத்து, ஓபல், சந்திரகாந்தக்கல், ஜேட், சூரியகாந்தக்கல், டைகர்ஸ்ஐ, வைடூரியம்.

(தொடரும்....)

இலங்கையில் தமிழர்

ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

60

கலாநிதி மு.குணசிங்கம்



திருக்கரசை மாநகர் சிவன் பார்வதி உருநாடு



கங்குவேலி கல்வெட்டு திருக்கரசை மாநகர்

மேலும், முதலிமை, தானம், வரிப்பற்று போன்ற பதவிப் பெயர்கள், கோணேசர் கோவில் நிர்வாகப் பதவிகளை ஏற்றுச் செயற்பட்டவர்களுக்கு கொடுக்கப்பட்டு இருந்தன எனவும் கோணேசர் கல்வெட்டு கூறுகின்றது. கங்குவேலியிலுள்ள கற்றூண் சாசனம் இதனை உறுதிப்படுத்துகின்றது.

மலையில் வன்னியனாரும் ஏழூரில் அடப்பர்களும் கோணநாதருக்குப் புல்வெளி ஒன்றினால் வரும் வருமானங்களைத் தானமாக வழங்கியமை பற்றி இது கூறுகின்றது. அதில் வரும் மலையில் வன்னியனார் என்பது திருகோணமலை வன்னியனாருக்கு உரியதான பெயராகவும் கொள்ள முடிகிறது.

அத்தோடு கோணேசர் கோவிலுக்குரிய வருமானத்தைப் பெறுகின்ற உரிமையையும் கோணேஸ்வர வன்னியரசன் ஏனைய வன்னிப் பற்றுக்களிலிருந்து பெற்றான் என்பதனையும் மேற்படி சாசனம் மூலமாக ஊகிக்கமுடிகிறது. மேலும் இவ்விடயம் பற்றிக் கோணேசர் கல்வெட்டும் மிக விரிவாகக் கூறுகின்றது.

பல அரசுகள், அரசர்கள், செல்வந்தர்கள், வணிக கணங்கள் கோணேஸ்வர தலத்துக்குக் கொடுத்த தானங்கள், நன்கொடைகள் பற்றி விரிவான தகவல்களைச் சொல்கின்றது. இந் நிலையில் திருகோணமலை வன்னி அரசன் ஏனைய மூன்று வன்னிப்பற்று அரசர்களைவிட முக்கியம் வாய்ந்தவனாக வரலாற்றில் இடம்பெறுவதை அவதானிக்க முடிகிறது.

யாழ்ப்பாண இராச்சியத்திலிருந்து அதிக தூரத்தில் திருகோணமலை வன்னிச் சிற்றரசர்கள் இருந்ததன் விளைவாக, அவ் வன்னி அரசர்கள் குறிப்பிடத்தக்க அளவு சுய ஆட்சி உரிமை கொண்டவர்களாகக் காணப்படுகின்றார்கள். போர்த்துக்கீச ஆட்சி இலங்கையில் ஆரம்பிக்கும்வரை அவர்கள் சுதந்திரமாக இயங்கியுள்ளனர் என்பதனை வரலாற்று ஆவணங்களிலுள்ள குறிப்புகளினூடாக அறியமுடிகிறது.

மட்டக்களப்பிலுள்ள வன்னிமைகள், மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பெரும்பாலான ஊர்களைத் தன்னகத்தே அடக்கியுள்ளன. மத்திய கால வரலாற்று நிகழ்வுகள், புவியியற் பின்னணிகள், சமூகப் பண்பாட்டு வழமைகள் ஆகிய வற்றின் அடிப்படையில் மட்டக்களப்புப் பிரதேசம் ஒரு தனித்தன்மை கொண்ட பிரதேசமாவும், ஏனைய வடக்கு, கிழக்கு, வட மேற்குப் பிரதேசங்களிலுள்ள சமய, கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களிலிருந்து சற்று மாறுபட்ட தன்மை கொண்ட தமிழர் வாழும் பிரதேசமாகவும் காணப்படுகின்றது.

எட்டுப் பற்றுக்களைக் கொண்ட மட்டக்களப்பு பிரதேசத்தில், வன்னியரின் ஆட்சியின் கீழ் ஐந்து சிற்றரசுகள் இருந்திருக்கின்றன. மட்டக்களப்பு, பழுகாமம், சம்மாந்துறை, ஏறாவூர், பாணமை ஆகியவற்றில் உள்ள வன்னிமைகள் பற்றி ஐரோப்பியர்கள் எழுதிய ஆவணங்களிலே குறிப்புகள் உண்டு.

நாடு காடுபற்றிலிருந்த வன்னியர்கள் பற்றித் தமிழ் நூல்கள் மூலமாகவே அறியமுடிகிறது. மட்டக்களப்பு வன்னிமைகள் பற்றி போர்த்துக்கீச அறிஞர் கேறோஸின் குறிப்புகளும், ஒல்லாந்தர் காலத்தில் எழுதப்பட்ட மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் என்னும் நூலும், இப் பிரதேச வன்னிமைகள் பற்றிய பல தரவுகளைத் தருகின்றன.

ஆனால், மட்டக்களப்பு பூர்வீக சரித்திரம் கூறும் கதைகளில் பெரும்பாலானவை, ஏனைய தமிழ் வரலாற்று நூல்களான வையாபாடல், கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவமாலை போன்ற நூல்கள் பின்பற்றிய வரலாற்றுப் பாரம்பரியத்தையே கொண்டிருந்தமையையும் அந் நூல்களில் வரும் செய்திகளினூடாக அறிய முடிகிறது.

கேறோஸும், வாய்மொழியாகக் கேட்டறிந்த பல வாய்மொழிக் கதை மரபுகளையும் தனது நூலில் சேர்த்துள்ளமை, சில வேளைகளில் அதன் நம்பகத்தன்மையை குறைப் பதாகவும் காணப்படுகின்றது. புவியியல் ரீதியாக மட்டக்களப்பு வன்னிமைகள் யாழ்ப்பாண இராச்சிய ஆட்சிப்பீடமாகிய யாழ்ப்பாணத்திலிருந்து அதிக தொலைவில் உள்ள ஒரு பிரதேசமாகும்.

ஆனால், இனத்தாலும், மொழியாலும், மதத்தாலும் வரலாற்றுக் காலத்திலிருந்து ஒரு தமிழர் தேசமாக இருந்து வந்திருக்கின்றது. அங்குள்ள சமூக, பண்பாட்டு, கலாசார விழுமியங்கள் ஏனைய தமிழ்ப் பிரதேசங்களைவிடச் சற்று வேறுபாடுகளைக் கொண்டிருந்தாலும் அப்பிரதேசம், ஏனைய தமிழ்ப் பிரதேசங்களோடு வரலாற்று ரீதியாக ஒருங்கிணைந்த பிரதேசமாகும்.

மத்திய கால இலங்கையில் இடம் பெற்ற பல்வேறு நிகழ்வுகளினால் பத்தாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலிருந்து, அதாவது சோழர் ஆட்சியின் போது தமிழ், கேரளம், கன்னடம், மலையாளம், தெலுங்கு போன்ற பல்வேறு பிரிவினர் பெருந்தொகையாக வந்து இப் பிரதேசங்களில் குடியேறியமை, பின்னர், பதின்மூன்றாம், பதினான்காம் நூற்றாண்டுகளில் இந்தியாவிலிருந்தும் மத்திய கிழக்குப் பிரதேசங்களிலிருந்தும் கணிசமான முஸ்லிம்கள் வந்து குடியேறியமை, அதனைத் தொடர்ந்து கண்டி இராச்சியத்தின் எழுச்சி, யாழ்ப்பாண இராச்சியத்தின் வீழ்ச்சி என்பன வற்றினால் அப்பிரதேச மக்கள் பல சமய, சமூக, கலை, கலாசார மாற்றங்களுக்கு உட்படவேண்டிய ஒரு நிர்ப்பந்தத்திற்கு உள்ளடக்கப் பட்டிருக்கின்றார்கள் என்பது வரலாற்று உண்மையாகும்.

அவ்வாறான மாற்றங்கள் நிகழ்ந்தபோதும், வடக்கு, கிழக்கு, வடமேற்குப் பிராந்தியங்கள் தமிழ்ப் பிரதேசம் என்ற தேசிய ஒருமைப்பாட்டிற்குள்ளும், தொடர்ச்சியான வரலாற்றுப் பாரம்பரியத்துக்குள்ளும் சுழன்று சுழன்று நிற்கும் ஒரு மாறாத் தன்மை கொண்டவையாக அமைவதையே மத்திய காலத்திற்குப் பின்வருகின்ற நவீனகால வரலாற்று நிகழ்வுகள் காட்டி நிற்கின்றன.

யாழ்ப்பாண இராச்சியம் பதினான்காம், பதினைந்தாம் நூற்றாண்டுகளில் வலிமையுள்ள இராச்சியமாக இருந்தவேளையில், இலங்கையின் வடக்கு, கிழக்கு, வடமேற்குப் பிரதேசங்களிலுள்ள சிற்றரசுகள் அனைத்தும் யாழ்ப்பாண இராச்சியத்தின் சாமந்த அரசுகளாகவும் யாழ்ப்பாண இராச்சியத்தின் எழுச்சிக்குப் பக்கபலமாக இருந்திருப்பதையும் கேறோஸ், வான்கூன்ஸ் போன்ற போர்த்துக்கீச, ஒல்லாந்த அறிஞர்களின் ஆவணங்கள் மூலம் ஏற்கனவே எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

முன்னர் குறிப்பிட்டது போல, யாழ்ப்பாண இராச்சியத்தின் ஆதிக்கமும், செல்வாக்கும் கிழக்கில் மட்டக்களப்பிற்கு அப்பால் கல்முனை வரை பரந்து இருந்ததென ஒல்லாந்து தேசாதிபதி வான்கூன்ஸின் ஆவணக் குறிப்பு இதனை உறுதிப்படுத்துவதாகவும் உள்ளது.

மேலும், யாழ்ப்பாண இராச்சியத்தில் ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சி பதினான்காம் நூற்றாண்டில் வீழ்ச்சியடைந்து, பதினைந்தாம் நூற்றாண்டில் கோட்டை இராச்சியம் எழுச்சி பெற்ற போது, மட்டக்களப்பு அரசர்கள் கோட்டை இராச்சியத்துக்கு ஆதரவு அளித்தவர்களாகக் காணப்படுகின்றார்கள். வலு குறைந்த அரசுகள், வலுவுள்ள அரசுகளுடன் தொடர்புகளை ஏற்படுத்துவது பொதுவான வரலாற்று நியதியாகும். பின்னர் பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் யாழ்ப்பாண இராச்சியம் மீண்டும் வலுவுள்ள ஒரு அரசாக எழுச்சி பெற்ற போது, அதே மட்டக்களப்பு அரசர்கள் யாழ்ப்பாண அரசோடு இணைந்து செயற்பட்டனர்.

> “மேலும், யாழ்ப்பாண இராச்சியத்தில் ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சி பதினான்காம் நூற்றாண்டில் வீழ்ச்சியடைந்து, பதினைந்தாம் நூற்றாண்டில் கோட்டை இராச்சியம் எழுச்சி பெற்ற போது, மட்டக்களப்பு அரசர்கள் கோட்டை இராச்சியத்துக்கு ஆதரவு அளித்தவர்களாகக் காணப்படுகின்றார்கள். வலு குறைந்த அரசுகள், வலுவுள்ள அரசுகளுடன் தொடர்புகளை ஏற்படுத்துவது பொதுவான வரலாற்று நியதியாகும். பின்னர் பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் யாழ்ப்பாண இராச்சியம் மீண்டும் வலுவுள்ள ஒரு அரசாக எழுச்சி பெற்ற போது, அதே மட்டக்களப்பு அரசர்கள் யாழ்ப்பாண அரசோடு இணைந்து செயற்பட்டனர்” ”

யாழ்ப்பாண இராச்சியமும் வன்னிச் சிற்றரசுகளும் (கி.பி. 1200-கி.பி. 1500)

மேலும், யாழ்ப்பாண இராச்சியத்தில் ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சி பதினான்காம் நூற்றாண்டில் வீழ்ச்சியடைந்து, பதினைந்தாம் நூற்றாண்டில் கோட்டை இராச்சியம் எழுச்சி பெற்ற போது, மட்டக்களப்பு அரசர்கள் கோட்டை இராச்சியத்துக்கு ஆதரவு அளித்தவர்களாகக் காணப்படுகின்றார்கள். வலு குறைந்த அரசுகள், வலுவுள்ள அரசுகளுடன் தொடர்புகளை ஏற்படுத்துவது பொதுவான வரலாற்று நியதியாகும். பின்னர் பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் யாழ்ப்பாண இராச்சியம் மீண்டும் வலுவுள்ள ஒரு அரசாக எழுச்சி பெற்ற போது, அதே மட்டக்களப்பு அரசர்கள் யாழ்ப்பாண அரசோடு இணைந்து செயற்பட்டனர்.

(தொடரும்)

தென்மராட்சி போக்கட்டி அ.த.க. பாடசாலையின் சிறுவர் தினமும் சரஸ்வதி சிலைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வும் பாடசாலை அதிபர் அபராஜிதன் தலைமையில் பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலய கல்வி பணிப்பாளர் சு.சுந்தரசிவமும் சிறப்புவிருந்தினராக பிரதிக்கல்வி பணிப்பாளர் திருமதி சிவத்திரை சிவநாதனும் கலந்து சிறப்பித்தனர். சிறுவர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டதுடன் சரஸ்வதி சிலை அமைப்பதற்கான அடிக்கல்லும் நாட்டிவைக்கப்பட்டது.சரஸ்வதிசிலையினை ஆசிரியர் குமரநாதன் வடிவமைக்கவுள்ளார். (படங்கள்:- விஜயவாசன்)

நல்லொழுக்க தின கொடிவாரம் ஆரம்பம்

(கரணவாய்)

சர்வதேச நல்லொழுக்க தினத்தை முன்னிட்டு நேற்றுக் காலை 9மணியளவில் கரவெட்டி பிரதேச செயலகத்துக்கு முன் கொடிவாரம் ஆரம்பிக்கப்பட்டது. நல்லொழுக்க நிறுவனத்தின் தலைவர் மு.ரவீந்திரன், கொடிவாரத்தை ஆரம்பித்து வைத்தார். (இ-60)

வகுப்புக்களை நடத்திச் செல்வதற்கான வளவாளர்களை இணைத்துக்கொள்ளல்

(யாழ்ப்பாணம்)

உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் தென் மராட்சி பிரதேச செயலர் பிரிவின் வரணிப் பகுதியில் அமைந்திருக்கும் கலாசார மத்திய நிலையம் மற்றும் கிராமிய நிலையங்களில் கர்நாடக சங்கீதம்,பரத நாட்டியம், சித்திரமும் வடிவமைப்பும், நாடகமும் அரங்கியலும், சிங்கள மொழி, ஆங்கில மொழி மற்றும் இசைக் கருவிகள் ஆகியபாடநெறிகளை நடத்துவதற்கான நடவடிக்கைகளை அமைச்சு மேற் கொண்டுள்ளது.

எனவேகுறித்த பாடநெறிகளை கற்பிக்க ஆர்வமுடைய தென்மராட்சி பிரதேச செயலக பிரிவுக்குட் பட்ட வளவாளர்கள்(ஆசிரியர்கள்) தங்களது சுயவிபரங்களை 27. 10.2018 ஆம் திகதிக்கு முன்னர் நிலைய பொறுப்பதிகாரி, கலாசார மத்திய நிலையம், குடமியன், வரணி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு: 077 977 0732 என வரணி கலாசார மத்திய நிலையப் பொறுப்பதிகாரி சி.மகிந் தன் அறிவித்துள்ளார். (

தாழை மரத்தில் தூக்கில் தொங்கிய 13 வயதுச் சிறுமி

கொலையா? தற்கொலையா?

(கொழும்பு)

காலி தடல்ல பிரதேச கடற்கரைப் பகுதியில் தாழை மரமொன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் சிறுமியொருவரின் சடலம் நேற்று முன்தினம் பிற்பகல் மீட்கப்பட்டுள்ளது.

மேலும், கொடகவெல பிரதேசத்தைச் சேர்ந்த 13 வயதான சிறுமியே இவ்வாறு உயிரிழந்தவர் என தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சிறுமி இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னர் காணாமல்போன நிலையில் சடலமாக மீட்கப்பட்ட தாக தெரிவிக்கப்படுகிறது.

காணாமல் போனமை தொடர்பாக குறித்த சிறுமியின் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இது தற்கொலையா? கொலையா? என, காலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

"நவீன வசதியுடன் கூடிய பாதுகாப்புப் பெட்டகம்" நிதி நிறுவனங்களுக்குப் பொலிஸார் அறிவுரை

(சாவகச்சேரி)

சாவகச்சேரியிலுள்ள அரச மற்றும் தனியார் நிதி நிறுவனங்களுக்கு சாவகச்சேரி பொலிஸாரால் ஆலோசனைக் கூட்டம் ஒன்று அண்மையில் சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்றது. இதன் போது நிதி நிறுவனங்களின் பாதுகாப்பு தொடர்பாக நிதி நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. அதாவது பல நிதி நிறுவனங்களில் பாதுகாப்பான லொக்கர் இல்லை என பொலிஸாரால் சுட்டிக்காட்டப்பட்டது. அவ்வாறான நிதி நிறுவனங்கள் பாதுகாப்பான நவீன லொக்கர்களை பயன்பாட்டில் வைத்திருக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளனர். அத்துடன் சில தனியார் நிதி நிறுவனங்களில் பெண்களே அதிகளவில் காணப்படுவதாகவும் அவ்வாறான நிதி நிறுவனங்கள் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை கடமைக்கு அமர்த்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.

மேலும் நிதி நிறுவனங்கள் மாலை 6 மணியுடன் மூடப்பட வேண்டும். ஆனால் பல தனியார் நிதி நிறுவனங்கள் மாலை 6 மணிக்கு பின்னரும் இயங்கி வருகிறது. இது பாதுகாப்பு இல்லை. சகல நிதி நிறுவனங்களும் நவீன வசதியுடன் கூடிய பாதுகாப்புப் பெட்டகங்கள் மற்றும் வலுவான உத்தியோகத்தர், பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் இயங்கும் பட்சத்தில் தவறுகள் நடக்காமல் பார்த்துக் கொள்ள முடியும் எனவும் பொலிஸாரால் நிதி நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் சாவகச்சேரியிலுள்ள சில வங்கிகளின் அதிகாரிகள் கலந்துகொள்ளவில்லை என பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொள்ளாதவர்கள் ஏதாவது அசம்பாவிதங்கள் நடைபெற்ற பின்னரே பொலிஸ் நிலையங்களை நாடுகிறார்கள். அசம்பாவிதங்கள் நடந்த பின்னர் பொலிஸ் நிலையத்தை நாடுவதை விட அசம்பாவிதங்களை தடுக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும். இதற்கு சாவகச்சேரியில் உள்ள தனியார் நிதி நிறுவனத்தில் அண்மையில் இடம்பெற்ற திட்டமிட்ட திருட்டுச் செயல் நல்ல முன் உதாரணம் என சாவகச்சேரிப் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர். (இ-30)

தமிழர்களின் அபிலாசைகள் குறித்து அமெரிக்க அரசு கூடுதல் கரிசனை

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான அமெரிக்க தூதரகத்தின் அரசியல் பிரிவு அதிகாரிகளுக்கும் ஜனநாயகப் போராளிகள் கட்சினருக்குமிடையிலான சந்திப்பொன்று நேற்று முன் தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

2009 ஆம் ஆண்டுக்கு பின்னரான காலப்பகுதியில் தமிழர்களின் சமூகப்பொருளாதார விடுதலை தொடர்பிலான அரசியல் பணி எவ்வளவு தூரம் முக்கியத்துவம் பெறுகிறது என்பது தொடர்பிலும் இடருற்று இன்னல்களை சந்தித்த தமிழர்களின் வாழ்வியல் போக்கில் மாறுதல்கள் தொடர்பில் போராளிகளது அரசியல் பணிகளின் காத்திரமான பங்களிப்பு தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

ஜனநாயகப்போராளிகள் கட்சியின் தற்போதை தாயக அரசியல் முன்னெடுப்புக்கள் தொடர்பிலும் போராளிகளது அரசியல் பிரவேசம் குறித்தும் அமெரிக்க அரசு கரிசனையுடன் அவதானித்து வருவதாக தெரிவிக்கப்பட்டது.

தமிழர்களுக்கான சாத்தியப்பாடான அரசியல் தீர்வினைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் தமிழர்களது அபிலாசைகள் தொடர்பில் கரிசனையுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் இணைந்து பயணிக்க வேண்டியதன் அவசியத்தையும் அந்த ஒற்றை காரணத்துக்காகவே 2000 ஆண்டுக்கு பின் விடுதலைப்புலிகள் கூட்டமைப்பை நிறுவினர் என்றும் அதன் அவசியம் இன்றுவரை தொடர்வதாகவும் ஜனநாயகப் போராளிகள் கட்சியால் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் எவ்வாறான ஆட்சி மாற்றங்கள் நிகழ்ந்தாலும் தமிழர்களுக்கான நீதியுடன் கூடிய கௌரவமான வாழ்வினை உறுதி செய்யும் கரிசனையோடு அமெரிக்க அரசு தொடர்ந்து காரியமாற்றுமென இச்சந்திப்பில் எடுத்துரைக்கப்பட்டது. (இ-281)

தென்மராட்சி-கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் உலக சிறுவர் தினம் கடந்த திங்கட்கிழமை பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. பாடசாலை அதிபர் கா.குணசிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தேசிய சேமிப்பு வங்கியின் கொடிகாமக் கிளை முகாமையாளர் அன்ரன் யோகநாயகம் கலந்து சிறப்பித்தார். (படம்:-சுபேசன்)

மகாத்மா காந்தியின் 150 ஆவது பிறந்த தின நிகழ்வும் மரம் நாட்டும் நிகழ்வும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்.பருத்தித்துறை நகரசபைத் தவிசாளர் யோ.இருதயராஜா தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக யாழ்.இந்தியத் துணை தூதரக நிறைவேற்று தலைமை அதிகாரி இரமேசர் பர்த்தா, மாகாண சபை உறுப்பினர்களான வே.சிவயோகன், சி.அகிலதாஸ், க.தர்மலிங்கம், எம்.கே.சிவாஜிலிங்கம், பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் சா.அரியகுமார், கரவெட்டி பிரதேச சபை உறுப்பினர் க.இரத்தினம் மற்றும் நகரசபை உறுப்பினர்கள், பிரதேச உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:-மகாலிங்கம்)

தேர்தலில் அதிகபட்ச உறுப்பினர்கள் இலக்கு

5 தமிழ்க் கட்சிகள் இணைந்து கிழக்கில் புதிய அரசியல் கூட்டு

(ஏறாவூர்)

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் கிழக்கு மாகாணத் தமிழர்கள் சார்பில் அதி உச்சபட்ச உறுப்பினர்களைப் பெற்றுக் கொள்ளும் வகையில் அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளையும் ஒருபொதுச் சின்னத்தின் கீழ் ஓரணியில் போட்டியிட வைப்பதற்காக 'கிழக்குத் தமிழர் ஒன்றியம்' எடுத்துக் கொண்ட முயற்சியின் முக்கிய கட்டமாக, ஓரணியில் இணைந்து போட்டியிட இதுவரை சம்மதித்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, தமிழர் சமூக ஜனநாயகக்கட்சி, அகில இலங்கை தமிழர் மகா சபை ஆகிய ஐந்து தமிழ்க் கட்சிகளும் இணைந்த அரசியல் கூட்டு அணியொன்றினை (Political Alliance) உருவாக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுவது சம்பந்தமான கலந்துரையாடல் கூட்டமொன்று நாளை வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெறுவதற்கான ஏற்பாட்டைக் கிழக்குத் தமிழர் ஒன்றியம் செய்துள்ளது.(இ-7)

கையடக்கத் தொலைபேசிப் பாவனையே அதிகளவு விபத்துக்களுக்குக் காரணம்

அமைச்சர் நிமால் தெரிவிப்பு

(கொழும்பு)

வீதி விபத்துக்களைக் குறைக்க வேண்டுமானால் காலாவதியான சட்டங்களுக்குப் பதிலாக புதிய சட்ட திட்டங்களை உருவாக்க வேண்டுமென போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சில் நேற்று முன் தினம் இடம்பெற்ற நிகழ்ச்சியொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இனங்காணப்படாத வாகனங்களில் மோதி விபத்துக்குள்ளானவர்கள் சார்பில் இழப்பு வழங்கும் நோக்கத்துடன் குறித்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வீதி விபத்துக்களைக் குறைக்க சட்ட திட்டங்களை கடுமையாக்குவது அவசியம். கூடுதலாக விபத்துக்கள் நிகழும் இடங்களைக் கண்டறிந்து அங்கு சி.சி.ரி.வி. கமராக்களைப் பொருத்தலாம். பாதசாரிகளும், வீதிப் போக்குவரத்து விதிகளை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்திக் கொண்டு வீதியைக் கடக்கும் பாதசாரிகள் காரணமாக அதிகளவு விபத்துக்கள் நிகழ்ந்துள்ளதாக போக்குவரத்து அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு யாழ். சங்கானை அமெரிக்கன் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையில் இடம்பெற்ற சிறுவர், முதியோர் தின நிகழ்வில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட நிர்வாகச் செயலாளரும் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் உறுப்பினருமான சிவகுருபால கிருஷ்ணன் சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

சிறுவர் அரங்கம்

வாசிப்பு மாதம் ஒக்டோபர் - 2018

காளை மாட்டைச் சுமந்த சிறுவன்

கதை

ஒரு மைதானத்தைச் சுற்றி நூற்றுக்கணக்கான மக்கள் ஆர்வத்துடன் கூடி நின்றனர். மைதானத்தின் நடுவில் இருபத்தொரு வயது மதிக்கத்தக்க ஓர் இளைஞன் முழுமையாக வளர்ந்த காளை மாடொன்றைச் சாதாரணமாக தனது தோளில் சுமந்தபடி மைதானத்தைச் சுற்றி நடந்து கொண்டிருந்தான்.

அவன் அச்சாதனையை முடித்ததும் சிலர் அவனிடம் சென்று அச்சாதனையைப் பற்றி வியப்புடன் வினவினர். அப்போது அவன் பின்வருமாறு கூறினான். 'நான் சிறுவனாக இருக்கும்போது இக்காளை மாட்டை எனது தந்தை சிறு கன்றுக் குட்டியாக வாங்கி வந்தார்.

வாங்கிய நாள் முதல் கன்றுக் குட்டியை தோளில் சுமந்து விளையாடுவது எனது வழக்கம். அதை ஒவ்வொரு நாளும் தொடர்ந்து செய்து கொண்டே வந்தேன்.

தினமும் தூக்கும்போது கன்றுக் குட்டியின் நிறையில் ஏற்பட்ட மாற்றத்தை என்னால் உணர முடியவில்லை. அது போலவே கன்றுக்குட்டியை தினமும் சுமக்க சுமக்க எனது உடலும் வலுவடைந்தது.



எனவே கன்றுக்குட்டி காளை மாடான பின்னும் என்னால் இலகுவாக சுமக்க முடிகின்றது' என்றான்.

கதை கூறும் கதை

இக்கதை கூறும் உண்மையாதெனில், சாதாரண மனிதர்களால் சாதிக்க முடியாதனவற்றை எல்லாம் சிலர் சாதித்து விடுகின்றனர். நாம் அவர்களின் சாதனைகளை மட்டும் கண்டு வியக்கின்றோம். அவர்கள் அச்சாதனைக்காக செய்த முயற்சிகள், பயிற்சிகள், செலவிட்ட காலங்கள், அர்ப்பணிப்புக்கள் இது பற்றியெல்லாம் எமக்குத்தான் தெரியாது.

சில நிமிடங்கள் செய்யும் சாதனைக்காக பல வருடங்களைச் செலவிட்டிருப்பார்கள். எவ்வளவு சோதனைகளைத் தாண்டியிருப்பார்கள். ஒலிம்பிக்கில் 100 மீற்றரில் தங்கம் வென்ற உசைன் வோல்ட் 9 செக்கன் தான் ஓடினார். அவர் அதற்காக எத்தனை ஆண்டுகள் பயிற்சி செய்திருப்பார்கள். சீரான பயிற்சி, உணவுக் கட்டுப்பாடு எனப் பல வருடங்கள் கடுமையாக உழைத்திருப்பார். இவ்வாறு பல சோதனைகளுக்குப் பின்பே 9 விநாடிகளில் அச்சாதனையை நிலை நாட்டினார். புரிகிறதா? சாதனைகள் ஒன்றும் அதிர்ஷ்டவசமாக நிகழ்த்தப்படுவதில்லை.

பூசணித்திருடன்



ஒரு மனிதன் காய்கறித் தோட்டம் ஒன்றிலிருந்து சாம்பல் பூசணிக்காய் ஒன்றை திருடி அதை தனது தோளில் வைத்து தனது வீட்டிற்கு எடுத்துச் சென்றான். தோட்டச் சொந்தக்காரனான விவசாயிக்கு சரியான கோபம். அவன் கிராமவாசி எல்லோரையும் பறை சாற்றி ஒன்றுகூட்டினான். அவன் அவர்களுக்குச் சொன்னான்.

நான் உங்கள் ஒவ்வொருவருடைய தோளையும் பார்த்தால் திருடனைக் கண்டுபிடித்து விடுவேன். பூசணிக்காயிலுள்ள சாம்பல் இன்றும் திருடனுடைய தோளில் இருக்கும்.

இதைக் கேட்ட ஒருவன் தனது சாக்குப் பையினால் தனது தோளில் தட்டினான். அவனே சாம்பல் பூசணிக்காய் திருடன் பிடிபட்டான்.

மக்கள் தங்களுக்குத் தாங்களே செய்து கொள்ள வேண்டியவற்றை நீங்கள் அவர்களுக்குச் செய்வதன் மூலம் அவர்களுக்கு நிரந்தரமாக உதவ முடியாது.

-ஆபிரகாம் லிங்கன்-

ஆபிரகாம் லிங்கன் என்ன சொல்கிறார் என்றால் மக்களுக்கு உதவுவதாக இருந்தால் இயன்றளவு தற்காலிக உதவிகளைத் தவிர்த்து நிரந்தர உதவிகளைச் செய்யுங்கள். உதாரணமாக பரீட்சைகளில் நண்பர்களுக்கு விடை சொல்லிக் கொடுப்பது நீங்கள் அவர்களுக்குச் செய்யும் உதவி அல்ல. நீங்கள் நண்பர்களுக்கு உதவி செய்வதாக இருந்தால் படிக்கும் நேரத்தில் விளங்காதவற்றை அவர்களுக்கு விளங்கப்படுத்துங்கள். சேர்ந்து படிக்க அழையுங்கள். பரீட்சையின் போது விடை சொல்லிக் கொடுக்காதீர்கள். எதுவரை உங்களால் பரீட்சைகளில் விடை சொல்லிக்கொடுக்க முடியும்...?

- புத்தகங்கள் புத்தாக்கம் செய்யும்.
- புத்தகம் திறந்தால் வித்தகம் பிறக்கும்.
- நீ படித்தால் உன்னைப் படிப்பார்கள்.
- நூல் கற்போர் ஆல் போல் வாழ்வார்.
- புத்தகங்கள் சட்டைப்பையில் இருக்கும் பூந்தோட்டம்.
- ஏடு படிப்போரை நாடு போற்றும்.
- புத்திசாலித்தனமான பரிசு புத்தகங்கள்.

நாங்கள் படித்ததை நீங்களும் படியுங்கள்...







ஈ ஒன்று தன் பெயரை மறந்து விட்டது.
ஈ ஒரு பூனையைக் கண்டது.
பூனை, பூனை என் பெயரை மறந்துவிட்டேன். என் பெயரைச் சொல் என்றது.
பூனை மியா... மியா... என்றது.
ஈ இது என் பெயர் இல்லை என்றது.
ஈ ஒரு நாயைக் கண்டது.
நாய் என் பெயரை மறந்து விட்டேன் சொல் என்றது.
நாய் வள்... வள்... என்றது.
ஈ இது என் பெயர் இல்லை என்றது.
ஈ ஒரு குதிரையைக் கண்டது.
குதிரை, குதிரை என் பெயரை மறந்து விட்டேன். என் பெயரைச் சொல் என்றது.
குதிரை ஈ... ஈ... என்றது.
உடனே "ஈ" தெரியும், தெரியும் என்று பறந்து போனது.

தொகுப்பு:- கொக்குவில் பொது நூலகம்

அழுவார் அழுவார் எல்லாம் தம் கருமம்
துருவன் பெண்டிலுக்கு அழுவார் இல்லை.
– தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

ஆளுநரின் அதிகாரம் வடக்கில் வரும்போது...

இனம், மதம், மொழி என்ற பேதங்கடந்து வாழுகின்ற வாழ்வுதான் இலங்கைத் தீவின் இன்றைய தேவையாகும்.

எனினும் நம் மண்ணில் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் வாழுகின்றனரே தவிர, இலங்கையர்கள் வாழ்வதாகத் தெரியவில்லை. இங்குதான் நாட்டின் துன்பம் தொடங்குகிறது.

அதாவது இன, மத, மொழி பேதங்கடந்து சேவையாற்றுகின்ற மனநிலை ஆட்சியாளர்கள் முதல் பெரும்பான்மை இனம் சார்ந்த உயர் அதிகாரிகள்வரை எவரிடமும் இல்லை என்றாயிற்று.

தவிர, முஸ்லிம் சகோதரர்கள் தமக்கிடையே ஒரு வலுவான ஒற்றுமையை – உறவை ஏற்படுத்திக் கொண்டு தம் இனத்தின் எதிர்கால நலன் என்பதில் மிகவும் விழிப்பாக இருக்கின்றனர்.

அதிலும் குறிப்பாக கிழக்கு மாகாணத்தை தமக்குரியதாக்குவதில் அவர்களின் திட்டமிடல் மிக உச்சமாக அரங்கேறுகிறது.

இவ்வாறு சிங்கள இனம் ஆட்சி என்ற அதிகாரத்தினூடும் முஸ்லிம் இனம் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தன் இனத்தைப் பலப்படுத்துதல் என்ற வகையிலும் இருக்க,

தமிழ் இனம் மட்டும் அரசியல் ரீதியிலும் ஒற்றுமையில்லை. அதிகாரிகளும் அரசுடன் சேர்ந்து போவதுதான் தம் இருப்புக்கு நல்லது என்ற அடிப்படையில் தமிழினத்துக்கு நடக்கின்ற அநியாயங்கள் – திட்டமிட்ட ஓரங்கட்டு தலையெல்லாம் அறிந்திருந்தும் அவை பற்றி எவரிடமும் தெரிவிக்காமல் இருக்கின்றனர்.

இதற்கு மேலாக, தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்கின்றவர்களைத் தங்கள் அரசியல் நலனுக்காக விமர்சித்து எதிர்வாதம் புரிகின்ற கீழ்மைத்தனங்களும் நடந்தாகின்றன.

நிலைமை இதுவாக இருக்கையில், வடக்கு மாகாண அரசின் ஆயுட்காலம் 25ஆம் திகதியுடன் முடிவுக்கு வருகிறது.

வடக்கு மாகாண அரசின் ஆட்சிக்காலம் முடிவுக்கு வந்ததும் அடுத்த தேர்தல் நடந்து புதிய அரசு வடக்கு மாகாண சபையைப் பொறுப்பேற்கும்வரையில், வடக்கு மாகாண ஆளுநரின் அதிகாரத்தின் கீழ் வடக்கு மாகாண நிர்வாகம் வந்தாகும்.

ஆளுநரின் அதிகாரத்தின் கீழ் வடக்கு மாகாண சபை வரும்போது, வேலைவாய்ப்பு போன்ற விடயங்களில் பெரும்பான்மை இனத்தவர்களை நியமிக்கக்கூடிய ஏற்பாடுகள் இருப்பதாகவும் பொருளாதாரத் திட்டங்கள் மற்றும் குடியேற்றங்கள் போன்ற விடயத்தில் பெரும்பான்மை இனத்துக்கு முன்னுரிமை வழங்கப்படும் ஆபத்து உள்ளதாகவும் பரவலாகப் பேசப்படுகிறது.

இவ்வாறு பேசப்படுபவற்றின் உண்மைத் தன்மை என்பதற்கு அப்பால், தமிழ் மக்களின் மனங்களை வெல்லும் வகையில் வடக்கு மாகாண ஆளுநர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தினால், அது நிச்சயம் இந்த நாட்டில் இன நல்லுறவு வலுப்படுவதற்குப் பேருதவியாக அமையும்.

நவராத்திரி பெருவிழாவும் ஏடு தொடக்கலும்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் வீணா கானம்பதி ஸ்ரீ மஹா சரஸ்வதி அம்பாள் திருக்கோவிலின் நவராத்திரிப் பெருவிழா எதிர்வரும் 8ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதுடன் எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஏடு தொடக்கலும் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 6 மணிமுதல் விசேட வழிபாடுகளை தொடர்ந்து 9ஆம் திகதி மாலை 4 மணிக்கு கொடியேற்றம் இடம்பெறும்.

12,13,14ஆம் திகதிகளில் வாகனங்கள் மற்றும் வியாபார ஸ்தாபனங்களுக்காக பூஜை வழிபாடுகள் நடைபெறும்

15ஆம் திகதி சரஸ்வதி பூஜை ஆரம்பமாவதுடன் 16,17,18 ஆகிய தினங்களில் காலை முதல் வாத்தியக் கருவிகளுக்கான பூஜை வழிபாடும் நடைபெறவுள்ளது.

இதில் கலைஞர்கள், மாணவர்கள் தமது இசைகள, பாடல்களை ஆலயத்தில இசைத்து சமர்ப்பிக்கலாம்.

18ஆம் திகதி சரஸ்வதி பூஜையைத் தொடர்ந்து 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு ஏடு தொடக்கல் இடம்பெறும்.

முற்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ள முடியும் என குரு முதல்வர் சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள் அறிவித்துள்ளார்.

மேலும் இன்று 4ஆம் திகதி குரு மாற்றத்தினை முன்னிட்டு காலை 8 மணி முதல் குருசாந்தி வழிபாடும் மகாயாகமும் ஆலயத்தில் நடைபெறும் எனவும் அறிவித்துள்ளார். (இ-9)

மாவா பாக்கு வைத்திருந்த யுவதிக்கு ஒரு வருடம் கடுழியம்

(கொழும்பு)

போதை கலந்த மாவா பாக்கை வைத்திருந்த நற்பிட்டிமுனை யுவதிக்கு கல்முனை நீதவான் நீதிமன்றம் 10 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட ஒரு வருட கடுழியச் சிறைத்தண்டனையும் 10 ஆயிரம் ரூபாய அபராதமும் விதித்து தீர்ப்பளித்தது.

இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில் யுவதியின் இல்லத்தில் இருந்து 950 கிராம்மாவா பாக்கை கல்முனை பொலிஸார் கடந்த மாதம் கைப்பற்றியதுடன் யுவதியை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜராக்கினர்.

யுவதி குற்றத்தை ஒப்புக் கொண்ட நிலையிலேயே கல்முனை நீதவான் ஜ. என். ரிஸ்வான் இந்த தண்டனையை வழங்கினார்.(இ-7)

இலஞ்சம் பெற்ற ஏற்றுமதி, இறக்குமதி கட்டுப்பாட்டாளர் மீள விளக்கமறியலில்

இரண்டு இலட்சம் ரூபாய் பணத்தை இலஞ்சமாகப் பெறறுக் கொண்ட சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட இறக்கு மதி ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களத்தின் முன்னாள் இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் மஹகமகே காமினி மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மனு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, சந்தேகநபரை எதிர்வரும் 9 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்க கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பான விசாரணை தொடர்ந்தும் முனனெடுக்கப்பட்டுக் கொண்டிருபபதால் சந்தேகநபரின் விளக்கமறியலை நீடிக்க இலஞ்ச ஊழல் ஆணைக்குழு நீதிமன்றில் கோரிக்கை முன்வைத்தது.

சந்தேகநபரான மஹகமகே காமினியின்மகளுடைய சுகவீன நிலையை கருத்திற் கொண்டு அவருக்கு பிணை வழங்குமாறு சந்தேகநபர் சார்பான சட்டத்தரணி நீதிமன்றில் கோரிக்கை விடுத்தார்.

எவ்வாறாயினும் சந்தேக நபருக்கு பிணை வழங்குவதா? இல்லையா? என்பது தொடர்பான உத்தரவு அன்றைய தினம் வழங்கப்படும் என்று நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 10 வருடங்கள் பழைமையான இரு வாகனங்களை சட்ட ரீதியான முறையில் விடுவிப்பதற்கு பரிந்துரை செய்வதற்காக, நபர் ஒருவரிடம் இருந்து 2 இலட்சம் ரூபாய் பணம் இலஞ்சமாக பெற்றுக்கொண்ட குற்றத்திற்காகவே அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

முதியோருக்கு மதிப்பளித்தல்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடத்தும் முதியோரை மதிப்பளிக்கும் நிகழ்வு நாளை மறுதினம் 6ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரமத்தில் தலைவர், விரிவுரையாளர் அ.குமாரவேல் தலைமையில் நடைபெறும்.

இதில் அருளுரையை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் வழங்குவார்.

பிரதம விருந்தினராகயாழ். மாநகர முதல்வர் இ. ஆனல்ட், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாநகர சபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன், பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிறி ஆகியோர் கலந்து கொள்வர். (இ

ஏழரை லீற்றர் கசிப்புடன் நெல்லியடியில் இருவர் கைது

(கரணவாய்)

கசிப்பினை எடுத்துச்சென்ற இருவர் கைது செய்யப்பட்டதுடன் அவர்களிடமிருந்து ஏழரை லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு நெல்லியடி நகர்ப் பகுதியில் பொலிஸார் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது நிறுத்துமாறு சைகை காட்டிய போது தப்பிச் சென்ற மோட்டார் சைக்கிளை துரத்திச் சென்று மறித்த போது அவர்களிடம் கசிப்பு இருந்தமை தெரியவந்தது.

இதனையடுத்து அவர்கள் இருவரையும் கைது செய்த பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுவருகின்றனர்.(இ-7-60)

மகிந்தவின் அனுமதியில்லாது மைத்திரியுடன் பேசமாட்டேன் பந்துல எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடி தொடர்பில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெறும் விசேட கலந்துரையாடலில் கலந்து கொள்வதற்கு, ஜனாதிபதி தனக்கும் அழைப்பு விடுத்திருக்கிறாரெனத் தெரிவித்த ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன, எனினும் தான் அந்த விசேட கலந்துரையாடலைப் புறக்கணிப்பதாகவும் தெரிவித்தார்.

புஞ்சிபொரளையில்உள்ள வஜிராஷ்ரம பௌத்த மத்திய நிலையத்தில், நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் நாட்டின் பொருளாதார நெருக்கடி தொடர்பில் விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது. இதில் என்னைக் கலந்துகொள்ளுமாறு, ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் எரிக் பிரசன்ன வீரவர்தன, கடிதம் ஊடாக எனக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

எனினும், ஒன்றிணைந்த எதிரணியில் உள்ள, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட தலைவர்களின் அனுமதியில்லாது, நான் ஒருபோதும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் எந்தவிதமான உத்தியோகபூர்வ கலந்துரையாடல்களிலும் ஈடுபடப்போவதில்லை. ஆகவே, இந்தக் கலந்துரையாடலை நான் புறக்கணிக்கிறேன் எனத் தெரிவித்தார். (இ-7)

கேரளக் கஞ்சாவுடன் 6 மாணவர்கள் கைது

(பதுளை)

பதுளை நகரிலுள்ள பிரபல பாடசாலையொன்றில் உயர்தரத்தில் கல்வி பயிலும் ஐந்து மாணவர்கள் உள்ளிட்ட அப்பாடசாலையின் பழைய மாணவர் என அறுவர் கேரளக் கஞ்சாவுடன நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

17 முதல் 18 வயதுடைய பதுளை, ஹங்வெல்ல, சுமன திஸ்ஸகம, புவக்கொடமுல்ல மற்றும் சுவுநீதிகம பகுதிகளைச் சேர்ந்த அறுவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கேரளக் கஞ்சாவுடன் குறித்த மாணவர்கள் அறுவரும் பாடசாலை நிறைவடைந்த பின்னர் பாடசாலையை அண்மித்த பகுதியொன்றில் பாவனைக்காக சென்றிருந்த போதே, திடீரென அங்கு வந்த பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை கைதுசெய்த வேளையில் ஒவ்வொரு மாணவரிடமும் 2 கிராம் நிறையுடைய கேரளக் கஞ்சா காணப்பட்டதாக தெரிவித்த பொலிஸார், மொத்தம் 12 கிராம் நிறையுடைய கேரளக் கஞ்சா அவர்களிடமிருந்து மீட்கப்பட்டதாகவும் தெரிவித்தனர். (இ-7)

குரங்கால் பறிபோனது மூதாட்டியின் உயிர்

(மாத்தளை)

தென்னை மரத்திலிருந்த குரங்கு ஒன்று தேங்காயை பறிக்க முற்பட்ட நிலையில் குறித்த தேங்காய் பெண் ஒருவரின் தலையில் வீழ்ந்ததில் அவர் பரிதாபமாக உயிரிழந்துள்ள சம்பவமொன்று நேற்று மாத்தளையில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும தெரியவருவதாவது,

குறித்த பெண் தனது வீட்டு முற்றத்தில் இருக்கும் போது அருகில் இருந்த தென்னை மரத்தில் ஏறிய குரங்கு ஒன்று தேங்காய் ஒன்றை பறித்துள்ளது.

இந்நிலையில் குறித்த தேங்காய் கீழே இருந்த பெண்ணின் தலையில் வீழ்ந்துள்ளது. இதன் காரணமாக அவர் மரணமடைந்துள்ளார்.

மாத்தளை ஹ்லங்க முவ, வட்டகொடை என்ற இடத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. 73 வயதுடைய திலக்கா ரஞ்சனி என்ற வயோதிப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (இ-7)

தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டிகள் வடக்கு மாணவர்கள் பிரகாசிப்பு

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் கடந்த முதலாம் திகதி முதல் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

1 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்ற போட்டிகளில், 20 வயதுப்பிரிவு ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஏ.புவிதரன் 4.55 மீற்றர் உயரம் பாய்ந்து தங்கப் பதக்கம் பெற்றார். இரண்டாமிடத்தை அளவெட்டி அருணோதயக் கல்லூரியைச் சேர்ந்த ஜதுசன் பெற்றுக் கொண்டார். இவர் 4.45 மீற்றர் உயரம் பாய்ந்தார்.

இதில், 18 வயதுப்பிரிவு பெண்களுக்கான உயரம் பாய்தலில் பங்குபற்றிய தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த ச.ஹெரீனா 1.53 மீற்றர் உயரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கம் பெற்றார்.

2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்ற போட்டிகளில், 20 வயதுப்பிரிவு பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் வி.சாத்விகா 3 மீற்றர் உயரம் பாய்ந்து வர்ணச் சான்றிதழுடன் வெள்ளிப்பதக்கம் பெற்றார்.

12 வயதுப்பிரிவு பெண்களுக்கான நீளம் பாய்தலில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த அருணவி 4.53 மீற்றர் நீளம் பாய்ந்து வெண்கலப் பதக்கம் பெற்றார்.

18 வயதுப்பிரிவு ஆண்களுக்கான நீளம் பாய்தலில் மன்னார் கொண்டாச்சி ஜி.ரி.எம்.எஸ் பாடசாலையைச் சேர்ந்த கே.பி.ஜனுசன் பீரிஸ் 6.59 மீற்றர் நீளம் பாய்ந்து வெண்கலப்பதக்கம் பெற்றார்.

16 வயதுப்பிரிவு ஆண்களுக்கான தட்டெறிதலில் 'ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.மிதுன்ராஜ் 50.83 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளிப்பதக்கம் பெற்றார். (க-26)

பெனால்டி உதை வரையில் சென்ற ஆட்டம் இளவாலை யங்ஹென்றிஸ் இறுதியில்

அரியாலை சரஸ்வதி விளையாட்டுக்கழகம் தமது நூற்றாண்டு விழாவையொட்டி "வடக்கின் கில்லாடி யார்" என்னும் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் நடத்தி வருகின்றது.

வருடாவருடம் யாழின் கில்லா என நடத்தப்பட்டு வந்த இந்தச் சுற்றுப்போட்டியானது, இந்த வருடம் வடக்கின் கில்லாடியாக மாற்றப்பட்டு, வடமாகாணம் தழுவிய வகையில் மொத்தம் 32 அணிகள் இந்தச் சுற்றில் பங்குபற்றின.

இந்தச் சுற்றுப்போட்டியின் முதலாவது அரையிறுதியாட்டம் கடந்த 2 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது. இதில் இளவாலை யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து கிளிநொச்சி உருத்திரபுரம் அணி மோதியது.

முதற்பாதியாட்டத்தில் இரண்டு அணிகளும் தலா 2 கோல்களைப் பெற்றிருந்தன. இரண்டாவது பாதியாட்டத்தில் யங்ஹென்றிஸ் அணிக்கு கிடைத்த பெனால்டி வாய்ப்பு வீணடிக்கப்பட்டது. இரண்டாவது பாதியாட்டத்தில் மேலதிக கோல்கள் அடிக்கப்படவில்லை. ஆட்ட நேர முடிவில் இரண்டு அணிகளும் தலா 2 கோல்களைப் பெற்றிருந்தன.

வெற்றியாளரைத் தீர்மானிக்க சமநிலை தவிர்ப்பு உதை நடத்தப்பட்டது. இதில் இளவாலை யங்ஹென்றிஸ் அணி, 03:02 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்று, அரையிறுதிக்குள் நுழைந்தது. (க-26)

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் மாபெரும் உதைபந்தாட்டத் தொடர் ஆரம்பம்

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 5வது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் மின்னொளியிலான வடமாகாண ரீதியில் தெரிவு செய்யபட்ட அணிகளிடையேயான உதைபந்தாட்ட போட்டியின் ஆரம்ப நிகழ்வுகள் நேற்று முன்தினம் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் இடம்பெற்றது.

ஆரம்ப நிகழ்வின் சிறப்பு விருந்தினராக வலி.தென்மேற்கு பிரதேச சபையின் ஜெபநேசன் ,வலிகாமம் உதைபந்தாட லீக் தலைவர் யுகராஜ், இளவாலை பொலிஸ் பொறுப்பதிகாரி டி.எஸ். சேனநாயக்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.

முதலாவது ஆட்டத்தில் விளான் அன்ரனீஸை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சஸ் மோதியது. முதல் பாதிவரை 1:1 என்ற நிலையில் இருந்த போட்டியை றேஞ்சஸ் 2வது பாதியில் மேலும் 3 கோல்களை அடித்து 4:1 என்றவகையில் வெற்றியை தமதாக்கியது. 2 ஆவது போட்டியில் அராலி அண்ணா அணியை மனோகரா அணி 2:1 என்ற கோல் கணக்கில் வென்றது. இன்று இரவு 7 மணிக்கு நடைபெறும் போட்டியில் நவாலி பீற்றர்ஸ் அணியை எதிர்த்து சென் லூப்ஸ் அணி மோதவுள்ளதுடன் இரவு 8 மணிக்கு யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து பொற்பதி. சென்.பீற்றர்ஸ் அணியும் மோதும். (க)

அச்செழு வளர்மதி விளையாட்டுக் கழகத்திற்கு கரப்பந்தாட்டத்திடல் அமைப்பதற்காக வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபனால் ரூபா 50000 நிதி கோப்பாய் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது. இதன்போது உதவிப் பிரதேச செயலர் மற்றும் வலி.கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் ஆகியோர் கலந்துகொண்டனர். (க)

அடுத்த சுற்றிற்கு முன்னேறியது கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 5 ஆவது ஆண்டு நிறைவையொட்டி, வட மாகாண ரீதியில் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்று 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் நடத்தப்பட்டு வருகின்றது.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில், நொக்வுட் முறையில் நடைபெறும் இந்தச் சுற்றுப்போட்டியில் மொத்தமாக 24 கால்பந்தாட்ட அணிகள் பங்குபற்றுகின்றன.

கடந்த 2ஆம் திகதி நடைபெற்ற ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து பெரிய விளான் அன்ரனீஸ் அணி மோதியது. இதில் றேஞ்சர்ஸ் அணி, 05:01 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது. (க-26)

அகில இலங்கை தபால் ஊழியர்களுக்கான கிரிக்கெட் மகுடம் சூடியது வடக்கு மாகாண அணி

அகில இலங்கை ரீதியில் இடம் பெற்ற தபால் ஊழியர்களுக்கிடையிலான கிரிக்கெட் மென்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்திய யாழ்.மாவட்ட தபால் ஊழியர்கள் அணி வெற்றி பெற்றது.

இப்போட்டியில் கலந்துகொண்டு வெற்றியீட்டிய வீரர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் யாழ். பிரதான தபால் நிலையத்தில் இடம் பெற்றது.

நுவெரெலியாவில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்திய யாழ்.மாவட்ட தபால் ஊழியர்கள் அணியும் கண்டி தபால் ஊழியர்கள் அணியும் போட்டியிட்டன.

இப்போட்டியில் ஆரம்ப துடுப்பாட்டத்தினை மேற்கொண்ட கண்டி தபால் நிலைய அணி 5 பந்துப் பரிமாற்றங்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 69 ஓட்டங்களை பெற்றது.

பதிலுக்கு துடுப் பெடுத்தாடிய யாழ்.மாவட்ட அணி 4 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 69 ஓட்டங்களை பெற்று அபார வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக யாழ்.மாவட்ட அணியின் வீரர் ரி.கோகுலன் தெரிவு செய்யப்பட்டார்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண தபால் திணைக்கள அதிபர் மதுமதி வசந்தகுமார், யாழ்.பிரதான தபால் நிலைய பிரதம தபால் அதிபர் விஜயகுமார் மற்றும் தபால் ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க-9)

யுத்தத்தில் மாய்...

இதை தெரிவித்துள்ளார். தொடர்ந்து தெரிவிக்கையில்.

2009 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் திகதி நந்திக்கடல் தெற்கு பகுதியில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்திற்குள் இருந்து தமது பிரதேசத்திற்குள் எங்களை வரும் படி சைகைமூலம் காட்டினார்கள்.

அப்பொழுது நாங்கள் நின்றுகொண்டிருந்த பகுதி விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடைப்பட்டபகுதி.

இந்த நிலையில் ஏற்கெனவே படுகாய மடைந்திருந்த எனது கணவரையும் இளைய மகனையும் அழைத்துக்கொண்டு எனது மூத்தமகனுடன் நந்திக்கடலூடாக இராணுவக்கட்டுப்பாட்டு பிரதேசத்திற்குள் நுழைந்து கொண்டிருந்தோம்.

அப்பொழுது வட்டுவாகல் பகுதியில் இருந்தும் நாங்கள் சென்று கொண்டிருந்த பகுதியில் இருந்தும் யுத்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது எனது மூத்த மகனுக்கு தலையில் துப்பாக்கிரவை பாய்ந்தது எனது இளையமகனும் மீண்டும் படுகாயமடைந்தார். இருவரும் நந்திக்கடலில் விழுந்தனர்.

எனது கணவரும் படுகாயமடைந்திருந்தால் என்னால் மூத்தமகனை மட்டும் கரை சேர்க்க முடிந்தது. ஆனாலும் மூத்த மகனின் தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்ததால் அதிகமான குருதிபெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்தது.

இந்த நிலையில் மூத்தமகனை தொடர்ந்து தூக்கி செல்ல முடியாதவாறு தாக்குதல் நடைபெற்றுக்கொண்டிருந்தது.

என் ஆண் பிள்ளைகள் இருவரும் இறந்து விட்டார்கள்? ஆனாலும் நானும் படுகாயமடைந்த எனது கணவரும் அவ்விடத்தில் இருந்து இராணுவக்கட்டுப்பாட்டு பிரதேசத்திற்குள் செல்லமுடியாதவாறு தவித்தோம். அப்பொழுது இராணுவத்தினர் எம்மை மீட்டனர்.

எமது ஆண் பிள்ளைகள் இருவரும் இறந்துவிட்டார்கள் என்ற கவலையில் நாம் வாழ்ந்து கொண்டிருந்தோம்.

பின்னர் பல நாட்கள் சென்ற நிலையில் எனது மூத்தமகனை இராணுவத்தினர் உயிரோடு ஒப்படைத்துள்ளனர்.

ஆனாலும் உயிரோடு திரும்பிய மகன் தற்பொழுதுவரை உடல் நலக்குறைவாகவே வாழ்ந்து வருகின்றார் எனினும் இறந்ததாக எண்ணிய எனது மகன் திரும்பி வந்ததில் தாம் மகிழ்ச்சி என்று தெரிவித்துள்ளார். (ம-281)

கேப்பாப்பிலவில்...

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

நேற்று பிற்பகல் 2 மணியளவில் கேப்பாப்பிலவுக் குடியிருப்பு பகுதியில் காணியினை உழவு இயந்திரத்தில் உழவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது காணியில் இருந்த வெடிபொருள் ஒன்று வெடித்ததில் கேப்பாப்பிலவு பகுதியை சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்து முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் காயமடைந்தவர் கேப்பாப்பிலவு பகுதியை சேர்ந்த 37 அகவையுடைய 3 பிள்ளைகளின் தந்தையான அரியராசா ஜெகன் ஆவார். (ம-281)

புலமைப் பரிசில்...

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை, கடந்த ஓகஸ்ட் மாதம் ஐந்தாம் திகதி நடைபெற்றது.

குறித்த பரீட்சையில், மூன்று இலட்சத்து ஐம்பத்தையாயிரத்து முன்னூற்று இருபத்தாறு மாணவர்கள் தோற்றியிருந்தனர்.

மூவாயிரத்து ஐம்பது பரீட்சை நிலையங்களில் குறித்த பரீட்சை இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

நம்பியிருந்த எம்மை...

9 ஆண்டு காலமாக சிறைச்சாலைக்குள் வாடும் தம்மை குறுகியகால புனர்வாழ்வு வழங்கியாவது விடுவிக்குமாறு கோரி தமிழ் அரசியல் கைதிகள் கடந்த மாதம் 14ஆம் திகதியில் இருந்து உணவு தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். இந்த கைதிகளுக்கு ஆதரவாக கொழும்பு மகசின் சிறைச்சாலையில் உள்ள 42 தமிழ் அரசியல் கைதிகளும் தொடர் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இந்த நிலையில் குறித்த கைதிகளின் விடுதலை தொடர்பாக எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன், தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.சுமந்திரன் ஆகியோர் நேற்று முன்தினம் சட்டமா அதிபரை சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

குறித்த கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட முடிவுகள் எவையும் தமக்கு சாதகமாக அமையவில்லை என்றும், எமது ஒட்டு மொத்த கோரிக்கையான புனர்வாழ்வின் பின் விடுதலை என்ற விடயத்தை பற்றி எமது பிரதிநிதிகளாக சென்றவர்கள் பேசவில்லை. இதனால் ஏமாற்றமும் விரக்தியும் அடைந்துள்ளோம்.

எமக்கு சார்பாக எமது கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு பேசுவார்கள் என நம்பியிருந்தோம். ஆனால் சட்டமா அதிபர் தெரிவித்த கருத்தை மொழி பெயர்ப்பாளர் போல் எமக்கு தெரிவிக்கிறார்கள். இதில் என்ன பயன், எமக்கு விடுதலை அளிப்பதில் இவர்களுக்கு ஈடுபாடு இல்லை என்றே தெரிகிறது என தெரிவித்துள்ளார்.

கண்துடைப்பு நடவடிக்கைகளுக்காக எமது போராட்டத்தை நிறுத்த மாட்டோம் என்றும் தமது போராட்டம் தொடரும் என வும் அறிவித்துள்ளார்கள். (ம-9)

பொலிஸாருக்கோ...

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு உடன்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாட்டில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதவிர நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவை சந்திப்பின் போது பொலிஸ்மா அதிபர் ஜனாதிபதியின் விமர்சனத்துக்கு உள்ளானதாக கூறப்படும் செய்தி தொடர்பிலும் அமைச்சர் கருத்துக்களை தெரிவித்தார்.

இலங்கை பொலிஸ் மறுசீரமைக்கப்பட வேண்டும் என்று அவர் கூறினார். (ம)

வலுவடைந்த நிலையில்...

கும் பரவி அந்த எண்ணிக்கை தற்போது 59ஆக அதிகரித்துள்ளது.

அதன்படி, கண்டி போகம்பர சிறைச்சாலையில் ஆறு கைதிகளும், கொழும்பு மகசின் சிறைச்சாலையில் 43 கைதிகளும் நேற்று புதன்கிழமை) தமது தொடர் உணவு தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை சுமந்திரன் கொலை முயற்சி சந்தேகநபர்களும் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தம்மை விடுதலை செய்யுமாறு அல்லது குறுகிய கால புனர்வாழ்வின் பின்னர் விடுவிக்குமாறு வலியுறுத்தி அநுராதபுரம் சிறையிலுள்ள அரசியல் கைதிகள் எட்டு பேர் கடந்த மாதம் 14ஆம் திகதி தமது உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர். பின்னர் குறித்த போராட்டத்தில் மேலும் இருவர் இணைந்து கொண்டனர்.

இதேவேளை, அநுராதபுரம் சிறையில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக பல்வேறு தரப்பினரும் ஆர்ப்பாட்டங்களையும், போராட்டங்களையும் முன்னெடுத்திருந்தனர்.

குறித்த அரசியல் கைதிகளின் போராட்டத்திற்கு ஆதரவளிக்கும் வகையில் மகசின் சிறைச்சாலை கைதிகள் ஏற்கெனவே ஒருநாள அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

விக்னேஸ்வரனுக்கான...

என அமைச்சர் ராஜித சேனாரத்ன நேற்று புதன்கிழமை இதனைத் தெரிவித்துள்ளார்.

அனைவரது வாகன அனுமதிப் பத்திரங்களும் இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில், ஒருவருக்கு மாத்திரம் அதனை வழங்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்காரணமாக சி.வி.விக்னேஸ்வரனின அமைச்சரவைப் பத்திரம் நிராகரிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் எல்லா வட மாகாண சபை அமைச்சர்களுக்கும் கொடுக்கப்பட்டது அதேவாகன இறக்குமதி பெமிட்தான் எனக்கும் தரப்பட்டது. அதற்கு நான் விண்ணப்பித்திருந்தேன். அதன் பிறகுதான் வட மாகாண முதலமைச்சருக்கு கூடிய தொகைக்கு வாகனம் பெற்றுக்கொள்ள முடியும் என்று கூறினார்கள். கூடிய தொகை என்பதால் தாருங்கள் என்று நான் கூறினேன். அதேபோல் எல்லா மாகாண சபை முதலமைச்சருக்கும் கொடுத்திருப்பதால் அது தாங்கள் செய்த பிழை என்றும் தெரிவிக்கப்பட்டது. வடமாகாண முதலமைச்சருக்கு மட்டும் கொடுக்காமல் விட்டிருப்பது பிழை என்று நேற்றுமுன்தினம் பைசர் முஸ்தப்பா இது சம்பந்தமாக அமைச்சரவையில் பேசியிருந்தார்.

வாகனங்கள் கொள்வனவுக்கு இப்பொழுது 6 மாதங்களுக்கு தடை போட்டிருப்பதால் தாங்கள் இடம்கொடுக்க முடியாது என்று கூறப்பட்டது. 6 மாதத்திற்குப் பிறகும் அந்த வாகனப் பத்திரங்களை பாவிக்கலாம். ஆகவே நீங்கள் வாகனப் பத்திரத்தைத் தாருங்கள் என்றுதான் நான் கேட்டிருக்கி றனே தவிர, உடனே நீங்கள் வாகனங்களைக் கொண்டு வரவேண்டும் என்று நாங்கள் கேட்கவில்லை என்று விக்னேஸ்வரன் தெரிவித்தார். (ம)

முறைப்பாட்டில்...

யாழ்ப்பாணம் பெரும் குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி உட்பட 17 பொலிஸார் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதுடன் ஒருவர் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

யாழ்.நகர் பகுதியில் உள்ள கடை ஒன்றில் கடந்த மாதம் 24 ஆம் திகதி 10 லட்சத்து 90 ஆயிரம் ரூபாய் திருடப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக வியாபார நிலைய உரிமையாளர் யாழ்.பொலிஸ் நிலையத்தில் உள்ள பெரும் குற்றவியல் பிரிவில் முறைப்பாடு செய்ய சென்றுள்ளார். அங்கு இருந்த பொலிஸாரிடம் குறித்த விடயத்தை தெரிவித்துள்ளார். பொலிஸார் தனது குறிப்பு புத்தகத்தில் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார். அன்றைய தினம் பதிவேட்டில் முறைப்பாட்டை ஒட்டாமல் 26ஆம் திகதி பதிவேட்டில் ஒட்டியுள்ளார்.

இந்த நிலையில் இதுவரை நாளாக பொலிஸார் நடவடிக்கை எதுவும் எடுக்காத காரணத்தினால் குறித்த விடயம் தொடர்பாக வடமாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபரிடம் உரிமையாளர் முறையிட்டுள்ளார்.

அதனடிப்படையில் குறித்த விடயம் தொடர்பாக விசாரணை குழு ஒன்று அமைத்து மேற்படி விடயம் தொடர்பாக விசாரணை செய்யப்பட்டது. அதன் போது பல பிரச்சினைகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

எனவே உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பெரும் குற்ற பிரிவில் உள்ள அனைவரும் இடமாற்றப்பட்டுள்ளார்கள். ஒருவர் இடைநிறுத்தப்பட்டுள்ளார். (ம-9)

அரிசிக்கு நிர்ணய...

தின் தலைமை அதிகாரியுமான துமிந்த பிரியதர்ஷன இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, ஒரு கிலோகிராம் நாட்டு அரிசிக்கான நிர்ணய விலையாக 88 ரூபாவும், ஒரு கிலோகிராம் சம்பா அரிசிக்கான விலையாக 108 ரூபாவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு விலைகளில் சந்தையில் விற்பனை செய்யப்படும் அனைத்து வகையான சம்பா அரிசிகளுக்கும் இந்த நிர்ணய விலை அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், புதிய நிர்ணய விலை ஒரு வாரத்திற்குள் அமுல்படுத்தப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம)

வடக்கில் காணி விடுவிக்க...

செயலணியின் மூன்றாவது கூட்டம் நேற்று ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்றது.

இது தொடர்பில் ஜனாதிபதி செயலணியின செயலாளர் சிவஞானசோதி கருத்துத் தெரிவிக்கையில்,

காணிகளை விடுவிப்பது தொடர்பில் குறிப்பாக பாடசாலைகளை விடுவிப்பதற்கும் அதேபோல காணிகளை உரியவர்களுக்கு வழங்குவது தொடர்பாகவும் இந்த வருடம் டிசம்பர் மாதத்திற்கு முன்பு காணிகள் வழங்கப்பட வேண்டியவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானமும் அதை வடக்கிலே உள்ள ஆளுநர்கள் கிழக்கிலே உள்ள ஆளுநர் தலைமையில் குழு அமைக்கப்பட்டு அந்தக் குழுவிலே பொருத்தமான அலுவலர்கள் அதிலே உள்வாங்கப்பட்டு அரச அலுவலர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இராணுவம் ஆகிய எல்லோரும் ஒன்று சேர்ந்து அவர்கள் இணக்கப்பாட்டின் அடிப்படையில் தீர்மானம் எடுக்கப்பட்டு காணிகளையும் பாடசாலைகளையும் மீள வழங்குவது தொடர்பாக வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. (ம)

கைதிகளின் விடுதலை...

கப்படவில்லை என்பதால் தமது உண்ணாவிரதப் போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என அநுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகள் அறிவித்துள்ளனர். (ம)

கூட்டமைப்புக்கும்...

பிட்டார்.

நேற்று புதன்கிழமை அலரி மாளிகையில் இந்த சந்திப்பு ஏற்பாடாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

முல்லைத்தீவு குழுமுனை...

திணைக்கள உத்தியோகத்தர்களுடன் நேற்று நேரில் சென்று பார்வையிட்டனர்.

குருந்தூர் மலையில் புத்தர் சிலை நிறுவும் பௌத்த பிக்குகளின் முயற்சி உள்ளூர் மக்களால் முறியடிக்கப்பட்டு நீதிமன்றம் வரை விவகாரம் சென்றுள்ள நிலையில் இனவாதக் கட்சியான தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கு சென்றமை உள்ளூர் தமிழ் மக்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

தேசிய சுதந்திர முன்னணியின் மூத்த உறுப்பினர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களுமான பத்ம உதயசாந்த, ஜயந்த சமரவீர ஆகியோரும் தேசிய சுதந்திர முன்னணியின் ஊடக பேச்சாளரான மொஹம்மத் முஸம்மில் மற்றும் தொல்பொருள் திணைக்களத்தினை சேர்ந்த அதிகாரிகளும் குருந்தூர் மலைக்கும் வெடுக்குநாறி மலைக்கும் இவ்வாறு வருகை தந்தனர்.

விமல் வீரவன்சவின் கட்சியினரின் வருகைக்கான நோக்கத்தை அறிவதற்காக அந்த மலைகளுக்கு தமிழ் மக்களும் சென்றிருந்தனர். (ம-281)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

நிறஞ்சன் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளி நொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, உடுப்பிட்டி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய பகுதி களில் (5884)

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக் கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: **நிறஞ்சன் நகைமாடம்** - சந்தை வீதி, உடுப்பிட்டி. **0763836129**

விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

DELIVERY IN 3-5 DAYS

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

0768226240

V2 TRAVELS

Certificate in Computer Networking



Duration : 2 Months
Next Batch : 13-10-2018
Register for Networking and Get Free Hardware Course

ICS EDUCATION 77, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (பெருமாள்கோவில் அருகாமையில்) 076-7013060 ,021-7306000

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள்

வடக்கின் 1வது & ஒரேயொரு வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

ஐந்து நட்சத்திர விருதுவென்ற ஒரே நிறுவனம்

Emerald Isle Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
License No. 2268

ஆரம்பக் கட்டணம் எதுவும் இல்லை! பதிவுக் கட்டணம் 200/- மட்டுமே

இப்போது யாழ்ப்பாணத்தில்

மத்திய கிழக்கு - ஐரோப்பா - மேலைத்தேய நாடுகள்

077 00 38 215 ☎ 021 222 00 11 (4-4018)

221-1/1. மின்சார நிலைய வீதி. (2ம் ஒழுங்கை). யாழ்ப்பாணம்
www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk

ஊடகத்துறைச் சான்றிதழ் பயிற்சிநெறி

இலங்கை ஊடகவியல் கல்லூரியின் சான்றிதழ்

- வெகுசன ஊடகத்துறையில் பிரகாசிக்க
- வானொலி, தொலைக்காட்சியில் தொகுப்பாளராக அறிவிப்பாளராக வலம் வர
- ஊடகவியலாளராக வலம் வர
- குறும்பட இயக்குனராவதற்கு
- நவீன ஊடகத்துறையில் மிளிர்வதற்கு

வீடியோ, ஓடியோ எடிட்டிங், டிசைன் & லேஅவுட், வீடியோ, டிஜிட்டல் கமராக்களை நீங்களே கையாளலாம்.

- ஆங்கிலம், சிங்களம் கற்கலாம்
- 100% தொழில்சார் களப்பணிப் பயிற்சிகள்

விரிவுரைகள், பயிற்சிகள்: வார, வார இறுதி நாட்களில்

விண்ணப்ப முடிவுத் திகதி 10-10-2018

அனுமதிகளுக்கு முந்துங்கள்

info@sicj.lk
jaffnamediastudies27@gmail.com

MRI SRI LANKA COLLEGE OF JOURNALISM
Media and Research Institute Jaffna

27, புகையிரத நிலைய வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம் தொலைபேசி: 077 488 9228

96, கிருல வீதி, கொழும்பு 05 தொலைபேசி: 071 764 0015

(C-4040)

ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்

DMI COMPUTER EDUCATION

DIPLOMA IN ENGLISH Spoken English

ஆங்கிலப் பேச்சுக்கு உத்தரவாதம்
Reading Writing Speaking Listening

October மாத புதிய பிரிவுகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்	நெல்லியடி	சாவகச்சேரி	சுன்னாகம்
Mon,Wed,Fri 8:00 a.m	Tue, Thu 3.30 p.m.	Tue, Thu 08.30 a.m.	Mon,Wed,Fri 11:30 a.m
Mon,Wed,Fri 3:30 p.m	Sat, Sun 3:30 p.m.	Tue, Thu 03.30 p.m.	சண்டிலிப்பாய் Mon,Wed,Fri 1:30 p.m
Sat, Sun 3.30 p.m.			கிளிநொச்சி Sat, Sun 10.30 a.m

DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்.

IELTS •Unique Test Tips •Latest course Materials

IELTS Life Skills (A1,B1) திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழு (TVEC) ஆலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம். (Reg No. P25/0056)

DMI COMPUTER EDUCATION

No.113, கன்னாதிட்டி வீதி, (வைன் ஹோம் அருகாமை) யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403
M.M.V.வீதி நெல்லியடி Tel.: 021-226 2470
No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் சாவகச்சேரி Tel.: 021-227 0775
No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் சுன்னாகம் Tel.: 021-224 1970
சீரணிச் சந்தி சண்டிலிப்பாய் Tel.: 021 225 6665
No.19,A9 வீதி, ஆனந்தபுரம் கிளிநொச்சி Tel.: 021-228 5655

அந்தியேட்டி, சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர் கணபதிப்பிள்ளை அருணகிரிநாதன் (கற்கண்டு)

தோற்றம் 15 04 1948

மறைவு 05 09 2018

கடந்த 05.09.2018 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர் **அமரர் கணபதிப்பிள்ளை அருணகிரிநாதன்** அவர்களது சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக்கிரியைகள் நாளை 05.10.2018 வெள்ளிக்கிழமை காலை 6.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், சபிண்டீகரண நிகழ்வு மு.ப. 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத் தருணத்தில் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொண்டு அன்னாரது ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மற்றும் எமது குடும்பத்தலைவர் **அமரர் கணபதிப்பிள்ளை அருணகிரிநாதன்** அவர்களின் மரணச்செய்தி கேட்டு வெளிநாடுகளிலும் உள்நாடுகளிலும் இருந்து முகநூல், தொலைபேசி, குறுந்தகவல்கள், மின்னஞ்சல், துண்டுப் பிரசுரம், பதாகை வாயிலாகவும், மலர் வளையம், மலர்மாலையிட்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீரஞ்சலி பிரசுரங்களை வழங்கியோருக்கும் மேலும் இறுதி அஞ்சலியில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

குறிப்பு : தயவுகூர்ந்து இவ் அழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வேம்படி, வல்வெட்டித்துறை.
T.P.No : 075 636 3528

தகவல் : குடும்பத்தினர்

(C-4038)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.10.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.